
முரசொலி

பொங்கல் மலர்- 19

நூ3
விமலர்
277



சிரியர்:
ாறன் எம்.ஏ., எம்.பி..

விலை ரூ

R. நடராஜன்

பொங்கல் வாழ்த்துக்கள்!



ஸ்ரீ வாசவி & கோ

நகை மற்றும் தங்க வியாபாரிகள்

270, பெரியகடை வீதி.

கோயமுத்தூர்-641001

தொலை பேசி: 23588

பொங்கல் வாழ்த்துக்கள்!



SHANMUGHA THEATRE

(Lessee : S. B. DHANDAPANI)


COIMBATORE - 641002.

Phone : OFFICE : 33226
RESI : 33599

எமது இதயம் கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்

GRAMS : TRAWLWINCH

Phone : 22899



SRI VENKATESWARA
COTTAGE INDUSTRIES

MFRS. OF:

Trawler Winches

Power Take off Units


Marine Products


Gears

251, Thadagam Road :: G. C. T (P. O)
Coimbatore - 641013

தயாரிப்பாளர்கள்:

32' 38' பைபர் மற்றும் மர மீன்பிடி படகுகளுக்கான 'வின்ச்'கள், ரெட்டார் பிட்டிங்குகள், பவர் டேக் ஆஃப் யூனிட்டுகள் தயாரிப்பவர்கள்.


தாய்த்திரு நாட்டின் 'தலைவிதி' மாற்றிய
தத்துவ தீபம்! தமிழினச் சூரியன்!




மொழியார் வழியில் பகுத்தறி வுலகை
படைத்துப் புகுக்கிய அறிஞன் இமயம்
புத்தனைப் போல அன்பெனும் நெறியில்
நித்தம் அரசியல் நிகழ்த்திய மேதை
கோலத் தமிழால் கொள்கை வலியால்
ஞாலம் வென்ற ஞானப் பிழம்பு!

சூளுரைத்தவள்!

நலவர் கலைஞர்



துள்ளி வரும் வேல் கொண்டும் - ஆவேசத்தை
அள்ளி வரும் வாள் கொண்டும்
பள்ளி செல்லாப் பருவத்து இளங்கொழுந்தும்
கிள்ளி எறிவேன் பகையை என்று
கிளர்ந்தெழுந்த காலம் அது - தமிழர்க்குத்
தங்கமென வாய்த்த காலம் - புலவர் பலர்
சங்கம் வளர்த்த காலம்! வீரர்
பொங்கும் புலியெனப் போர்க்களம் சென்றனர்
மங்கல மங்கையர் அவரை வாழ்த்தியே நின்றனர்.
காற்றடிக்கும் போதும் - அதில்
தமிழ் வீரம் வந்து மோதும்! கடலின்
அலை உயர்ந்து கிளம்பும் - அதில் தமிழன்
நிலை உயர்ந்து விளங்கும்!
அகிலின் புகை மணக்கும் - அதிலும்
தமிழின் புகழ் மணக்கும்.
முகிலிடை எழில் மதி தோன்றும் - அதில்
முத்தமிழ்க் காவிய நிதி தோன்றும்!
அன்றந்தப் பெருநிலத்தை ஆண்டிருந்த
அசோக மன்னன் கூட தன்
ஆட்சிக்கு உட்படா தோர்
ஆற்றல் மிகு தென்புலத்தார் என்று சொன்னான்.
தென்னகத்துத் திண்தோள் இனத்தாரில்
தீரம் நிறை கோசர் எனும் ஓர் பிரிவு!
வீரம் விளைக்கின்ற திறன் படைத்தோர்.
தூய்மை சேர் வாய்மைக்குப் பேர் பெற்றோர்...
துளுநாடு நீங்கிக் கீழ்க் கடல் வரையில்
அலைந்து திரிந்த போக்கினை நிறுத்தி
''நியமம்'' ''செல்லூர்''ப் பகுதியிலே நிலைத்ததாய்
வரலாறு!




"செல்லூர்க் குஞ்ஞ அது
பெருங்கடல் முழக்கிற்றுகி, யாணர்
இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கடுங்கண் கோசர் நியமம்"


அகநானூறு இலக்கியம் அறிவிக்கும் செய்தி இது!
'அன்னி' யென்றும் 'மிஞிலி' யென்றும் அகப்பாட்டு;
அடலேறுத் தமிழ் வீரர் இருவரை அறிமுகம்
செய்யும்.

இருவீரர் பெயர் இணைத்து இசையவள் ஒரு
தமிழ் மகள்
புருவத்தை விழியைப் போர்க் கருவியாக்கிக்
காணுயரை வீழ்த்துகின்ற
பருவத்தாள் எனினும் பண்புடைய திருக் குமரி!
தமுவத்தான் பலர் துடித்தார் -கோசர் சிலர் அவர்
தந்தையிடம் பெண் கேட்டார், மறுத்துவிட்டார்.
'அன்னி மிஞிலி' எனும் அழகு நங்கை
அமர்க்களத்தில் உயிர்நீத்த அன்னி யெனும்
வீரன்போல்

அனல் உமிழும் கற்புடையாள்!
'ஆய் எயினன்' எனும் வீரனை வென்று வீழ்த்தி
நன்னன து ஊரினையும் தன தாக்கிக் கொண்ட
'மிஞிலி' எனும் வீரனைப்போல் உறுதி மிக்காள்!
''நிலவுச் சித்திரம் போல் - நீரில்
உலவு நீள்விழிக் கெண்டை போல்-
குலவிடும் கிள்ளைப் பெண்ணுள் - நற்
கலவிக்கு ஏற்ற கண்ணுள்-''
என நினைத்து இளித்து வந்த சில கோசர்களை
என்ன நினைத்தாய் என்மகளை எனக்கேட்டு
கன்னலடா என் செல்வி அதைக் கடுங்குரங்கின்
கையில் தரச் சம்மதியேன்! அவள்
எண்ணமெலாம் அழுந்தூரான் மீது அறியீரோ?
திதியன் எனும் அவ்வூர்க் காவலனே அவளுக்கும்
காவலனும்!

அடுத்தொரு முறை வருவது கூடாது - நான்
எடுத்துச் சொன்னதைப் புரிந்து கொண்டு
நடந்திடுக உடனே - என்றார்!
வாய்மை நிறைக் கோசரிலும் வன்னெஞ்சம்
கொண்டோர் சிலர்
வாழ்ந்திட்டார் என்பது தான் வரலாறு! அவர்
வகுத்திட்டார் ஒரு திட்டம் வஞ்சியினைக் கைப்பற்ற!
பயற்றம் பயிர் விளையும் பாங்கான நிலங்கள் பல
நியமத்தில் நிலைத்திட்ட கோசர்க்கு
உரிமைச் சொத்து!
பசுவொன்றே அன்னிமிஞிலியின் அன்பான
குடும்பச் சொத்து!
பயங்கரத் திட்டத்தால் அப்பசுவை விரட்டி
யடித்துத் - தங்கள்
பயற்றம் பயிர்க்காட்டில் மேயவிட்டார் சில கோசர்!
பசித்திருந்த பசுவுக்குப் பயிர்க்காட்டு
மேய்ச்சலென்றுல்


பாய்ந்து சென்று தின்னுமல்
பயந்து கொண்டா ஓடிவிடும்?
பாட்டாளி வர்க்கத்தின் உழைப்பை யெல்லாம்
கூட்டாகச் சேர்த்துத் தின்று உப்பு கின்ற
இந்நாட்டு முதலாளி வர்க்கத்தின் தொப்பையைப்
-போல்
இனியில்லே இடமென்ற அளவுக்கு உப்பிய து
அந்தப் பசுவின் வயிறு!
கனியில்லே என்று சொன்னக் கிழவன து
கண்ணில்லே என ஆக்கிவிட்டால் - பின்னர்
துணையில்லே தோகைக்கு! எல்லோரும் அந்த
இணையில்லாப் பேரழகை பகிர்ந்து கொள்வோம்
இப்படித் திட்டமிட்ட இழி குணத்தார்
செப்படி வித்தை காட்டிச் செயல்புரிந்தார்.
அன்னி மிஞ லியின் அப்பனைக் கூண்டிலேற்றி
அன்றந்தப் பயற்றங்காட்டில் பசுமேய்ந்த
கதையைச சொன்னர்.
ஊர்மன்றக் கோசர்களும் உண்மை என்ன
உரைப்பீர் என்ருர்!
கார்கொண்ட வானம்போல் முகம் கறுத்து
-அக் கிழவர்:



''யார் கண்டது என் பசு மேய்ந்ததை?'' என
நான் கேட்க மாட்டேன்;
பார் எதிர்ப்பினும் பொய் சொல்லாப் பரம்பரை
நான்
பயற்றம் பயிரை என் பசு மேய்ந்தது உண்மையே
என்றார்.

குற்றத்தை ஒத்துக் கொண்டான்-அதனால்
குத்திப் பெயர்த்திடுக அவன் கண்ணை யென்று
கோசர்களின் மன்றத்தில் தீர்ப்புச் சொன்னார்.
அடுத்த கணம் அன்னி மிஞ்சிலியின் தந்தையை
இழுத்துச் சென்றார்.

பழுத்த கிழம் - பாவம்; அவர் கண் இரண்டும்
பெயர்த்துச் சென்றார்.

பார்வையினை இழந்தீரோ அப்பா நீங்கள்
பழிவாங்காமல் விடமாட்டேன் பாவிகளை யென்று
போர் முரசு ஒலி யெழுப்பி மகள் அழுதாள்!
கண்ணை அழித்துவிட்டு உன்னைக் களவாட
எண்ணி விட்டார்! கற்பெனும் வாளேந்திய என்
பெண்ணை நெருங்கிட எவனுக்குத் துணிவுண்டு.
தந்தை பேசி முடிப்பதற்குள்
தணலில் நின்றவள் பதில் சொன்னாள்.
உயிர் போன்ற தந்தையினைக் குருடாக
ஆக்கியவர் தம்

உயிர் போகுமட்டும் - நான்
உண் கலத்தில் உண்ணமாட்டேன்.
உடை மாற்றம் செய்ய மாட்டேன்.
பழிவாங்கித் தீரும்வரை பசி தூக்கம்
எதுவுமில்லை!

பகை முடிப்பேன்! பார்வையிழந்த தந்தைக்குப்
பலி கொடுப்பேன் எதிரிகளை!
அன்னி மிஞ்சிலியின் சூளுரை--அடுத்த நாளே
அமுந்தூர்த் திதியனுக்கு எட்டியது.
கன்னியவளுக்கு உற்ற துயர் கேள்விப்பட்டுக்
கவலை கொண்டான்--அவளைக் காணத் துடித்தான்.
செவியில் செய்தி நுழைந்ததைத் தொடர்ந்து
செந்தீப் பிழம்பென தன்னெதிர் நின்ற
''அன்னி''யைக் கண்டான்.

கண்ணுக் கினியவளே! கருத்துக்கு ஏற்றவளே!
உன் இதயப்

புண்ணுக்கு மருந்திட வகையறியேன்
வழியறியேன்
என்று நொந்தான்.

குதிரைப் படையுண்டு உன் கோட்டையில்
மன்னா!

குன்றனையத் தோளுண்டு உனக்கு என் கண்ணா!
அன்னி மிஞ்சிலியாம் என்னை நீ காதலிப்பது
உண்மையெனில்
அட்டியின்றிப் புறப்படுகப் போருக்குக் கோசர்மீது!
அந்தகராய் ஆக்கி விட்டார் தந்தையினை
– அந்த


அநியாயக்காரர்களை வீழ்த்த வேண்டும்.

கண் குத்திப் பாம்புகனைத் துண்டாடும் கீரியென்று
திண் தோள் திதியனைத் தேடி வந்தேன்,
என உரைத்தாள்
வாளுறை விட்டு எழுந்ததுபார்! என்
சூளுரை யொன்றும் அறிக அன்பே!
உன் தந்தையாம்-என் மாமனுக்கு ஊனம்
வினைத்தோர்
உயிர் போக்கித் திரும்பிய பிறகே
உனைத் தீண்டும் என் கரங்கள்;
ஆர்ப்பரித்தான் அழுந்தூரான்!
போர்ப்படை கிளம்பிற்று!
பொல்லாக் கோசர் உடல் நொறுங்கிற்று-
நில்லா நெடுஞ்சுவர் போல் வீழ்ந்திறந்தார்.
விரும்பிய வாறு சூளுரை முடித்தாள்-
திரும்பிய திதியனின் தோளில் சாய்ந்தாள்!
அரும்பிய காதல் அன்றே மலர்ந்தது!
அக நூல் பாடல் இதற்கு அடிப்படையானது.

[அகநானூறு—262-வது பாடல்]

"முதைபடு பசுங்காட்டு அரில்பவர் மயக்கிப்,
பகடுபல பூண்ட உழவுறு செஞ்செய்,
இடுமுறை நிரம்பி, ஆகுவினைக் கலித்துப்,
பாசிலை அமன்ற பயறுஆ புக்கென,
வாய்மொழித் தந்தையைக்கண்கனிந்து,அருளாது,
ஊர்முது கோசர் நவைத்த சிறுமையின்,
கலத்தும்உண்ணுள், வாலிதும் உடாஅள்,
சினத்தின் கொண்ட படிவம் மாருள்,
மறம்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்,
செருஇயல் நல்மான் திதியற்கு உரைத்து, அவர்
இன்உயிர் செகுப்பக் கண்டு சினம் மாறிய
அன்னி மிஞிலி"

அனையாது தீ!



நாம் துவக்க இருக்கும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி ஒரிரண்டு நாட்களில் முடியும் கிளர்ச்சி யல்ல. தொடர்ந்து 10 ஆண்டுகள் இதே வேகத் தோடும் கதகதப்போடும் இருக்கும் கிளர்ச்சி.

வீடுகளில் அடுப்பை காலியில் மூட்டி, மதியம் அணைத்து விடுவார்கள்; ஆனால் வேறொர் ஜெயி லில் மூட்டிய தீ அணைக்கப்படுவதில்லை.

அதுபோல இப்போது மூளும் போர்க் கோலம், இந்தி வெறியர்கள் சளைத்து இவ்வளவு ஒழுங்கி இருக்கிறதா என்ற ஆச்சரியப்படத்தக்க அளவில் இருக்க வேண்டும்.

-அறிஞர் அண்ணா

சங்ககாலப் புலவர் தம் பெருமிதம்

கழகப்பொதுச்செயலாளர் பேராசியர்

பழந்தமிழ் மக்களின் வாழ்க்கையே ஒரு தனிச் சிறப்புடையது. ஒரு மொழி வைத்து உலகாண்ட மூவேந்தர் வழி வழி வந்த மரபினுல் பெருமைகொண் டது தமிழ்நாடு. வீரத்திலும் ஈரத்திலும் மேம்பட்டு, ஈட்டிய வெற்றியிலும் ஈத்த கொடையிலும் உயர்ந்து விளங்கிய தலைவர்கள் பலரைப் பெற்றிருந்தது அந்நாள் தமிழகம்.

அஞ்சாத நெஞ்சுடைய மறவர்களும், எஞ்சாது வழங்கும் கொடை வள்ளல்களும், விஞ்சுபுகழ் நிறுத்திய புலவர்களும், கொஞ்சும் சலங்கை யணி விறலியர் களும் நிறைந்திருந்த நாடு தமிழகம். அப்படிப்பட்ட சீரோங்கிய தமிழர்களின் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டும் புலவர்தம் பாடல்கள் தொகுக்கப்பெற்ற ஏடுகளே சங்க இலக்கியம் எனப்படும் எட்டுத்தொகை யும் பத்துப்பாட்டும் ஆகியவை. அவற்றுள்ளும் அந் நாள் போர் நிகழ்ச்சிகளையும், மரவீரர்தம் வெற்றிச் சிறப்புக்களையும், குறுநில மன்னர்தம் கொடைத் திறத்தையும், புலவர்தம் உள்ளத்தில் அவர்கள் பெற் றிருந்த இடத்தையும் நாம் அறியப் பெரிதும் துணை யாவது 'புறநானூறு' எனலாம்.

புலவர் பாடும் பெற்றியும் போர்க்கள வெற்றியும் உடைய மன்னர், தம்மை நாடி வந்து வாழ்த்திசைக்கும் புலவர்க்கும், பாணர்க்கும், பொருநர்க்கும், விறலி யர்க்கும் அவர்கள் திசைக்கவும் வியக்கவும் ஏதுவாகு மாறு, பொன்னும், மணியும், ஊனும், ஊனும் வழங் கியதோடன்றித் தமது தகுதியைக் காட்டும் வகையில், வீணமாண்ட நெடுந்தேரினையும், பொன்னுடை யணிந்த யானையையும், தம் கழுத்தில் அணிந்த ஆரத்தையும், கையில் செறித்த கடகத்தையும் வழங்கி மகிழ்ந்தனர் என்னும் செய்திகள் ஏராளம் புறப்பாடல் களில்.

கடமையில் கருத்தூன்றிய நிலையிலும், களிப்பு மீதூர்ந்த நிலையிலும், புலவர்க்குப் பரிசில் வழங்கு வதிலே மகிழ்ந்தனர் வள்ளல்கள். பெருஞ்செல்வத் தைப் பரிசிலாகப் பெற்றதாலும், தலைவனின் பாராட் டுக்கு உரியவானதாலும், பரிசிலர் தம் நிலை மறந்தவ ராய் மகிழ்ந்தனர். அதனுல்தாம் முறைப்படி பாடுவ தும் — ஆடுவதும் மறந்தவரும் பலர். காலப்பொழுதில் பாடுதற்குரிய மருதப்பண்ணை மாலையிலும், மாலையில் இசைத்தற்குரிய செவ்வழியைக் காலைப்பொழுதிலும் இசைத்து வரலாற்று முறையைப் பாடுங் குடியிலே பிறந்த பாணரே மறந்தனர் என்பது, கண்டீரக்கோப் பெருநள்ளியின் வள்ளன்மையைப் போற்றும் வன்பர ணர் பாட்டில் காணப்படுவது.

மாரியன்ன வண்மையுடையனுய் விளங்கிய தோ வேளர்பும்; "பாரி ஒருவனுமல்லன், மாரியும் உண்டு ஈண்டு புறப்பதுவே" என ஒப்பிட்டு உயர்த்திப் பாராட் டப்பட்ட பாரியும்; தன்னை நாடி வந்த புலவர்தம் வறுமையை ஒட்டித் தன் தலையினையே கொடுக்க முன்வந்த குமணனும் முதலாக இப்படிப்பட்ட புக முடையோர் பலப்பலர்.



அவரெல்லாம் "இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும்" அறவிலே வாணிக நோக்கத்தால், இக் கொடை வழங்கினரல்லர் என்பதும், தம் முன்னோர் மேற்கொண்ட நெறி என்பதனுலேயே வண்மையுடைய ராயினர் என்பதும் புறப்பாடலால் விளங்கும்.

புலவர்தம் பாடலைக் கேட்டலில் மகிழ்ந்து, தமது அளியால் அப்புலவரை மகிழ்வித்தலில் தாம் மகிழ் தலுமே குறிக்கொண்டனர் கொடைவள்ளல்கள்.

இவ்வாறு பெரும்பாலான பாடல்களில், வள் ளல்கள் நாடிப் புலவர்கள் செல்வதும், பரிசில்வேண்டிப் பாடி நிற்பதும், பெற்றதுகொண்டு வாழ்த்திப் போற்று வதும் காண்போர், அக்காலப் புலவர்கள் ஒருவகை யில் இரவலர்களாகவே வாழ்ந்துள்ளனர் என்றும், அவ ரெல்லாம் 'இரவச்சம்' சிறிதும் கொள்ளாது, இழியும் கருதாது இரந்துண்டு வாழ்ந்துள்ளனர் என்றும் கருது வது இயற்கையே.

புலமை நாட்டம் மிகுந்தமையின், பொருள் தேடும் நாட்டமும் முயற்சியும் குன்றியும், கலே பயில் ஆர்வத்தால் உழைப்புமிகு தொழில்களில் ஈடுபடல் இன்றியும், புலவர்களும் பாணர்களும் இயல்பிலேயே வறுமையுடன் வாழ்வாராயினர் என்பது உண்மையே.

அஃதன்றியும், தம் புலமைச் சிறப்பையும், கலேத் தத்தையும், அதனை அறிந்து மதித்திடவல்லார் பாராட்டுவதையே பெரிதாக விரும்பிய அவர்தம் மனம், பரிசில் மூலம் பெறும் பாராட்டினை நாடி, தகுதி சான்ற வள்ளலைத் தேடி, அவர்தம் புகழை வாயாரப் பாடி, தம்மையும் தம் சுற்றத்தையும் வருத்தும் வறுமையை ஒட்டுவதிலேயே ஈடுபட்டதெனலாம்.

அப்படிப்பட்ட நிலையில், புலவர்கள் தாம் எய்தி யுள்ள வறுமையினையும், தமது மனவிமக்களின் வாட்டும் மிடிமைத் துயரையும் விவரித்துப் பாடி பரிசிலே இரந் துள்ளரெனினும், அப்பரிசிலைத் தமது புலமைத் தகுதி யாலும், வாழ்த்திப் பாடிய உரிமையாலும்தாம் பெறு வதாகக் கொண்டனரேயன்றி, வெறும் இரந்துபெறும் பிச்சைப் பொருளாகக் கருதவில்லை

அப்படிக் கருதியிருப்பார்களாயின் பரிசில் பெற்ற தனுலாய மகிழ்ச்சி அவர்களிடையே மலர்ந்திருக்காது. புலவர்தம் தகுதியறிந்து வள்ளல் தன் பெருமைக் கேற்ப வழங்கிய பொருளே பரிசில் ஆகும்.

அக்காலப் புலவர்கள், வறுமையால் வருந்தினும் தமது தகுதிக்குத் தாழ்வு ஏற்படும் வண்ணமும், தன் மதிப்பை இழக்குமாறும், தம்போன்றவரை மதிக்க மறுத்தவரைப் போற்றியும், தம் சொல் பொய்த்திடு மாறு உண்மையை மாற்றியும், யாரையும் பாடுதற்கு உடன்பட்டாரல்லர்.

கண்டீரக்கோப்பெருநள்ளி என்னும் வள்ளலை லா ழ்த்திப் பாடிய வன்பரணர் என்னும் புலவர், அப் பாடலில் தாம் யாரை ஏத்திப்பாடுவோம், எவரைப் போற்றிப் பாடமாட்டோம் என்று கூற முற்பட்டு அதைத் தம் சிறிய செல்வ நாவின் பண்பாக உரைக் கின்றார்:

''பீடின் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்
செய்யா கூறிக் கிளத்தல்
எய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே.''

இந்த அடிகளின் மூலம், 'பிறருக்கு வழங்கும் பெருமை இல்லாத மன்னரைப் புகழ்ந்து பாடவேண்டும் என்று விரும்பி, அவர் செய்யாதனவற்றைச் செய்த தாகச் சொல்லி, அவரது குணங்களை உயர்த்திப் பாடு தலை எம்முடை சிறிய, செம்மை தவருத நா அறியாத தாகும்' என்றார் அப்புலவர்.


ஒருவரைப் புகழ்ந்துரைப்பதால் கிடைக்கக்கூடிய பரிசிலாகிய பொருளை மதித்து அதற்காகப் பொய்யாக ஒருவரைப் புகழ்ந்து பாட எம்முடைய சிறிய நாவும் இசையாது என்றதன் மூலம், தமது புலமையிலும் அதன் மூலம் வெளிப்படும் சுருத்திலும் அவர்கள் எத்தனை மதிப்புடையராயினர் என்பது விளங்கும். பரிசுப் பொருளிலும் – தமது சொற்பொருள் உயர் வுடையது, அது உண்மையாதல் வேண்டும் என்று மதித்த புலமைச் செருக்கு அவர்தம் தன்மதிப்பைப் புலப்படுத்துவதாகும்.

மலையமான் திருமுடிக்காரி என்னும் ஆற்றல் மிகுந்த வள்ளலைப் பாடிய புகழ்மிக்க கபிலர் கூறியது இது:

''ஓரிடத்தில் விளங்கித் தோன்றும் வள்ளலாகிய ஒருவனை நீனைந்து, நான்கு திசைகளினின்றும் பரிசில் நாடும் மக்கள் அவனிடம் வருவர். வளஞ்சிறந்த மன்ன னுக்கு அவர்கட்குக் கொடுத்தல் எளிது. ஆனால் அவர் தம் வரிசையினை– தகுதி மேம்பாட்டினை – புலமைத் திறத்தினை அறிதல் எளிதல்ல. வண்மையிற் சிறந்த தலைவ! அவ்வரிசையை அறிந்துகொள்ளும் முறையை நீ அறிந்தாயாயின், அவர்தம் தகுதி மேம்பாட்டினை அறிந்து அதற்கேற்ப போற்றுது, அனைவரையும் ஒருதர மாகப் பார்த்தலை நீக்கி, வரிசையறிந்து போற்றுவா யாக!''

இதனால், புலவர்கள் தமது தகுதியறிந்து, புல மையை மதித்துத் தரப்படும் பரிசிலையே விரும்பினர் என்பதும், தகுதி காணுதார் தரும்பொருளை மதித் தார் அல்லர் என்பதும் தெளிவு. புலவர்கள் விரும் பியது தமது புலமைக்குக் கிடைக்கும் பாராட்டு வடிவ மாகிய பரிசிலையேயன்றி, வறுமைக்கு மாற்றாகும் வெறும் பொருளையல்ல என்பதால், அவர்கள் போற் றிய தன்மதிப்பு விளங்குவதாகும்.

பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் பெருமகன், இளவெளிமான் என்னும் வள்ளலைக் காணச் சென்ற போது, அவன் உறக்க நிலையினில் இருந்தானாக, தனது இளவலை அனுப்பிப் பரிசில் கொடுக்கச் செய்தான். ஆயினும், அது தன்னை உரிய முறையில் மதித்துச் செய் யப்படாததாகக் கருதினார் புலவர். நேராகப் புகழ்மிக்க வள்ளல் குமணனிடம் சென்றார். அவன் நெடுநல்யானை யொடு பெரும் பரிசிலும் வழங்கினன். அந்த யானை யைக் கொணர்ந்து, இளவெளிமானின் தலைநகரின் வெளியே ஊர்க்காவல் மரத்தில் கட்டியவராய் அவனை நோக்கி இப்பாட்டினை உரைத்தார்:



''இரவலர் புரவலீ நீயு மல்லீ
புரவலர் இரவலர்க் கில்லீயு மல்லர்
இரவலர் உண்மையுங் காணினி, இரவலர்க்கு
ஈவோர் உண்மையுங் காணினி — நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் தோன்றல், செல்வல்யானே.''

''இரப்பவர்கட்கெல்லாம் கொடுத்துக் காப்பது நீயுமல்ல. இரப்பவர்களைக் காப்பவர் இல்லாமலு மில்லீ. இனியாகிலும் நின்னை நாடாத இரப்பவர் உளவாதலீயும் காண்பாய்; இரப்போரை மதித்து ஆதரிப்போர் உளவாதலீயும் காண்பாய்; நினது ஊரின் காவல் மரத்தில் யான் கட்டியுள்ள உயர்ந்த யானை யாம் பெற்ற பரிசில்; இனி யான் செல்வேன்'' என்று பெருஞ்சித்திரனர் உரைத்தது — தம்மை மதியாதார், இரவலர்க்குத் தரும் பொருளாகக் கருதி வழங்கும் பொருளைத் தாம் மதித்தலில்லீ என்பதைக் காட்டுவதுடன், தாம் பெற்ற பரிசிலாகிய யானையையும் வீட்டுச் சென்றது அவரது தன்மதிப்பு உணர்வையும் காட்டுவதன்றே!

மற்றொரு புலவர் பெருமகனாராகிய பெருந்தலைச் சாத்தனார் என்பார், இரண்டு இளவரசர்கள் ஒருங்கே வீற்றிருந்த அவையிலுட் சென்றார். ஒருவரைத் தழுவினார் — மற்றொருவரைத் தழுவாது விலகினார். அந்த மன்னனே அதன் காரணத்தைக் கூறுமாறு கேட்கின்றான். புலவரும் அதனை விளக்கி உரைக்கின்றார் ஒரு பாடலில்.

''நாட்டுத் தலைவன் நெடுந்தூரத்தே சென்றனன் ஆக, அவனது மகளிரும் அவரது நிலைக்கேற்ப பரிசில் வழங்குகின்ற வண்மைப் புகழ் வாய்ந்த குடியினன் இளங்கண்ணூர்க்கோ என்பதனாலே, பெரிதும் யான் அவனைத் தழுவிக் கொள்ளலானேன்; நீயும் (இளவிச்சிக்கோ) பொன்னாற் செய்த தேரினை உடைய நன்னன் மரபினன் ஆதலின் தழுவிக்கொள்ளற்குரியவனே! ஆயினும், அறிவு ஒளிரும் மொழியினையுடைய புலவர்க்கு அடைக்கப்பட்ட வாயில் கதவுடைய விச்சிக்கோ மரபினன் என்பதால் நின்னுடைய உயர்ந்த மலையைப் போற்றிப் பாடுதலை எம்முடைய புலவர்கள் நீக்கினர் என்பதால், உன்னைத் தழுவினேன் இல்லை'' என்னூர் புலவர் பெருந்தலைச் சாத்தனார்.

புலவர்களை மதித்து நடந்திடும் முறை மறந்த மன்னர் வழியைப் போற்றித் தழுவுதல் செய்யாதது மட்டுமன்றி, 'எம்மவரை மதித்திடாதவரை யாரும் மதித்தற்கு ஒருப்படோம்' என அம்மன்னரின் கண் முன்னே உரைத்த திறம் புலவரது தகுதி மேம்பாட்டையே உணர்த்துவதன்றே!

இவற்றைக் காண்போர், சங்க காலப் புலவர்கள்—புரவலரை நாடிப் பரிசில் பெற்று வாழ்ந்ததைக் கொண்டு, அவர்தம் வாழ்க்கையே இரந்துண்டு வாழ்ந்த வாழ்க்கையாகக் கொண்டிடல் பொருத்தமாகாது.

அக்காலப் புலவர்கள் பலர், புலமை வீறு கொண்டோராகவும்;

தன்மானம் மிக்கோராகவும்;

அரசருக்கும் அஞ்சாது அறிவுறுத்துவோராகவும்;

பொய்மையைப் பாடிப் பொருள் தேடாதோராகவும்;

புலமைக்குக் கிடைக்கும் மதிப்பையே விரும்புவோராகவும்;

தம் புகழ் நிறுவும் வழியும் ஆண்மைமிக்க வள்ளல்களைப் பாடி அமைதலே எனத் தெளிந்தோராகவும்

விளங்கி இருந்தனர் என்பதையும் புறப்பாடல்களால் நாம் அறிந்து மகிழலாம்.

ரசிகப் பெருமக்களுக்கு

பொங்கல் வாழ்த்துக்கள்

எங்கள் கைவசமுள்ள படங்கள் :

ஆடுபுலி ஆட்டம்
எதற்கும் துணிந்தவன்
மர்ம யோகி
உறவு சொல்ல ஒருவன்
ஆண்பிள்ளை சிங்கம்

கோவை, நீலகிரி மாவட்ட உரிமையாளர்கள் :

கங்காதரன் கம்பைன்ஸ்

திரைப்பட விநியோகஸ்தர்கள்

கலா மகால் பில்டிங்,

7–3, கோபாலபுரம் இரண்டாவது வீதி,

கோவை-18

எமது உளங்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!

சூப்பர் ∴ப்ளோ

ஜெட் பம்ப்ஸ், எலெக்ட்ரிக்
மோட்டார்ஸ், மோனோ பிளாக்ஸ்
அண்ட் ஸ்பெஷல் பம்ப்ஸ்
தயாரிப்போர்

5-241, தடாகம் ரோடு,
G. C T. போஸ்ட்
கோயமுத்தூர் - 641013

பொங்கல் நல்வாழ்த்துக்கள்
அழகிய வண்ணங்களில்
உறுதியும் தரமும் மிக்க
ஸ்டீல் பீரோக்கள்
ஸ்டீல் ரேக்குகள்
ஸ்டீல் மேஜைகள்
எஸ் டைப்சேர்கள்

Suguna
MADE IN INDIA

சுகுணா ஸ்டீல் பர்னிச்சர்களே!
தொலைபேசி : 31836
சுகுணஸ்டீல் இண்டஸ்ட்ரீஸ்
227, அவினாசி ரோடு, கோவை-4
வியாபார விசாரணைகள்
வரவேற்கப்படுகின்றன

இருள் அகன்று
ஒளிதர
இப்பொங்கல் நன்னாளில்
எமது நல்வாழ்த்துக்கள்!

அசோகா
சுகந்த பாக்குத்தூள்

Manufacturers:-
ASOKA BETELNUT COMPANY PVT. LTD.
11/234, Dr. Nanjappa Road,
COIMBATORE-641 018

நெருங்கடிகால நினைவுகள்

கழகப்பொருளாளர்: சாதிக்

1975-இல் நம்மீது திணிக்கப் பட்ட நெருக்கடி காலக் கொடுமை களிலிருந்து விடுபடுவதற்காக நாம் நடத்திய போராட்டத்தை, ''இரண் டாவது சுதந்திரப் போராட்டம்'' எனப் பெயர் சூட்டி அதற்கெனப் பல பாசறைகளை உருவாக்கியவர், நமது தலைவர் கலைஞர்.

இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தின் வெற்றிக்குப்பிறகு, நாம் கொண்டாடும் இரண்டாவது பொங்கல் திருநாள் இது!

கடந்த இரண்டாண்டு காலத் தில் எத்தனை மாறுதல்! மக்களி டையில் எவ்வளவு மறதி மனப் பான்மை! நெருக்கடி காலத்தில் பாசிசத்தின் கால்களை வருடிக் கொண்டிருந்தவர்களெல்லாம், இன்று ஜனநாயகத்தின் தூதுவர் களாக அல்லவா மேடைகளில் ஆடிக் கொண்டிருக்கிறார்கள்? ''நாடாளு மன்றத்தை மிஞ்சிய அதிகாரம் நாட்டில் யாருக்கு இருக்கிறது?'' என்று கேட்டு நாஜிசத்துக்கு நாமா வளி பாடியவர்களெல்லாம், இன்று, ''நாடாளுமன்றமே ஒருவரைத் தண்டிக்கும் அதிகாரம் பெற்றிருப் பது அநியாயம்'' என்றல்லவா அறிக்கை விடுகிறார்கள்! நெருக்கடி காலத்தை அன்று சகித்துக்கொண்ட மக்கள், நெருக்கடி காலத்துக்கு வக்காலத்து வாங்கி வெளிநாடு களிலும் பேசித் திரிகின்றவர்களையு மல்லவா இன்று சகித்துக் கொள் கிறார்கள்!

நெருக்கடி காலத்திற்கு வக் காலத்து வாங்குபவர்களைப் பார்க் கும்போது நமக்கு எரிச்சல் ஏற் படலாம்; ஆனால், அவர்கள் அப் படிப் பேசுவதற்கு இன்றைய நிலையில் சுதந்திரம் கிடைத்திருக் கிறது. என்பதுதான் முக்கியம். அத்தகு சுதந்திரத்திற்காக நெருக் கடி காலத்தில் கொடுமைகளை ஏற் றும், போராட்டத்துக்கு ஆளாகியும் துணிச்சலாகத் தொண்டாற்றிய அனைவரிலும் முதன்மையானவ ராகத் திகழ்ந்த நமது கலைஞர் அவர்களை நினைக்கும்போது நமக்கு ஒரு பணிவு தோன்றுகிறது: உலகத் துப் புரட்சியாளர்களின் வரிசை யில் அமர்ந்துவிட்ட ஒரு பெரிய தலைவரின் தலைமையில் பணியாற்று கிறோம் என்கிற பெருமிதம மேலோங்கி நிற்கிறது.

ஜெர்மனியை நாஜிகள் விழுங்கு வதற்கு ஹிண்டன்பர்க்கின் கோழைத்தனம் காரணமாக இருந்த தாகச் சொல்கிறார்கள்; ஆனால், இந்தியாவைப் பாசிசம் விழுங்கா மல் போனதற்கு முழு முதல் காரணமாக இருந்தவை தலைவர் கலைஞர் அவர்களின் துணிச்சலும் ஜனநாயகப் பற்றுதலுமாகும்!

ஜெர்மனியின் நாஜிசத்தை வீழ்த் துவதற்காக உலக முழுவதும் அரசாங்க ரீதியில் போரிட்டு உயிரிழந்தோர் தொகை 14கோடியே 95 லட்சம் என்று குத்துமதிப்பான கணக்கொன்று சொல்லப்படுகிறது. ஆனால், இந்தியாவின் பாசிசத்தை வீழ்த்துவதற்கு இயக்க ரீதியாகத் துணிந்து முன்வந்த ஒரே இயக் கம் தி.மு. கழகம்; ஒரே தலைவர் கலைஞர்!




இதனை இன்று இந்தியாவில் எத்தனைப் பேர் நன்றியுறுதலோடு நினைத்துப் பார்க்கிறார்கள் என்பது வேறு விஷயம்; பிறருடைய நன் றியை எதிர்பார்த்து கழகம் ஜன நாயகப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கவில்லை. என்றாலும், நமக்கு நாமே இதனை அவ்வப்போது எண் ணிப் பார்ப்பது நமது பெருமை களையும் மரபுகளையும் நினைவூட்டிக் கொள்வதாக அமையும்.

காஷ்மீரத்து மலைமுகட்டிலிருந்து கன்னியாகுமரி கடற்கரை வரை யில், சரித்திரம் வருணிக்கும் 'களப் பிரர் காலத்து' இருட் படலத்தைப் போர்த்துவதற்குத் துடித்த சர் வாதிகாரச் சக்திகள், இந்தியாவைப் பாசிசத்துக்கு அடிமையாக்க மட் டும் முயலவில்லை. இந்தியாவின் பலவேறு மொழி— பண்பாடு— மரபுகளையும் குழி தோண்டிப் புதைப் பதற்கும் முயன்றன. ஏனென்றால், பாசிசத்தில் மொழி வேறுபாடு, இனப் பண்பாடு எவைக்குமே இடம் இல்லை.

தைமூரைப் போல், நாதர் ஷா வைப் போல் மக்களின் உரிமை களைக் கொள்ளையடிக்க புதுடெல்லியி லிருந்து இளம்பிய நெருக்கடி காலத்து நாசச் சக்திகள் இந்தியா வில் இரண்டு இடங்களில்தான் அறைகூவலுக்கு உள்ளாயின! காந்தி பிறந்த குஜராத்தும், அண்ணா உலவிய தமிழகமும்தான் நெருக் கடி கால வெப்பத்தில் நிழல்தரும் தருக்களாகத் திகழ்ந்தன!

நாட்டின் தெற்கு மூனையும் மேற்கு விளிம்பும் மட்டுமே எதேச் சாதிகாரத்தை எதிர்த்து நின்ற வீரப் போராட்டத்தில் மேற்கு விளிம்பான குஜராத் மெள்ள மெள் ளக் கனைத்துச் சனைத்துப் படுத்து விட்டது. வீரமும் நெஞ்சுரமும் மிக்க மக்கள் அங்கிருந்தாலும், அவர்களை வழி நடத்தும் தகுதி மிக்க தலைவர்கள் அனைவரும் நெருக் கடிகாலக் கொட்டடிகளில் அடைக் கப் பட்டதால், குஜராத் துவக்க

இந்தி மக்கள் உணர வேண்டிய உண்மைகள்!



இத்தனைக்கும், நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்யப்பட்டபோது, கழகத்தின் கையிலிருந்த அரசியல் அதிகாரத்திற்கு எந்தத் தீங்கும் நேரவில்லை. என்றாலும், அரசியல் அதிகாரம் கழகத்தின் கைக்குக் கிடைப்பதற்குக் காரணமாக இருந்த மக்கள் உரிமைகளையும், ஜனநாயக மரபுகளையும் சர்வாதிகாரப் பாம்பு தீண்டுவதைப் பார்த்ததும், கழகம் தன் கையிலிருந்த அரசியல் அதிகாரம் எனும் தடியால் அடிக்க மூண்டது. பாம்பை அடிக்கப் பயன்படுகிறது என்பதற்காகவே, கழகத்தின் கையில் இருந்த அரசியல் அதிகாரம் எனும் தடி, பாம்பை ஏவிய பாசிசவாதிகளால் விரைவாகப் பிடிக்கப்பட்டுவிட்டது.

அரசியல் அதிகாரத் தடியைப் பிடுங்கி விட்டால், சர்வாதிகாரப் பாம்பு மக்களைப் பிடுங்குவதைப் பார்த்துக் கொண்டு கழகம் வாளா விருக்கும் என்பதுதான் அவர்கள் அன்று கணித்த ஆரம்பக் கணக்கு!

கழகத்தைப் பற்றியும் கலைஞர் அவர்களைப் பற்றியும் பாசிசவாதிகள் போட்ட கணக்கு பொய்த்து விட்டது. ஆட்சி அதிகாரத்தைப் பிடுங்கிய பின்னரும்— அவதூறுகளைப் பொழிந்தும் அவமானத்தை வாரித் தெளித்தும் சர்க்காரியா கமிஷன் நியமிக்கப்பட்ட பிறகும் — கலைஞர் அவர்கள் இமயமலைபோல் எழுந்து நின்று கேடுகளைத் தடுப்பதில் முனைந்தார்.

நெருக்கடிகாலக் கொடுமைகளைத் தன்னந்தனியாய் தீரத்தோடு எதிர்த்து நின்ற ஒரே காரணத்திற்காக கழகத்திற்கு ஏற்பட்ட இழப்புகளும், சோதனைகளும், கொடுமைகளும் எப்படிப்பட்டவை என்பதை நாடு அறியும்.

நெருக்கடி காலக் கொடுமைகளை ஆய்ந்துத் தோர்ந்தெடுத்து அழகாகச் சொல்லும் வரலாற்றுப் பண்டிதர்கள் பலபேர் இன்று முனைந்திருக்கிறார்கள். கட்டிடங்கள் இடிக்கப்பட்டதையும், அதிகாரிகள் பழிவாங்கப்பட்டதையும், சினிமாப் படம் எரிக்கப்பட்டதையும் மட்டுமே நெருக்கடி காலக் கொடுமைகளாக விமரிசனம் செய்து விளம்பரம் தேடிக்கொள்ளும் மேதாவிகளும் பெருத்து விட்டார்கள்.

தமிழ்ச் சமுதாயம் எனும் பழம் பெரும் பண்பட்ட மனித குலத்தையே பூண்டோடு ஒழிப்பதற்குத் தான், நெருக்கடி காலத்தைப் பயன்படுத்தி கழக அரசைக் கலைத்து கலைஞர் பேரில் பொய்க் குற்றச் சாட்டுகள் சாட்டப்பட்டன என்ப அத்தகு மேதாவிகளின் உணர்வுகளை இன்னமும் தொடவில்லை. ஒரு சினிமாப் படம் எரிக்கப்பட்டதை வைத்துக் கொண்டே, இரண்டாண்டு காலமாக பத்திக் பத்தியாக எழுதிப் 'பாவலா' செய்யும் பத்திரிகைகள், ஒரு மாநிலத்தின் அரசையே கலைத்த கொடுமையை ஆராய்ந்து சொல்ல ஒரு வரி

கால எதிர்ப்போடு துவண்டு விட்டது.

இறுதியாக, இந்திய வரலாற்றில் எப்போதும்போல் ஒளியூட்டி ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு தமிழகம் மட்டுமே தனித்து நின்றது.

தனித்து நின்ற தமிழகம் தனிப் பெருந் தலைவர் கலைஞர் அவர்களின் தகுதிமிக்க தலைமையில் இந்தியாவின் ஜனநாயகத்தை மீட்டுக் கொடுத்திருக்கிறது. கலைஞரின் பாசறையிலிருந்து அவரால் வடித்துக் கொடுக்கப்பட்ட படைக்கலன்களைதாம் நாட்டின் நாலு பக்கமும் பாய்ந்து சென்று நம்மைக் கப்பிக் கிடந்த இருட்படலத்தைக் கிழித்தெறிந்து ஒளியூட்டின.

முதலாவது சுதந்திரப் போராட்டத்தை முடுக்கித் துவக்கிவைத்த பெருமை வீரபாண்டிய கட்டபொம்மனைச் சேரும் என்று சொல்கிறார்கள். அதே போல் இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தை முனைந்து துவக்கி முடித்து வைத்தவர் நமது கலைஞர் அவர்கள்தான் என்று உண்மையான வரலாறு விளக்கமாகத் தெரிவிக்கத் தவறுது.

நெருக்கடி நிலைப் பிரகடனப்படுத்தப்பட்ட சில மணி நேரத்திற்குள் ளாகவே நாட்டின் தியாகத் தலைவர்கள்— தீரமிக்க போராட்டவாதிகள்— மக்கள் நலன் பேணும் மேதைகள்— அத்தனைப் பேரும் வாயடைத்து— கைபிசைந்து தவிக்கும் நிலையில் கைது செய்யப்பட்டார்கள். வளர்ந்து வரும் பாசிசத்தின் கேடுபாடுகளை எடுத்துச் சொல்லி மக்களை எச்சரித்து வந்த ஜெயப்பிரகாஷ் நாராயண் போன்றவர்களே, அந்தச் சந்தர்ப்பத்தில் "விஞ்சகாலே விபரீத புத்தி" என்கிற தத்துவ வரிகளை உதிர்ப்பதைத் தவிர, செயல்பட முடியாதவர்களாகி விட்டார்கள். நாடே எத்தகு சலனத்தையும் வெளிப்படுத்த முடியாத மயான பூமியாக மாறிற்று! வீமார் குடியரசு வீழ்ச்சியடைந்த பிறகு ஜெர்மனியில் காணப்பட்டதுபோல், அச்சமும் பீதியும் அனைவரையும் ஆட்டிப் படைத்தன. சர்வாதிகாரத்திற்குத் துணை போகும் அடிமைகள் தவிர, மற்ற யாருக்கும் பேசவோ, எழுதவோ, கூட்டம் கூடவோ உரிமை இல்லையென்றுயின.

இத்தகு அநியாயங்களைத் தட்டிக் கேட்பதற்கு இந்தியாவின் எந்த மூலையிலிருந்தாவது ஒரு வீரத்திருமகன்— ஒரு மக்கள் இயக்கம்— முன்வரக் கூடாதா என்று நிறையிலிருந்த அத்தனைத் தலைவர்களும்— வெளியிலிருந்த அத்தனை ஜனநாயக விரும்பிகளும் எதிர்பார்த்து ஏங்கித் தவித்த நேரத்தில்தான், தலைவர் கலைஞர் தலைமையிலான கழகம், விளைவுகளைப் பற்றிக் கவலைப் படாமல் நாட்டில் மண்டிவிட்ட களைகளை வெட்டிப் போடுவதற்குத் தீவிரமாக முன்வந்தது.

நெருக்கடி காலத்திற்குரிய எதேச்சாதிகாரச் சட்டவரைவுகள், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்படுவதற்கு முன்னதாக, அவைகளை எதிர்க்கும் கழகத்தின் 'வீரக் குரல் நாட்டு மக்களிடையில் ஒலித்தது. கையிலிருப்பது பறிக்கப்பட்டதும் வீறிட்டு அலறும் குழந்தையைப் போல், கழகம், ஆண்டாண்டு காலமாகக் கட்டிக் காத்துவரும் ஜனநாயக மரபுகள் ஒரு நாள் நடுநிசி நேரத்தில் தட்டிப் பறிக்கப்பட்ட தகாச் செயலைக் கண்டதும் வீறிட்டுக் குரல் கொடுத்தது— வினைவு களைத் தாங்கிக் கொள்ளத் தயாரானது.

கூடப் பயன்படுத்தக் காணேம்! சுங்க இலாகாவின் குட்டி அதிகாரிகள் பேரில் நெருக்கடி காலத்தில் சாட்டப் பெற்ற குற்றச்சாட்டுகளைப் பொய்யென நிரூபிப்பதற்கு அலைகின்ற நீதிமான்கள், ஒரு மாநில முதல்வரின் பேரில் அந்த நாட்களில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையை ஆராய்வதற்கு முயல்வதாகவே புரியவில்லே. சர்வாதிகார இருள் கவிழ்ந்திருந்த நாட்களில் போடப்பட்ட சட்டங்களின் தகுதிபற்றி ஆராயும் அத்தனே நியாயர்களும், தமிழக சட்டமன்றத்தைக் கலேத்த அத்துமீறலே அலசுவதற்குப் பயந்து அலறுகிறார்கள்.

பாதல் பேரில் நீதிமன்றம் தெரிவித்த தீர்ப்பும், பரோடா டெடி குண்டு வழக்கும் நெருக்கடி காலக் கொடுமைகளின் சின்னங்களாகும். அப்போது, சர்க்காரியா கமிஷனும் கோதுமை வழக்கும் இன்னமும் தொடர்வது எதற்காக என்பதைத் தட்டிக் கேட்கும் தகுதிமிக்கோர் யாரும் காணேம்!

நெருக்கடிகாலக் கொடுமைகளே மட்டும் வருணிப்பதில் தனிச்சுவை காண்போர் அனேவரும், அந்தக் கொடுமைகளே எதிர்த்து நின்று கொடுமைகளுக்கு உள்ளானவர்களேப் பற்றி ஒரு வார்த்தைகூடத் தெரிவிக்கக் காணேம்!

இவைகளிலிருந்து நமக்குத் தெரிவ தெல்லாம், கழகத்தையும், கலேஞர் அவர்களேயும் நெருக்கடி காலத்தில் கொடுமைக்கு உள்ளாக்கிய சக்திகள் இன்னமும் பெருஞ்செல்வாக்கோடு நாட்டு அரசியலில் இடம் பெற்றிருக்கின்றன என்பதுதான். நமக்கு அரசியல் ரீதியாக இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு இந்திரா காந்திதான் முழுக் காரணமா என்பதிலேயே ஐயங்கொள்ளும் அளவுக்கு, தமிழர்களின் தவிர்தன்மைக்கு எதிர்ப்பான சக்திகளின் நடவடிக்கைகள் இன்றைக்கும் அமைந்திருக்கின்றன.

அத்தகு சக்திகள் . இந்தியாவை ஆளுங்கட்சியான ஜனதா கட்சியிலும் ஊடுருவி இடம்பிடித்துக் கொண்டிருப்பதுதான் வேதனேயளிக்கிறது.

ஏனென்றால், ஜனதா கட்சி அமைவதற்கு அடிப்படையை அமைத்துக் கொடுத்தவரே நமது கலேஞர் அவர்கள்தான்!

நெருக்கடி காலச் சர்வாதிகாரத்தை வீழ்த்துவதற்கு நாட்டின் முக்கியத் தலேவர்கள் ஒன்றுகூடி ஒருங்கிணைந்து ஒரு கட்சியைத் துவக்கியது, வரலாறு புகழும் ஓர் அற்புதமாகும்.

அத்தகு அற்புதத்திற்கு வழி வகுத்தவர் நமது கலேஞர்.

'ரஷ்யாவின் மாபெரும் எழுத்தாளன் கோகேல் எழுதிய சிறுகதையான 'மேலங்கி'யின் கருத்திலிருந்துதான் புதுமை ரஷ்யா புலர்ந்ததாக மாவீரன் லெனின் ஒருமுறை குறிப்பிட்டார். அதேபோல், தலேவர் கலேஞர் அவர்கள், 1976 டிசம்பர் 4-ஆம் நாளன்று, வெலியில் இருந்த முக்கியத் தலேவர்களுக்கு எழுதிய கடிதத்திலிருந்துதான் நாட்டில் சர்வாதிகாரத்துக்கு எதிரான ஒருங்கிணைந்த கருத்து உருவானது-ஒருங்கிணைந்த கட்சியான ஜனதா கட்சி மலர்வதற்குவழி பிறந்தது.

1976 டிசம்பர் மத்தியில் அசாம் மாநிலத்து கவுகாத்தி நகரில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சி செயற்குழுவில், அப்போதைய பிரதமர் பேசிய பேச்சின் ஒரு பகுதியைக் குறிப்பிட்டு, அனேத்துக் கட்சித் தலேவர்களேயும் அவர் புதுடெல்லியில் 1976 டிசம்பர் 15-இல் சந்திக்க வைத்தார்.

''நாட்டில் சுமுக நிலே ஏற்படுவதற்கு எதிர்க்கட்சித் தலேவர்களுடன் கலந்து பேச விரும்புவதான கருத்தினே, கவுகாத்தி காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பிரதமர் இந்திரா காந்தி தெரிவித்திருக்கிறார். இதன் அடிப்படையில் கலந்து பேசி நாட்டில் சுமுக நிலே ஏற்படுவதற்கு வழிகாணும் வகைகளே ஆராய்வதற்காக'' 15.12.76 அன்று புதுடெல்லியில் திரு. இரா. செழியன் இல்லத்தில் அனேத்துக் கட்சித் தலேவர்களேச் சந்திக்க விரும்பி தலேவர் கலேஞர் அழைப்பு விடுத்தார்.

கலேஞர் அவர்களின் இந்த அழைப்பினே ஏற்று சரண்சிங், அசோக்மேத்தா, பிலுமோடி, எச். எம். பட்டேல், சாந்திபூஷன் மற்றும் தலேவர்கள் பலரும் கலந்து கொண்டு, அனேத்துக் கட்சியின் சார்பில் பிரதமருக்கு அனுப்புவதற்கான அறிக்கை தயாராயிற்று.

ஜனதா கட்சியின் இன்றைய மாபெரும் தலேவர்களாக விளங்கும் அனேவரையும் கூட்டி வைத்து,

''எனது அழைப்பினே ஏற்று வருகை தந்துள்ள உங்கள் அனேவர்க்கும் என் இதயமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று தொடங்கிய, ''தலிப்பட்ட கட்சிகளின் சிக்கல்கள், பிரச்சினேகளுக்கு இப்போது இடமில்லே. அனேவரும் ஏற்றிடத்தக்க ஒரு பொதுவான உடன்பாடு ஏற்படுவதற்கு இந்தக் கூட்டம் வகை செய்யும், துணே செய்யும் என்று நம்புகிறேன்'' என்று முடித்து

தமது துவக்க உரையில் கலேஞர் குறிப்பிட்டார்.

1976 டிசம்பர் 15 அன்று கலேஞர் கூட்டிய கூட்டத்தில் பரிமாறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், மறுநாள் வட இந்தியாவின் முக்கிய கட்சிகளின் தலேவர்கள் கூடிப்பேசி, ஜனதா கட்சி உருவானதாக அறிவிக்கப்பட்டது.

கலேஞர் அவர்களின் முயற்சியால் உருவான கட்சிதான் ஜனதா கட்சி என்று வரலாறு சொன்னால், அது தவறு என்று சொல்வதற்கு யாருக்கும் உரிமை இருக்காது என்பது உறுதி.

ஜனதா கட்சியின் இப்போதைய போக்கு எப்படி இருந்தாலும், அதனுடைய ஒற்றுமையிலும் வளர்ச்சியிலும் கலேஞர் அவர்களுக்கு நிரம்பக் கவலேயுண்டு. ஏனென்றால், அது அவருடைய வார்ப்பு; சர்வாதிகாரப் புலியை அதன் குகையிலேயே மடக்குவதற்கு கலேஞர் வடித்துக் கொடுத்த ஆயுதம் அது.

ஜனதா கட்சியின் தோற்றம் இந்திய அரசியலில் பெரும் திருப்பு முனே என்றால், அது தோன்றுவதற்குத் துணேயாக நின்ற கலேஞர் அவர்கள் இந்திய அரசியல் வரலாற்றில் அழியாத இடம் பெற்று விட்ட அற்புதத் தலேவர் ஆவார். ●

இந்தி எதிர்ப்பு மாநில மாநாடு—
சிறப்புப் புகைப் படங்கள்: 'ஹேப்பி' சிங்காரம்.

பிரகடனம்




தனியொரு ஆட்சி மொழியாக இந்தியைத் திணிப்பதை தி.மு.க. பணிந்து ஏற்காது. மாறுக, தேசிய மொழிகள் அனேத்துக்கும் ஒத்த தகுதி வேண்டும் என்ற தனது குறிக்கோளே அடையும் வரை தி.மு.க. அதை வற்புறுத்தியே தீரும்: போராடியே தீரும்! இது தி.மு.கழகத்தின் பிரகடனம்!

—அறிஞர் அண்ணு




பாட்டாளி வர்க்கத்தின் பனிக் கண்ணீர் துடைத்தவரே
காட்டுள் எமக்களித்த கடமைத் திரு உருவே
காலச் சூறையிலே கண்மூடிச் சென்றிடும்
நாலம் உள்ளவரை நாங்களுனை நினைத்திருப்போம்


1930 அக்போபர் 23 — எழுத்துரிமை, பேச்சுரிமைக்கு ஆபத்து வந்தபோது...




1953 ஜூலை 15 — மும்முனைப் போராட்டம் (ரயில் நிறுத்தப் போர்)



கைத்தறியாளரின் கண்ணீர் துடைத்தோம் — 1953 ஜனவரி 4



கல்லக்குடி போர்



1953 ஜூலை 3 — சித்தூர், திருத்தணி தமிழ்மக்கள் கொடுமையுற்றபோது...




புகுக்கல்வித்திட்ட எதிர்ப்புப் போர்



1954 ஆகஸ்ட் 11

தமிழ்நாடு கூடா தமிழருக்கு கொடுமை வந்துற்றபோது..



1957 ஆகஸ்ட் 23

நங்கவரம் உழவர் போராட்டம்



1958 ஜனவரி 6

கருப்புக்கொடி போராட்டம்




1959 ஜனவரி 20

தமிழ்நாடு பெயர் போராட்டம்




1960 மார்ச் 11

பேட்டவாய்த்தலை தொழிலாளர் போராட்டம்



1960 ஆகஸ்ட் 30

இந்தி எதிர்ப்புப் போர்



1961 ஜூலை 18

இலங்கைத் தமிழர் ஊர்வலம்

இலங்கையில் தமிழர் கொடுமையுற்ற போது...



மாவுரும் கண்டன ஊர்வலம் நடத்திய போது





பேரணி நடத்தியபோது



சட்ட மன்றத்தில் எடுத்துரைத்தோம்

1961 செப்டம்பர் 28

உழவர் பேரணி

நிலச்சீர்திருத்த சட்டத்தில் உழவருக்கு நீங்கிருந்த போது...






உழவர் பேரணி நடத்தியபோது



பின்னர் மறியல் நடத்தியபோது



சிறைசென்றோம்; களபலி தந்தோம்

1962 ஜூலை 19

விலைவாசி உயர்வுகண்டன மறியல்

விலைவாசி விஷம் போல் ஏறியபோது...



சர்க்கார் அதைத் தடுத்து நிறுத்த தயங்கிய போது...



அரசு உணர்ந்தது

விலைவாசி ஏறிவிட்டது உண்மைதான்



1965-இல்... தமிழகம் எங்கிலும் இந்தி எதிர்ப்புப் புரட்சி!



அண்ணாவும் தலைவர்களும் சிறையில்!



பாளையம் கோட்டை தனிமைச் சிறையில் கலைஞர்.



தீக்குளித்துச் செத்தனர் எட்டுச்சிங்கத் தமிழ் இளைஞர்கள்



நூற்றுக்கணக்கானோர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.



கழகக் கண்மணிகள் மீதெல்லாம் கொடிய வழக்குகள்.


1975-நெருக்கடி நிலை சர்வாதிகாரத்தை எதிர்த்துத் தீரமானம் போட்ட முதல் கட்சி-ஒரே கட்சி திமுக கழகம்தான்!






கோவை மாநாடு சர்வாதிகாரத் தாக்குதலுக்கு எதிராக முழக்கத்தைக் கொடுத்தது!


31.1.1976-அன்று சர்வாதிகார ஆட்சி கழக அரசைக் கலைத்தது!




25000 தோழர்கள் வெஞ்சிறையில் வாடினர்!



800-தோழர்கள் விசாரணையில்லாத மிசாவில்!



சென்னைச் சிறையில் கண்மணிகள் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டனர்



சிங்கமறவன் சிட்டிபாபுவைக்
கொன்றனர்...



சாதிஞர் பாலகிருஷ்ணனைப்
பிணமாகத் தந்தனர்




1977-ல்-இந்திரா வந்தபோது தமிழகமெங்கும்
சர்வாதிகாரிக்குக் கறுப்புக்கொடி!



கலைஞர், பேராசிரியர் மற்றும்
முன்னணி வீரர்கள் மீது பொய்
வழக்குகள்!



தீனன், பாபு துப்பாக்கிச்
சூட்டுக்குப் பலியாயினர்



தமிழுக்காக-தமிழ் இனத்திற்காக
உயிர் தரவும் தயங்காத தீரர்கள்
கோட்டம்தான் தி.மு.க

பொதுக் கூட்டங்கள், திருமணங்கள மற்றும்
எல்லாவித நிகழ்ச்சிகளையும் நல்லமுறையில்
போட்டோ எடுக்க சிறந்த இடம்



ஹேப்பி ஸ்டுடியோ



12, மேட்லி ரோடு,
தி. நகர்,
சென்னை - 600017.
போன் : 445532

உரிமை: சிங்காரம்

குறிப்பு: தலைவர் கலைஞர் அவர்களின் விசேஷ புகைப்படங்களுக்கும் தொடர்பு கொள்ளவும்.

உங்கள் இல்லங்களை அழகுபடுத்த

ஸ்டீல்
பர்னிச்சர்களை
வாங்குவீர்

ராயல்

எங்களிடம்

கண்ணாடி பீரோ

டேபிள்

சேர்

ரேக்

ஸ்டூல்

கட்டில்

சோபா -கம்-பெட்
முதலியன



வண்ண வண்ண நிறங்களில்
உத்திரவாதத்துடன் கிடைக்கும்

ராயல் ஏஜென்ஸீஸ்

111, டாக்டர் நஞ்சப்பா ரோடு,
கோயமுத்தூர்-641018 போன்: 32847

கிளை: 162, அவினாசி ரோடு,
கோவை-641018

நரம்பு சுளுக்கு, எலும்பு முறிவுகளுக்கு 101 வருடங்களாக புகழ் பெற்ற
"வைத்திய ரத்தினம்"

பெத்தாக் கவுண்டர் வைத்தியசாலை

34/474, பெரிய கடை வீதி, கடைசி (செட்டி வீதி)
கோயமுத்தூர்-1 போன்: 32535



பெத்தா கவுண்டர்
குமரர் வைத்தியர்
C. P. பொன்னுசாமி
கவுண்டர், R.I.M.P.



C. P. பொன்னுசாமி
கவுண்டர் குமரர்
Dr. C. P. குப்புராஜ்
R.I.M.P., R.H.M.P.

எலும்பு முறிவுகளுக்கு:
பாலூர்ஜீன் சிவசக்தித் தைலம்
நரம்பு சுளுக்கு, எலும்பு முறிவு, பூட்டு விலகுதல், நெஞ்சு உரம், மோது கட்டல், முதுகு கூன், குழந்தைகளுக்கு பிறவியில் கை கால் முடகம் முதலிய நோய் கண் கண்படுத்தும்.

வாதங்கள் 80க்கும்:
சிவஜோதித் தைலம்
பச்சைவாதம், இளம் பிள்ளை வாதம், முழங்கால்வாதம் குதிங்கால் வாதம், முழங்கால் நீர் இவைகளை இத்தைலம் குணப்படுத்தும்.

கடந்த 25-11-78-ஆம் தேதி - கோவையில் நடைபெற்ற சித்த வைத்திய மாநாட்டில், "எலும்பு முறிவு சிகிச்சை மாமன்னர்" என்ற சிறப்பு விருது டாக்டர் குப்புராஜ் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.






For the treatment of :—BONE FRACTURES, BONE DISLOCATIONS, RHEUMATISM, NERVES — MUSCLES PAIN & ALLIED BONE TROUBLES.

PETHA GOUNDER BONE SETTING HOSPITAL

474, Big Bazaar Street, COIMBATORE-1 (Phone: 32535)

X—RAY & LAB ATTACHED



ஒரு ரோஜா பரிப்பூவானது

தென்னரசு

அன்பு நிறைந்த சுமதிக்கு,

பெண்ணுக்குப் பல ஆசைகள் உண்டு. வீபரம் தெரியும் பருவம் வந்ததும் அவள் பட்டுப்பாவாடை கேட்பாள்; வயது வந்ததும் அவளே வண்ணப் புடவைகளுக்குத் தன் தாயிடம் அடம் பிடிப்பாள். அடுத்து அவள் மனதுக்குள்ளேயே கணவனைப் பற்றிக் கனவு காண்கிறாள். அதுவும் நிறைவேறிவிட்டால் தானும் ஒரு தாயாக வேண்டும் என்ற துடிப்பு வந்து விடுகிறது அவளுக்கு. இந்த ஆசைதான் பெண்கள் சலிப்படையாத ஆசை.

நீ ஏழை வீட்டில் பிறந்தவளானாலும் இந்த் ஆசையை நிறைவேற்றிக்கொண்டாய்; வெற்றியும் பெற்று விட்டாய். ஆனால் என் கதை என்ன?

உன்னை விட நான் அழகானவள்; உன்னைவிட நான் படித்தவள்; உன்னை முந்திக்கொண்டு நான் திருமணம் முடித்துக் கொண்டவள். ஆனாலும் நான் உன்னிடம் தோற்றுப் போனேன்.

வாழ்க்கையின் வெற்றி எதிலே அடங்கியிருக்கிறது என்று யாரும் இதுவரை தெளிவுபடுத்தவில்லை;



தெளிவுபடுத்தவும் முடியாது. பெரிய இடத்திலே பிறந்த பேரழகு வாய்ந்த பெண் கொடுத்து வைத்தவள் என்ற ஊர்ப்பேச்சு எவ்வளவு பெரிய பொய் எனபது என்னைப்பொறுத்தமட்டில் நூற்றுக்கு நூறு உண்மையாகி விட்டது. இல்லையா சுமதி?

நீ, தாயாகி விட்டாய். உன் குழந்தைகள் உன்னை மொய்த்துச் சிரித்து விளையாடுகின்றன. நான் உன்னையும் உன் குழந்தைகளையும் மனக் கண்களால் பார்த்துப் பெருமூச்சுவிடுகின்றேன்.

நான் அந்தப் பாக்கியத்தை இழந்துவிட்டேன். பெறவே முடியாத அளவிற்கு இழந்துவிட்டேன். நான் ஒருபோதும் இனி தாயாக முடியாது. எல்லாப்பெண்களும் தாய்மார்களாகிவிட்டால் மக்கட் பேற்றை உலகம் தாங்காது என்பதற்காக இறைவன் செய்து வைத்த

ஏற்பாட்டில் என் பெயர் எப்படிச் சேர்ந்தது என்பதை நீங்கும் போது, நான் ஏன் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும் என்று தோன்று கிறது.

தீமை புரிவோர் பாவிகள் பட்டியலில் சேரலாம்– அதுதான் நியாயம். ஆனால் என்னைப் போன்றவர்கள் பிறக்கும்போதே பாவிகளானதெப்படி? மக்கட்பேற்றினை ஒரு செல்வம் என்கிறார்கள். அந்தச் செல்வம் ஒரு சிலருக்கு மட்டுமே கிடைத்திட முடிகிறதே, ஏன்? மணமிருந்தும் மனை ரஞ்சிதப்பூ தலையில் குடிக்கொள்ள முடியாமல் போனது போல், உடலிலும் உள்ளத்திலும் மறுவில்லாத பெண்கள்கூட வாழ முடியாமல் அபாக்கியவதிகளாக ஆகிவிடுகிறார்கள்.

சுமதி, இதற்கு வேதாந்திகள் ஒரே வார்த்தையில் ''ஊழ் வினை'' என்று சொல்லி விடுவார்கள். இந்தத் தத்துவங்களெல்லாம் ஒரு வழிப் பாதைகள் போன்றவை; தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளத் துடிப்பவர்கள் ஏற்பாடு செய்து கொண்ட கொல்மீக் கதவுகள்!

என் திருமணத்தின்போது என்னையும் அவரையும் ஒரே காரில் வைத்து பட்டணப் பிரவேசம் நடத்தினார்கள். தெருவில் நின்று வேடிக்கை பார்த்தவர்களுக்கெல்லாம் நீ பூச்செண்டு கொடுத்துக் கொண்டு வந்தாய். அவர்களது வாழ்த்தெல்லாம் என்ன வாயிற்று? கோயில்களுக்கெல்லாம் போனேம்– குறைவில்லாமல் காணிக்கைகளை வழங்கினேம். எல்லாமே வீண் விரயம்தானே?

ஒரு பெண்ணின் உணர்ச்சியை ஒரு பெண்தான் அறிய முடியும் – நான் நினைத்தால் அல்லது ஒரு பெண் நினைத்தால் ஊழ்வினைகளைத்தூளாக்கி விட முடியும். ஆனால்.... அறுவை சிகிச்சைக்குமுன், மயக்க மருந்து போட்டுக் கொள்வது போல் முதலில் அவள் காதுகளைச் செவிடாக்கிக் கொள்ள வேண்டும். இதற்கு எவள் துணிகிறாளோ அவள் ஊழ்வினையை ஒழித்து ஊரார் புரளியை எள்ளி நகையாடி ஒரு புரட்சிப்பெண்ணாகி விடுவாள்; நானும் அப்படி ஆகிவிட முடியாதா?

என் வீடு பெரிய வீடு; மேல் வீட்டை நான் வாடகைக்கு விட்டிருந்தேன். அதில் ஒரு நாடக நடிகை குடியிருந்தாள். புஷ்பராணி என்றால் நாடக ரசிகர்களுக்கு ஒரு மயக்கம் உண்டு. அவளுக்குப் பகலெல்லாம் தூக்கம். இரவெல்லாம் விழிப்பு. விடிய விடிய ஆடுகிறவளல்லவா! அவள் எவ்வளவோ நல்லவள்தான். என்னை உணர்ந்தவள்தான். அவளுக்கு இரண்டு குழந்தைகள். புருஷன் அவளை விவாக ரத்து செய்து விட்டு ஒரு 'புதியவனை'ப் பார்த்துக் கொண்டான். புருஷனைக் கைவிட்ட புஷ்பராணி, பிள்ளைகள் போதும் என்று திருப்திப்பட்டுக் கொண்டுவிட்டாள்.எனக்கு அதுவுமில்லையே என்று நான் ஏங்குவதை அவள் தெரிந்து கொண்டுவிட்டாள்.

ஒருநாள் மாலை நானும் அவளும் மேற்கு வீட்டில் உள்முற்றத்தில் பேசிக் கொண்டிருந்தோம்.

''மேகலை, உன்னைப்போல் நானும் கூட கொஞ்ச நாள் வேதனைப்பட்டேன். கடவுளை வணங்கினேன்; கண்ணீர் விட்டேன். இறுதியில் ஒரு மலையாள மந்திரவாதி சொன்னபடி நான் தடத்து கொண்டேன் – காரியம் சித்தியடைந்தது'' என்றாள் புஷ்பராணி.

''.....'' பெருமூச்சு விட்டேன் நான். எனக்கும் அந்த வழி கிடைக்காதா என்றுதான் பெருமூச்சு விட்டேன்.

''நீ உன் வீட்டுக்காரருக்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் குடிப் பழக்கத்தை உண்டாக்க வேண்டும். குடிப்பழக்கம் உள்ளவர்கள் பல பெண்களோடு உறவு கொண்டாலும் சொந்த மனைவியோடு இன்பமாக வாழத் தவறியதில்லை. எனக்குத் தெரிந்தவரை குடிப் பழக்கமுள்ள வர்களின் மனைவிகள் குழந்தைகளே நிறையப் பெற்று வாழ்வதைத்தான் நான் பார்த்திருக்கிறேன்'' – புஷ்பராணி இதைச் சொல்லுவதற்குத் தயங்கினாலும் உள்ளத்தைப் பிதுக்கிக்கொண்டிருக்கும் உணர்ச்சியை அவளால் மறைக்க முடியுமா?

இதைக் கேட்டதும், ஒமத் நிராவகம் குடித்த ஒரு வயதுக் குழந்தையைப் போல் நான் தொண்டையைக் காரிக்கொண்டு முகத்தைக் சுளித்தேன்.

இரவு முழுதும் எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. பரீட்சையில் தேறுவதற்கு விடிய விடியப் படிக்கும் மாணவனைப்போல் விழித்துக் கொண்டிருந்தேன். எனக்கும் இது ஒரு பரீட்சைதானே சுமதி!

பாதி ராத்திரிக்குப் பிறகு அவர் சூதாட்டக் கிளப்பிலிருந்து வீட்டுக்குத் திரும்பினர். ஆட்டத்தில் தோற்றிருப்பார் போலிருந்தது. கடுகடு என்று முகத்தை மாற்றிக் கொண்டிருந்தார்.

''என்னங்க, சாப்பிட வேண்டாமா? விடியப்போகிறதே!'' என்றேன்.

''போகும்போதே நீ அழுதாய். அங்கேயும் அழுது விடிந்தாற்போல் தான் ஆட்டமும் இருந்தது. மேகலா, புருஷன் எங்கே போனாலும் மனைவி வாழ்த்தித்தான் அனுப்ப வேண்டும். புருஷனுக்குத் துணைவி தான் மனைவி என்றார்களே தவிர, புருஷனுக்கு வாத்தியார் என்று சொன்னார்கள்! நீ எனக்கு வாத்தியாராக இருக்கிறவரை நான் ஆட்டத்திலே ஒருநாளும் ஜெயிக்க மாட்டேன்'' என்றார் அவர்.

''கோபப்படாதீர்கள். நானே முதல் நான் உங்களை வாழ்த்தி யனுப்புகிறேன். இன்றைக்குச் சாப்பிட்டுப் படுங்கள்'' என்றேன்.

சாப்பிட்டார். வயிறு நிறையச் சாப்பிட்டார்.

''கனவுபு நீங்குவதற்கு இந்த டானிக்கைச் சாப்பிட்டுப்பாருங்கள். ஊரிலிருந்து அப்பா அனுப்பிவைத் திருக்கிறார்கள்'' என்றேன்.

''நீ கொஞ்சம் குடித்துவிட்டு, மீதியைக் கொடு'' என்றார் அவர்.

''உங்கள் எச்சில் நான் சாப்பிட்டால்தான் எனக்குப் பெருமை. முதலில் நீங்கள் குடியுங்கள்'' என்றேன்.

அவர் குடித்தார்.

''துவர்க்கிறது மேகலை'' என்றார்.

''மருந்துகள் எல்லாமே இவிக்குமா! துவர்க்கிற மருந்திலும், கசக்கிற மருந்திலும்தான் சக்தி இருக்கிறது'' என்றேன்.

முக்கால் கோப்பையைக் குடித்து விட்டு, கால் பாகத்தை என்னிடம் கொடுத்தார். நானும் தட்டமுடியாமல் கண்களை மூடிக்கொண்டு குடித்துவிட்டேன். புருஷன் கொடுத்தது அல்லவா?

யார் முதலில் மயங்கியது என்றே தெரியவில்லை. அவர் புலம்பிக் கொண்டே இருந்தார்.

''அடுத்த மாதம் சூதாட்டக் கிளப்பை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும். மாடியில் ஏறி வரமுடிய வில்லை'' என்றார் வெறியில்.

சூதாட்டக் கிளப் மாடியில் இருக்கிறது போலிருக்கிறது என்று நானும் தூக்கக்கலக்கத்தில் எண்ணினேன்.

சுமதி!

விடியற்காலை நான்கு மணிக்கு என் வீட்டு மாடியில் அவரல் சத்தம் கேட்டது. மயக்கம் தெளியாத நிலையில் நான் கண் விழித்தேன்; என் வீடு குடை ராட்டினம் சுற்றுவதுபோல் தெரிந்தது எனக்கு. 'அத்தான்! அத்தான்!' என்று கத்தினேன். அவரைக் காணோம். ஆனால் மேல் மாடியில் மட்டும் பயங்கரக் கூச்சல் கேட்டது. தடுமாறிக் கொண்டு நான் மாடிக்கு ஓடினேன். சுமதி, என்னால் விவரிக்க முடிய வில்லையம்மா– புஷ்பராணி ரத்தக் காயங்களோடு குற்றுயிராகக் கிடந்தாள். அவர் – என்னுடைய அவர், மயக்க நிலையில் சோர்ந்து கிடந்தார்.

''என்னத்தான் இது?'' என்று கேட்டேன்.

அவர் பதில் சொல்லவில்லை. அதற்குள்ளாக ஊர் கூடிவிட்டது. புஷ்பராணியை மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றார்கள். அன்று பகலில் அவள் இறந்துவிட்டாள். குரல் வளை நெரிக்கப்பட்டுவிட்டதாகச் சொன்னார்கள். என் வீட்டுக்காரர் மீது கொலைக்குற்றம் – தண்டனை– இருபதாண்டுகள்!


இது யாருடைய வெறி? அவருடைய வெறியா? என்னுடைய வெறியால் கிளறிவிடப்பட்ட வெறியா?

நான் அறிந்த உண்மை இதுதான் –வெறி என்பது ஒரு தீய சக்தி தான்! அதைத் தூண்டிவிடுவது மது மட்டுமல்ல; ஒவ்வொருவர் ஆசையும் கடைசியாகப் பிரயோகிக்கும் 'ரிசர்வ் படை'யாக வெறியைப் பயன்படுத்துகிறது. மது அருந்துவோர் அந்த வெறியைத் தொடர்ச் சத்திலேயே பயன்படுத்தித் தோற்றுவிடுகின்றனர்.

சுமதி, என் கதையைச் சொல்லி விட்டேன். நீயாவது சச்சரிக்கையாகப் பிழைத்துக்கொள். ஏனெஸ்ருல், ரோஜாவாக இருக்கவேண்டிய நான் அரளிப்பூவானதுபோல் உன் கதையும் ஆகிவிடக்கூடாதல்லவா!

அன்புள்ள

மேகலை.


வளர்ந்தெழுந்து வண்ணம் தம்முடைய
உளங்களிக்கப் பேசிடவும் ஓடியாடித் தம்பி
இனத்தெழிய! உன்னுயிரை மாற்றி எனக்களிக்கும்
இனங்கதிராய் எம் நெஞ்சில் என்றும் நிலைத்திருப்பாய்



தமிழ் மக்கள் அனைவருக்கும் எங்கள்
பொங்கல் வாழ்த்துக்கள்



கைவசம் உள்ள படங்கள் :

பாவத்தின் சம்பளம்
பட்டணத்தில் பூதம் (கலர்)
வீரபாண்டிய கட்டபொம்மன் (கலர்)
நினைத்ததை முடிப்பவன் (கலர்)
அன்பே வா (கலர்)
காட்டு மனிதன் (கலர்)
திருவிளையாடல் (கலர்)
படிக்காத மேதை

வருகிறது **கலைஞரின் நெஞ்சுக்கு நீதி**

மக்கள் கலைஞர் ஜெய், கவிதா நடித்தது

உரிமையாளர் :

கே. ராமசாமி
செயலாளர், தி. மு. க. கிளை
சிவநாதபுரம்

விவிங் பேக்டரி
சிவநாதபுரம்
வெள்ளக்கோவில்

பார்ட்னர்: ஆதிலட்சுமி பைனான்சிங் கார்ப்பொரேஷன், கரூர்

உரிமையாளர் : இளங்கோ திரையரங்கம், உத்தமநாதபுரம்

மானேஜிங் பார்ட்னர்: K.R. மில்ஸ், H.O. வெள்ளக்கோவில்

கிளை : கோபாலபுரம், கோவை

பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

G S

கோவிந்தசாமி & கோ.,

பழ மண்டி

28/67, கருப்ப கவுண்டர் வீதி, கோயமுத்தூர்-641001

தொலைபேசி: 30139 இல்லம்: 33188 தந்தி: "AUMWALA"

உரிமையாளர்கள் :

N. கோவிந்தராஜ், P.மாக்கான், K. V. சாமி, K. S. சித்தாராமன்

நீதிக்கு வது நிம்மதி?

என்.வி.என்.சோமு

அகிலமே மிகவும் ஆவலுடன் கவனித்து வந்த ''அலகாபாத் தேர்தல் வழக்கு'' விசாரணை முடிவுற்றது!

சாட்சிகள் விசாரணை — குறுக்கு விசாரணை–வழக்கறிஞர்களின்வாதம் –எதிர்வாதம் – பதில் வாதம் இவையாவும் முடிவுற்றன! தீர்ப்பு சில நாட்களில் வழங்கப்படும் என்று நீதிபதி சின்கா அறிவித்தார்!

தாம் வழங்கப்போகும் தீர்ப்பை மிகவும் அமைதியான சூழ்நிலையில் எழுத விரும்பினர் அந்த நீதிபதி!

ஆனல் நீதிபதிக்கு அந்த அமைதி ஏற்படவில்லை. தினசரி ஒரு பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர் நீதிபதியைப் பார்க்க வந்தார்.

நீதிபதியோ அந்தப் பாராளுமன்ற உறுப்பினரை வரவேண்டாமென்று கேட்டுக் கொண்டார். அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் அப்போதும் தன் வருகையை நிறுத்தினர் இல்லை.

பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினரின் இந்த தினசரித் தொல்லையைத் தடுக்க எண்ணிய அந்த நீதிபதி, பக்கத்து வீட்டில் குடியிருந்த இன்னொரு நீதிபதியிடம் சொல்லி, அந்த பாராளுமன்ற உறுப்பினரின் வருகையைத் தடுக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொண்டார்.பக்கத்து வீட்டு நீதிபதி திரு. பரேக் அவர்களும் அந்தப் பாராளுமன்ற உறுப்பினரை வேண்டிக் கொண்டார்—வருவதை நிறுத்தும்படி!

அப்போதும் அந்த பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினரின் தொல்லை நின்றபாடில்லை!

ஆகவே நீதிபதி சின்கா தலை மறைவாகிவிட முடிவு செய்தார்!

தன் வீட்டுக்குள்ளேயே நீதிபதி தலைமறைவாகி விட்டார்! வராந்தாபக்கம் கூடத் தலைகாட்டுவது கிடையாது!

நீதிபதியைத் தேடிக் கொண்டு வருபவர்களுக்கெல்லாம், நீதிபதி உஜ்ஜயின் நகரில் உள்ள தனது சகோதரர் வீட்டுக்குப் போய்விட்டார் என்று தகவல் சொல்லப்பட்டது! தொலைபேசியிலும் நீதிபதி பேசுவது கிடையாது! ஏறத்தாழ 12 நாட்கள் நீதிபதி இவ்வாறு தனது வீட்டிலேயே அடைபட்டுக் கிடந்தார்!—நெருங்கிய நண்பர்கள் கூட அவரைச் சந்திக்க முடியவில்லை!

நீதிபதி இவ்வாறு தலைமறைவாவதற்கு முன்னல் இன்னொரு பிரமுகர் அவரைப் பார்க்க வந்தார்.

அந்தப் பிரமுகர், நீதிபதியிடம், தான் டெல்லிக்குச் சென்றிருந்ததாகவும், அங்கே அவருடைய பெயர் சுப்ரீம் கோர்ட் நீதிபதி பதவிக்கு குறிப்பிடப்பட்டதாகவும் கூறினர்.

நீதிபதி புரிந்து கொண்டார். சுப்ரீம் கோர்ட் நீதிபதி பதவி பெரிய நாற்காலி என்றும் – தான் மிகச் சிறிய மனிதன் என்றும் கூறி அந்தப் பிரமுகரை அனுப்பி வைத்துவிட்டார்!

தீர்ப்பு அநேகமாக எழுதி முடிக்கப்பட்டுவிட்டது! அப்போது டேராடூனில் இருந்து நீதிபதி சின்காவுக்கு ஒரு தொலைபேசி வந்தது! தொலைபேசியில் அழைத்தவர் அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் பிரதம நீதிபதி! நீதிபதி சின்கா அவரிடம் பேச வேண்டியதாயிற்று! இந்திய அரசாங்கத்தின் கூடுதல் உள்துறை செயலாளர் தம்மைச் சந்தித்ததாகவும், தீர்ப்பை ஜூலை மாதம் வரை ஒத்திப் போடும்படி அவர் விரும்புவதாகவும், நீதிபதி சின்காவிடம் பிரதம நீதிபதி கூறினர்.

அகில உலகப் பெண்கள் ஆண்டிலே ஒட்டி – இந்த ஒத்திவைப்பு ஒரு முக்கிய பிரமுகருக்கு – உதவக்கூடும் – என்று கருதப்பட்டது! பிரதம நீதிபதியின் இந்த வேண்டுகோள் – நீதிபதிக்கு மிகவும் ஆத்திரத்தை மூட்டிவிட்டது! அது முடியாது என்று பிரதம நீதிபதியிடம் கூறிவிட்டு, நீதிபதி நேராக உயர் நீதிமன்றம் சென்று, பதிவாளரை அழைத்துத் தீர்ப்புக்கு நாள் குறித்து விட்டார்!

அலகாபாத் நகரில் ஒரே பரபரப்பு! தீர்ப்பில் என்ன எழுதியிருக்கிறது என்று கண்டுகொள்ள ஒரு விசேஷ ஏ.ஐ.டி. பட்டாளம் பயன்படுத்தப்பட்டது!

தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முதல் நாள் இரவு 11 மணி! ஏ.ஐ.டி. படை, நீதிபதி சின்காவின் செயலாளர் மன்னலால் வீட்டிற்குள் புகுந்தது! தீர்ப்பில் என்ன எழுதியிருக்கிறது என்று கூறும்படி மன்னலாலைக் கேட்டார்கள்! தனக்கு எதுவும் தெரியாது என்று கூறினர் மன்னலால்! இச்சகம் பேசியும், திர்ப்பந்தம் செய்தும் சி.ஐ.டி. பட்டாளம் மன்னலால் வாயிலிருந்து வார்த்தைகளே வரவழைக்க முயற்சி செய்தது – பலிக்கவில்லை! நீண்ட நேரம் ஆயிற்று. சி. ஐ. டி. பட்டாளம் சொல்லியது, ''மீண்டும் அரை மணி நேரத்தில் வருவோம். தீர்ப்பு என்ன என்று சொல்ல வேண்டும்'' என்று மிரட்டிவிட்டுச் சென்றது!

மன்னலால் பயந்து விட்டார்! அதிர்ச்சிக்கு ஆளானர்!

ஒரு நிமிடம் கூட வீணாக்க வில்லை! தனது மனைவியை உறவினர் ஒருவர் வீட்டுக்கு அனுப்பிவிட்டு, நேராக நீதிபதி சின்காவின் வீட்டில் சென்று அடைக்கலம் புகுந்தார்! அன்று இரவு அவர் காப்பாற்றப்பட்டார்!

மறு நாள் காலை வீட்டிற்குத் திரும்பி வந்து, நீதிமன்றத்துக்குப் புறப்பட மன்னலால் தயாராகிக் கொண்டிருந்தார். காலை 8 மணி! மீண்டும் போலீஸ் வந்துவிட்டது! இந்த முறை, இந்திரா காந்திக்கு ஆஜரான வழக்கறிஞர்களின் இரண்டு ஜீனியர்களும் கூடவே வந்து விட்டனர். மீண்டும் தீர்ப்பைப்பற்றிக் கேட்டனர். இந்திரா காந்தியே மிக முக்கிய தொலைபேசியில் Hot line) காத்துக் கொண்டிருப்பதாகவும் மன்னலால் விரும்பினல் அவரே இந்திரா காந்தியிடம் பேசலாம் – என்றும் கூறப்பட்டது!

மன்னலால் தனக்கு நேரமாகிறது என்று கூறி மீண்டும் நீதிபதி சின்கா வீட்டிற்குச் சென்று விட்டார்.

தீர்ப்பு வழங்கப்பட்டது!— இந்திரா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது!

அதற்குப் பிறகுதான் பல அவசரச் சட்டங்கள்— சட்டத் திருத்தங்கள்— நெருக்கடி நிலைப் பிரகடனங்கள்—''மிசா'' கைதுகள் – பல்வேறு அடக்குமுறைகள் — அக்கிரமங்கள்— இவ்வளவும் நடந்தேறின!

அலகாபாத் நீதிபதி சின்கா தீர்ப்பு வழங்கும்போது நாட்டில் ''நெருக்கடி நிலை'' அமுலில் இல்லை! அலகாபாத் தீர்ப்பு வெளிவந்த பிறகே நெருக்கடி நிலை அமுல் செய்யப்பட்டது!

''நெருக்கடி நிலை'' அமுலில் இல்லாத நேரத்திலேயே ஒரு நீதிபதி இவ்வளவு நெருக்கப்பட்டார்– அவரது செயலாளர் தொல்லைக் காளானர்— என்ருல், நெருக்கடி நிலைப் பிரகடனத்திற்குப் பிறகு...? ''ஏன்'' என்ருல் நிறைவாசம் ''இம்'' என்ருல் வனவாசம் என்ற நிலை ஏற்பட்டபிறகு?

கழக ஆட்சி கலைக்கப்பட்டு— கலைஞர் மீதும் – கழகத்தவர் மீதும்— விசாரணைக் கமிஷன்கள்— வழக்குகள் நெருக்கடி காலத்தில் போடப்பட்டனவே... அப்போது..?

உங்கள் நிந்தனை சிறகடித்துப் பறக்குமானல் அதற்கு நிச்சயம் நானல்ல பொறுப்பு!



சினிமா ரசிகர்களுக்கு
எங்களது பொங்கல்
வாழ்த்துக்கள்!

முருகன் தியேட்டர்

அவினாசி ரோடு
(மேம்பாலம் அருகில்)
கோவை

WITH THE BEST COMPLIMENTS FROM

Phone: 25571

MANUFACTURERS OF:

WELDED CUSHION SEAT COVERS: FOR CARS, SCOOTERS, MOTOR CYCLES & FURNITURES

DEALERS IN CAR MATS & SCOOTER MATS.

ROYAL AUTO MACHINERY

LINERS AND UPHOLSTERS

STATE BANK ROAD,

COIMBATORE-641 018

அனைவருக்கும் எங்கள் இதயங்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!

எஸ். வி. பைண்டிங் ஒர்க்ஸ்

எண். 160, மௌபரீஸ் ரோடு,
ஆள்வார்பேட்டை, சென்னை - 18.

ஏ.வி.பி.ஆசைத்தம்பி எம்.பி.

சீதா—ராமன்



இக்கதையில் வரும் சீதாவுக்கும் இராமாயண சீதைக்கும் நிறைய ஒற்றுமைகள்.

மன்னன் மகள் சீதை, பல கலீகள் கற்றுத் தேர்ந்ததுபோல கதாநாயகி சீதாவும் ''பி.ஏ'' பட்டம் பெற்றவள்.

ஒரு பெண் வயதுக்கு வந்து விட்டால்... காலா காலத்தில் கழுத்தில் தாலி விழ, ஏழையோ பணக்காரனே, மன்னனே மகா சக்ரவர்த்தியோ, எந்த வர்க்கத்தைச் சேர்ந்த தகப்பனுக இருந்தாலும், தக்க முயற்சி எடுப்ப துண்டு.

மன்னன் மகள் என்றுல், சுயம் வரமே நடக்கும். மற்றவர் மகளாய் இருந்தால், ஒட்டுமொத்தமாக இல்லாமல், ஒருவர் பின் ஒருவராகப் பெண் கேட்டு வருவது வழக்கம்.

சீதாவைப் பெண் கேட்டு பல பேர் படையெடுத்தது உண்டு. மகளுக்கு ஏற்ற புணனன் இன்னும் அமையவில்லீயே — என்ற கவலீ சீதாவின் பெற்றோர்களுக்கு இருந்தது.

அழகிருந்தால் படிப்பில்லீ; படிப்பிருந்தால் புணம் இல்லீ; இரண்டும் இருந்தால் நல்ல குடும்பமாக இல்லீ. இப்படி ஏதாவது ஒரு குறை இருந்துகொண்டே வந்தது.

சீதாவுக்கு மாப்பிள்ளீ இனி மேலா பிறக்கப் போகிறுன்? சீதையைத் தேடிவந்த இராமன் போல சீக்கிரம் கணவன் கிடைப்பான் — என்று ஆருடம் கூறினர் பலர். நல்ல மாப்பிள்ளீக்கு பல தரகர்களிடமும் சொல்லி வைக்கப்பட்டது.

இன்று வியாபாரத்தில் பொருள் வாங்க அல்லது விற்க மட்டுந் தான் தரகர் என்பதில்லீ. வீடு வாங்க அல்லது விற்க வீடிவீடிக்குத் தரகர்கள் சுற்றிக் கொண்டிருப்பது போல், விவாகத்திற்கு பெண் ணேயோ ஆணேயோ ஏற்பாடு செய்யவும் இன்று தரகர்கள் தயாராய் இருக்கின்றனர்.

''நல்ல வரன். பெயர் பொருத்தமோ ஏ—1. சீதா—ராமன்.

தசரதனுக்கு இராம இலட்சுமண பரத சத்ருக்கன் போல இந்த ராமனேடு பிறந்தவர்களும் மூவர்.



ஆஸ்தியோ அகண்ட சமுத்திரம்; ரொக்கமோ அந்தக் கடலின் ஆழ அளவு.

பையன் படிப்பிலோ மாஸ்டர்; அழகிலோ அந்தக் கால மன்மதன். நீங்கள் ''ம்'' என்று சொன்னுல் உடனே திருமணம்.''

-இப்படி ஒரு புரோக்கர் பெரிய புராணமே பாடிக் கொண்டு, பதிலுரைக்குக் காத்து நின்றுன்.

''என் மகள் சீதாவுக்கு பையணேப் பிடித்தால் எனக்கு ஆட்சேபணேயே இல்லீ''—என்றார் தந்தை.

''சீதா—ராமன்''

இதை ஈடு இணேயற்ற மாபெரும் பெயர் பொருத்தம் — என்று ஜோதிடர்களும், தரகர்களும் கூறியதை சீதா மட்டும் ஏற்றுக் கொள்ளவில்லீ.

'சீதா — ராமன் என்ற பெயரில் பொருத்தம் இருப்பதாகக் கூறுவது பிதற்றலப்பா. பச்சைப்பொய் யுங்கூட.

சீதா — ராமன் என்ற பெயர்கள், இராமாயணத்தின் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட சொற்கள் தான்.

அந்த இராமாயணத்தில் சீதையும் இராவணும் பார்வைக்கும் படத்தின் தோற்றத்திலும் பொருத்தமான ஜோடிதான். ஆனுல்— வாழ்க்கையில்?

சீதை சுகங் கண்டாளா? பட்டத்தரசியாக அரண்மனேயில் வாழ வேண்டிய சீதை, பரதேசி கோலத்தில் ஆரண்யம் புகுந்தாள். அங்காவது வாழ்ந்தாளா? சிறை பிடிக்கப்பட்டாள். ஒரு வருடம், இரு

வருடமல்ல, இராமனின் 14 வருட வனவாசம் முடியும்வரை, சீதைக்கு ஆயுள் தண்டனை!

விடுதலைக்குப் பின்னராவது சீதைக்கு விமோசனம் கிடைத்ததா? சீதையின் இளமை எல்லாம் சிறைக்கு இரையாஞலும், அடுத்த கட்டத்திலாவது சீதை அனந்தப்பட அயோத்தி அனுமதித்ததா? மீண்டும் காட்டுக்கு அனுப்பப்பட்டாள் சீதை. காப்பு வதி என்று தெரிந்தும் சுவ ரெக்கம் சிறியுமின்றி சித்திரவதை செய்யப்பட்டாள் சீதை. காட்டுக்கு அனுப்பப்பட்ட சீதை கடைசி வரை காட்டுக்குத் திரும்பவே இல்லை.

இப்போது சொல்லுங்கள். சீதாராமன் பொருத்தமான பெயரா?

ஆஞல்—

இந்த ஜானகியை இம்சிக்க இராவணன் எவனும் வரவில்லை. அந்த இராமச்சந்திரனே இராவணனுவும் இரட்டை வேடம் போட்டு அந்த ஜானகியை சிறை வைத்து, சித்திரவதை செய்து—பாவம், அந்த ஜானகி காலமெல்லாம் அழுது அழுது, இப்பொழுதெல்லாம் கண்ணீர் விடுவதே இல்லே. காரணம்—கண்ணீர்க்குளம் வரண்டு விட்டது; காலியாகிவிட்டது. இப்போது அவள் கழுத்திலே தாலி இருந்தும், கணவன் இருந்தும் கைம்பெண்.

இதைக் கதை கதையாக என் தோழி என்னிடம் சொல்லி இருக்கிருள்.

மனம் கொண்டவரா — என்பன போன்ற குண நலன்களைத்தான் கணவன்—மனைவியாகப் போகிறவர்கள் ஒருவரை ஒருவர் கண்டறிய வேண்டுமே தவிர, வெறும் பெயர் பொருத்தத்தை அல்ல.

அணும் பெண்ணும் பழகவோ, பழகி ஒருவரை ஒருவர் அறியவோ சுதந்திரமோ, பக்குவமோ, சூழ்நிலையோ இல்லாத இன்றைய சமுதாயத்தில் பெற்றோர்கள்தான் எப்படியாவது இதனைக் கண்டறிய வேண்டும்.

இதை எல்லாம் செய்யாமல் தரகன் கூறுகிற வெறும் பெயர் பொருத்தத்தை மட்டும் வைத்து என்னே விலே பேசி விடாதீர்களப்பா!'

அப்பா! பெயர் பொருத்தத் திற்கு இன்னெரு உதாரணங்கூட என் நினைவுக்கு வருகிறது. என் தோழி ஒருத்தியின் சித்தியின் வாழ்க்கை.

அவள் பெயர் ஜானகி. கணவன் பெயர் ராமச்சந்திரன். ஜானகி — ராமச்சந்திரன் பெயரும் பொருத்தம். பார்க்கிறவர்களுக்கு ஜோடியும் பொருத்தம்.

பெயர் பொருத்தம், ராசி, நட்சத்திரம் அது இது என்கிற ஜோதிடப் பொருத்தம் — என்கிற போலி *மாய வார்த்தைகளில் யாரும் மயங்கிவிடக் கூடாது.

குணமுள்ளவரா-பண்புள்ளவரா-பகுத்தறிவும் ஆற்றல் பெற்றவரா-கருத்தொருமித்து வாழும் காதல்

—இப்படி தன் தந்தையிடம் கூறி விட சீதா நினைத்தாளே தவிர, கூறவில்லே. கூறுவதும் அதிகப் பிரசங்கித்தனமாக இருக்கும் என்று சீதா கருதி பேசாதிருந்து விட்டாள்.

தரகனே தனக்கு நல்ல வரமானம் இரு பக்கமும் வரும் என்ற கருத்தில் காரியத்தை வேகமாகச் சுற்றி விட்டான். சீதாவை ராமன் பெண் பார்க்க குடும்பத்துடன் வர இருக்கிற நாளும் நேரமும் குறிக்கப்பட்டன.

அந்த நாள்— அந்த நேரம்— எப்போது வரும் என்ற ஏக்கம் சீதாவின் உள்ளத்தைத் தாக்காமல் இல்லே.

மணமகன் ராமன் அப்படி இப்படி என்று அன்றெரு நாள் தன் தந்தையிடம் தரகன் அளந்து கொண்டிருந்த அந்த வார்த்தை களெல்லாம் சீதாவின் சித்தகேயில் சிக்கி, மன்மத லீலையில் அவள் மனம் மாட்டிக் கொண்டு அலே மோதியது.

சுயம்வரத்திற்கு வருகிற இராமனேத் தரிசிக்க உப்பரிகையில் நின்ற சீதையைப் போல, சீவி சிங்காரித்து தன் அறையில் தயாராகக் காத்திருந்தாள் சீதா.

''மாப்பிள்ளே வந்தாச்சு. உன்னேக் கூட்டி வரும்படி அம்மா அனுப்பினுங்க'' என்று அங்கு ஓடி வந்த தோழி படபடக்கக் கூறினுள்.

கலீர் கலீர்— என்ற கம்பர் காவிய நயத்தோடு அடி எடுத்து வைத்து வந்து நின்ருள் சீதா.

''இதுதான் என் மகன் ராமன்.''

''இதுதான் என் மகள் சீதா.''

இப்படி அறிமுகம் ஆரம்பமாயிற்று.

நாணிக் கோணி குவிந்து நின்ற சீதா, சிறிது நிமிர்ந்தாள்.

அவளும் நோக்கினுள். அண்ணலும் நோக்கினுன். கண்ணெடு கண் நோக்கின. இராமனேப் பார்த்து இராமாயண சீதை பூரித்து, அவள் அங்கமெல்லாம் வீங்கி விரிந்து, அவள் அணிந்திருந்த ''மேகலே'' தெறித்தது போல், சீதாவின் சிந்தையெல்லாம் சூடேறி, மார்பகம் விம்மி ஒரு ''பட்டன்'' கூடத் தெறித்தது.

அன்னா அன்னா படும் நோய்

இந்தி மொழி கட்டாயம் இல்லை; திணிக்கப் போவதில்லை; ஆட்சி மொழியாக அவசரப்பட்டு ஆக்கிடப்போவதில்லை. ஆங்கிலத்தை உடனடி யாக அவசரப்படுத்தி நீக்கிடப்போவதுமில்லை; என்று ஆணவத்தைப் பதுங்க வைத்துக்கொண்டு பேசிடக்கேட்கிறோம். எனினும், மெள்ளமெள்ளப் படரும் நோய் போல இந்தி எல்லா சந்து பொந்துகளிலும் நுழைகிறது, குழைகிறது. நமது தன்மானம் பறிபோகிறது.

—அறிஞர் அண்ணா.

கண்ணோடு கண் மட்டுமல்ல, பெற்றோரோடு பெற்றோரும் பேசிய பின் காலதாமதமாகுமா?

சீதா — ராமன் திருமணம் வெகு ஜோராக நடந்து முடிந்தது.

சீதாதான் அந்த வீட்டில் அடி யெடுத்து வைத்த முதல் மூத்த மருமகள். கணவனுக்கு மனம் நிறைந்தவளாகவும், மாமி மாமனு ருக்கு மதிப்பு மிக்க மருமகளாக வும், கணவனின் தம்பிகளுக்குத் தக்க அண்ணியாகவும் சீதா திகழ்ந்து வந்தாள்.

''வருடம்'' பிறக்கத்தான் பன்னி ரெண்டு மாதங்கள். ஆனால்— குழந்தை பெற்றிட பத்து மாதங் கள். அதன்படி சீதா ஆண் குழந் தைக்குத் தாயானாள்.

சீதா — ராமன் — என்ற பெயர் பொருத்தம் உள்ள தம்பதிகள் பெற்ற குழந்தைக்கும் பொருத்த மாகப் பெயர் சூட்டுவதில் ஆச் சரியமென்ன? தன் குழந்தைக்கு ராமன் ''லவ்''வில் பிறந்த குழந்தை என்ற காரணத்தால் ''ல(வ்)வன்'' என்று பெயர் வைத் தான். சீதா மகிழ்ந்தாளே தவிர மறுப்புக் கூறவில்லை.

லவன் பிறந்த யோகமோ என்னவோ அவன் பிறந்த ஒரு வருடத்திற்குள்ளே, அந்த வீட் டுக்கு மேற்கொரண்டு இரு மரு மகள்கள் வந்து சேர்ந்தனர்.

அந்த வீட்டில் மொத்தம் மூன்று இளம் தம்பதிகள் வந்த வுடனே, இட நெருக்கடி ஏற் பட்டு, சீதாவும் ராமனும் தங்கள் குடும்பத்தின் இன்னொரு சொந்த வீட்டில் தனிக் குடித்தனம் வந் தனர்.

தனிக் குடித்தனம் ராமனுக்கு இனிமையாக இருந்தது. ஆள் இல்லா வீட்டில் கிழவன் கூடச் சதா துள்ளி விளையாடலாம் என்ற துடிதுடிப்பு ராமனுக்கு.

ஆனால்— சீதாவுக்கு?

மாமன் மாமியோடும் மற்ற வர்களோடும் கூட்டுக் குடும்ப மாக வாழ்ந்துவிட்டு தனிக் குடித் தனம் வந்தது இராமாயண சீதை கணவனோடு நாட்டைவிட்டுக் காட் டுக்குப் போனது போன்ற உணர்வு ஏற்பட்டது.

இப்பொழுதெல்லாம் சீதாவுக்குப் பொழுது போவதே கஷ்டமாக இருந்தது. காலையில் கணவன் ஆபீஸ் சென்றுல் மதியம் சாப் பிட்டுவிட்டுச் செல்வதும் பின்னர் இரவு திரும்புவதுமாக இருந்த தால் இடையில் உள்ள நேரத் யில் குழந்தையோடு கொஞ்சுவதும்- ரேடியோவைத் திருப்புவதும்—டேப் ரிகார்டர் கேட்பதிலும் கூட பொழுது வேகமாகப் போவதாக சீதாவுக்குப் படவில்லை.

இடையிடையே எதிர்வீட்டு ஏகாம்பரத்தின் மனைவி கமலா வந்து பேசிவிட்டுச் செல்வாள்.

தினசரியும் மாலை நேரம் மாமி யார் வீடு போய்வர சீதா தவறு வதில்லை. பெரும்பாலும் மாலையில் காப்பி சீதாவுக்கு மாமியார் வீட் டில்தான். சில நேரம் கணவன் ராமனும் கூடச் சேர்ந்து கொள்வ துண்டு.

வாரம் ஒரு முறை சினிமாவோ நாடகமோ பாராமல் இருப்ப தில்லை. சீதாவும் ராமனும் எங்கே வெளியே சென்றுலும் ஏகாம்பர மும் கமலாவும் சேர்ந்து செல்வது வழக்கமாகி விட்டது.

லீவு நாட்களில் காலையிலேயே மாமியார் வீடு சென்று வர சீதா விரும்புவாள். ஆனால் ராமன் விடுவதில்லை. ஏகாம்பரம், கமலா ஆகியோருடன் எங்காவது பிக்னிக் செல்வது அல்லது தன் வீட் டிலோ அல்லது ஏகாம்பரம் வீட் டிலோ நால்வரும் சீட்டாடுவது போன்ற கேளிக்கைகளில் நாளும் பொழுதும் போய்க் கொண்டிருந் தன.

ஒரு நாள் இரவு நால்வரும் அமர்ந்து சீட்டாடிக் கொண் டிருந்தபோது, தன் கால் விரல் களை இன்னொரு கால் சுரண்டு வதை உணர்ந்த சீதா குனிந்து பார்த்தாள். தன் கணவன் காலல்ல, ஏகாம்பரத்தின் மோக வெறி கால் என்பதை உணர்ந் தாள்.

இவன் பெயர் ஏகாம்பரமா? அல்லது இராமனிடமிருந்து சீதை யைப் பிரித்த மாரீசனு?

அமைதியாகவும் ஆனந்தமாக வும் சென்று கொண்டிருந்த தன் வாழ்க்கைப் படகை புயல் தாக்க ஆரம்பித்து விட்டதை அறிந்து அஞ்சினாள் சீதா.

படகு சேதமில்லாமல் கரை சேருமா? அல்லது கவிழ்ந்துவிடுமா?

இதை நினைத்துப் பார்க்கவே சீதாவுக்கு நடுக்கமாக இருந்தது.

எதிர் வீட்டு கமலா ஊரில் இல்லை. பிரசவத்திற்கு தாய்வீடு போய் விட்டாள். இரண்டு மாதங் களாக நல்ல வேளை சீட்டாட் டம் இல்லை. வெளியே சென்றுல் எதிர் வீட்டு ஏகாம்பரத்தின் கூட்டு இல்லை. இது சீதாவுக்கு எவ் வளவோ நிம்மதியைத் தந்தது.

அன்று காலை 11 மணி இருக் கும். சீதா எல்லா வேலைகளையும் முடித்து விட்டு, தன் குழந்தை லவனின் மழலை மொழிகளை ரசிச் சொல்லி, டேப்பில் ரிகார்டு செய்து கொண்டிருந்தாள்.

அப்பொழுது 'காலிங் பெல்' கணீர் என்று அடித்தது.

தபால்காரனுக இருக்கலாம் என்று எண்ணி கதவைத் திறந் தாள் சீதா.

எதிரே ஏகாம்பரம்.

சீதா திடுக்கிட்டாள்.

''ராமன் இல்லேயா?''

''வர ஒரு மணியாகும்.''

''என் போன் ரிப்பேர். அவசர மாக ஒரு போன் போட வேண் டும்.''

இப்படி சொல்லிக் கொண்டே வெளியே நின்ற ஏகாம்பரம் உள்ளே வந்து விட்டதால் என்ன செய்வதென்று புரியாமல் சீதா விலகி நின்றுள்.

போன் அருகே சென்ற ஏகாம் பரம் சில நம்பர்களைச் சுற்றினான்; ஏதேதோ பேசினான். ''பேசி விட் டேன். வருகிறேன் சீதா'' என்று சொல்லிக் கொண்டே ஏகாம்பரம் வெளிக் கதவை நோக்கிப் புறப் பட்டான்.

''அப்பாடா'' என்று பெரு மூச்சு விட்ட சீதா, ஆபத்து அகன்று விட்டதறிந்து மகிழ்ந்து, கதவை மூட அவன் பின்னுல் சென்றுள்.

ஆனால்—

ஏகாம்பரமும் தந்திரமாகக் கதவை மூடிவிட்டுத் திரும்பினான்.

திகைத்தாள் சீதா.

''சீதா! உன்னோடு தனியாகப் பேச வேண்டும் என்று எத்தனையோ தடவை முயன்றேன். இன்றுதான் சந்தர்ப்பம் கிடைத்தது. சீதா! வெளியே தெரிந்து விடுமோ என்று பயப்படாதே. ராமன் இல்லாத நேரத்தில்... இரகசியமாகவே'' என்று சொல்லிக் கொண்டே ஏகாம்பரம் முன்னேறினான்.

''டீ, துரோகி! நண்பனைப் போல் நடிக்கும் நயவஞ்சகா! மரியாதையாகப் போய்விடு. இல்லையேல் சப்தம் போட்டு...'' என்று சீதா சொல்லிக் கொண்டிருக்கும்போதே, நெருங்கி வந்து விட்ட ஏகாம்பரம் சீதாவின் கையைப் பிடித்து இழுத்து விட்டான்.

''விடுடா கையை'' என்று கூறி தன்னை விடுவித்துக் கொண்ட சீதா, கீழே உட்கார்ந்திருந்த தன் குழந்தையைப் பாய்ந்து தூக்கிக் கொண்டு, பக்கத்தில் இருந்த அறைக்குள் ஓடி, கதவை மூடித் தாழ்ப்பாள் போட்டுவிட்டாள்.

''சீதா! கதவைத் திற. நீ என்னை விரும்புவாய் என்ற எண்ணத்தில்தான் வந்தேன். உனக்கு இஷ்டமில்லையேல் கட்டாயப்படுத்த மாட்டேன். இனிமேல் உன் நினைவை நான் நீக்கிக் கொள்கிறேன். நடந்ததை மறந்து என்னை மன்னித்துவிடு'' என்று சொல்லிவிட்டு, வெளி வாசலை நோக்கி நடந்தான் ஏகாம்பரம். கதவையும் திறந்தான்.

ராமன் நின்று கொண்டிருந்தான் எதிரே, எதிர்பாராதவிதமாக.

ஏகாம்பரத்திற்கு அதிர்ச்சி. ஓடி விடலாமா என்று கூட நினைத்தான்.

ஆனால்—

ராமன் சட்டென்று ஏகாம்பரத்தின் சட்டையைப் பிடித்து ''எங்கேயடா வந்தாய்?'' என்று ஆத்திரத்தோடு கேட்டான்.

''மரியாதையாக சட்டையை விட்டு வாயை மூடு. இல்லையேல் உன் மானந்தான் போகும்'' என்று கூறிய ஏகாம்பரம் ராமனை உதறித் தள்ளிவிட்டுப் போய் விட்டான்.

வீட்டுக்குள்ளே வந்த ராமன் சுற்றுமுற்றும் பார்த்தான். சீதா அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

சீதாவின் தோற்றம் ராமனுக்கு அலங்கோலமாகத் தெரிந்தது. அறைக்குள்ளே இருந்து அவள் வெளி வந்தது, பள்ளியறையில் படுத்தெழுந்து வந்தது போல் தோன்றியது. ராமனின் இரத்தம் கொதிப்படைந்தது.

''எத்தனை நாளாக இந்தக் கள்ளக் காதல்?''

இப்படி ராமன் எய்த அம்பு, சீதாவின் மார்பிலே பாய்ந்து, இதயத்தைத்துளைத்து முதுகுவழியே வெளியேறியது போன்ற வேதனை.

கடுங் கோபத்துடன், கண்ணகி பாண்டிய மன்னனைக் கனல் பறக்கப் பார்த்தது போல், ராமனைப் பார்த்தபடி நின்றாள் சீதா.

''மானங் கெட்டவளே, என்னடி முறைக்கிறாய்?'' என்று கூறிய ராமன் ஓங்கி அறைந்தான் சீதாவை.

அப்போதும் சீதா அசையவில்லை, கலங்கவில்லை. எதிர்த்து வரும் ஈட்டிக்கு இமை கொட்டுவது பேடித்தனம் என்ற போர்க் குணத்தோடு நிமிர்ந்து நின்று கொண்டிருந்தாள்.

''குழந்தையைக் கொடுடி. விபச்சாரியான உனக்கு இனி இந்த வீட்டிலே இடமில்லை. ஓடு'' என்று கூறிய ராமன் குழந்தையைப் பறித்துக் கொண்டதோடு, மேலும் அவள் கன்னத்தில் அறைந்தான்.

சீதா அந்த நிலையிலும் பதில் பேசவில்லை; அழுவுமில்லை; அவ்விடத்தை விட்டு அகன்றாள். அவள் கால்கள் நடந்தன; நடந்து கொண்டே இருந்தன.

சந்தேகத்துக்கு ஆளான சீதையை இராமன் காட்டுக்கு அனுப்பியபோது, தம்பி இலட்சுமணனையும் துணைக்கு அனுப்பி, கருணையாவது காட்டினான்.

ஆனால்—


கண்ணால் கண்டதும் பொய்!
காதால் கேட்டதும் பொய்!
தீர விசாரிப்பதே மெய்!

நமது முன்னோர்களின் இந்த மூன்று வரி மூலப்பொருளை, சிறிது கூடத் தெரிந்து கொள்ளாத, பெயர் பொருத்தமுள்ள மகாப் பெரிய புருஷன், /பெற்ற குழந்தையைப் பறித்துக் கொண்டு, உதையும் கொடுத்து ''ஓடு'' என்று கூறுவதா?

சீதா இனி எங்கே ஓடுவது? ஓடி ஆடி பழக்கப்பட்ட கால்களாக இருந்தால், யார் படிப்பாவது சாயி இடந்தேடலாம். சீதாவின் கால்கள் இதுவரை தெரியாமல் கூட, தவறுன பாதையில் அடி எடுத்து வைத்ததில்லையே! பழக்கப்பட்ட பாதையிலேயே அவள் கால்கள் முன்னேறிக் கொண்டிருந்தன. மாமியார் வீடு அருகே வந்து விட்டதை சீதா உணர்ந்தாள். தன்னைச் சரி செய்து கொண்டு சீதா உள்ளே புகுந்தாள்.

''அத்தே! சீதாக்கா!'' என்று மற்ற மருமகள்கள் கூற, ''என்னம்மா சீதா இந்நேரம்?'' என்று மாமியார் கேட்டாள்.

''வீட்ல பைப்ல தண்ணீர் வரல. குளிச்சிட்டு வர்றேன்னு சொல்லிட்டு வந்தேன்'' என்றாள் சீதா. சீதா வீட்டை விட்டுச் சென்றதோ இல்லையோ குழந்தை ''அம்மா'' என்று ஆழ ஆரம்பித்து விட்டது. அம்மா— என்ற சொல் கேட்டதும் ராமனுக்கு மேலும் ஆத்திரம் பொங்கியது. குழந்தையையும் இரண்டு போடு போட்டான். சீதாவைப் போல் குழந்தையால் தாங்கிக் கொண்டு



தேர்தல் வேண்டாமா?

ரயில்லே கம்பார்ட்மெண்டில் ஏறுகிறபோது தவறி இன்னொருவர் கால் மீது பட்டுவிட்டால் முறைக்கிறோம். ''பார்த்துப் போகக் கூடாதா?'' என்கிறோம். ''இல்லண்ணே; கவனிக்கலே'' என்பான் அவன். ''கவனிக்காமல் இங்கே ஏன் வந்தாய்?'' என்போம். உடனே சண்டை நடக்கும்! உணர்ச்சி அங்கே இருக்கிறது. அற்ப விசயங்களுக்கு எல்லாம் நமக்கு உணர்ச்சி இருக்கிறது. ஆனால், மக்களுடைய ஆத்மா என்று சொல்லப்படுகிற மொழி அழிக்கப்படுகிறதில் உணர்ச்சி வருவதில்லையே, ஏன்?

10 பிணங்கள் இந்தி ஆதிக்கத்திற்காக இந்திக்காரர்கள் நடுப்பாதையிலே போடுவார்களேயானால் தமிழனுடைய பிணம் பத்துக்குப் பத்து நூறு பிணங்கள் தமிழ்நாட்டில் தமிழுக்கு விழும் என்று எடுத்துக் காட்டவேண்டும்.

-அறிஞர் அண்ணா

மௌனமாக இருக்க முடியுமா? குழந்தை ஒங்கி அழுதது. அழுகையை நிறுத்த ராமன் என் னென்னமோ செய்து பார்த்தான். முடியவில்லே. பிளாஸ்க்கில் இருந்த பாலே ஊற்றிக் குடிக்கக் கொடுத் தான். தாய் மார்பில் பால் பருகு வது போல் குழந்தை கருகியதோ என்னவோ அழுகையை நிறுத் தியது.

வீட்டின் நடுவே இருந்த ரேடியோ டேப்ரிக்கார்டர் விளக்கு அணேயாமலும், டேப் ஓடிக் கொண்டும் இருந்ததை ராமன் கண்டான்.

ராமனின் மூளே இப்போதுதான் வேலே செய்ய ஆரம்பித்தது.

'ஏகாம்பரமும் சீதாவும் தனி யாக வீட்டில் இருந்தபோது இந்த டேப் ஓடிக் கொண்டிருந்திருக் கிறது. இது சாதாரண டேப் ரிக் கார்டர் அல்ல. ஒரு பின் விழும் சப்தத்தையும், தூரத்தில் மெது வாகப் பேசுவதையும்கூட ரிகார்டு செய்யக் கூடிய பவர்ஃபுல் டேப் ரிக்கார்டர். இதைப் போட்டுப் பார்த்தால் உண்மை விளங்கும்' என்று எண்ணிய ராமன் டேப்பை ரீவைண்டு பண்ணி ஓடவிட்டான்.

சீதாவும் குழந்தை லவனும் மாறி மாறிப் பேசுகிற மழலேப் பேச்சு இனிமையாகக் கேட்டது.

காலிங் பெல் சப்தம்.

அவசரமாக ஒரு போன் போட வேண்டும்—ஏகாம்பரம் பேச்சு.

கதவு மூடும் சப்தம்.

"சீதா! கதவைத் திற. நீ என்னே விரும்புவாய் என்ற எண் ணத்தில்தான் வந்தேன். உன் இஷ்டமில்லாமல் கட்டாயப்படுத்த மாட்டேன்.....என்னே மன்னித்து விடு."

"எங்கேயடா வந்தாய்?"

"எத்தனே நாளாக இந்தக் கள் ளக் காதல்?"

"விபச்சாரியான உனக்கு இனி இந்த வீட்டிலே இடமில்லே. ஒடு.."

டேப்பில் ராமன் எல்லாவற்றை யும் கேட்டபின் "ஐயோ சீதா" என்று கூறி அழுதான்.

அவசர அவசரமாகப் போனே எடுத்து, கண்களேத் துடைத்துக் கொண்டு நம்பரைச் சுற்றினுன்.

"ஹலோ, ராமு பேசறேன். அம் மாவா? சீதா அங்கு வந்தாளா?"

"அமா ராமு, வந்திருக்கா. குளிச்சிட்டிருக்கா"

"சரியம்மா! சீதாவை அங் கேயே இருக்கச் சொல். இதோ வர்றேன்" என்று கூறி நிம்மதி யோடு போனேக் கீழே வைத்தான் ராமன்.

"சீதா கோபித்துக் கொண்டு எங்கும் ஒடிவிடவில்லே. அம்மா வீட்டில் குளித்துக் கொண்டிருக் கிருள். அப்பாடா... லவா சீக் கிரம் பாலேக் குடிச்சிட்டு வா. அம்மாவைப் பார்க்கப் போகலாம்" என்ருன் ராமன் மகிழ்ச்சியுடன்.

போரில் இராவணனேத் தோற் கடித்தபின் சீதையைக் காண அசோக வனத்திற்குத் துடிதுடிப் புடன் ஒடிய இராமனேப் போல சீதாவைக் காண ஒடோடி வந்து கொண்டிருந்தான் ராமன்.

சீதாவிடம் முதலில் மன்னிப்புக் கேட்க வேண்டும். அவள் மலர்க் கரங்களால் இந்தக் கன்னத்தில் இரண்டு "அறை" திரும்பக் கொடுக்கச் சொல்ல வேண்டும் என்றெல்லாம் சுற்றினே செய்து கொண்டே தாய் வீடு வந்து சேர்ந் தான் ராமன்.

லவனேத் தன் தம்பி மனேவியிடம் விட்டுவிட்டு சீதா இருந்த அறையை நோக்கிச் சென்ருன் ராமன். அந்த அறையில் சீதாவைக் காணு மல் பதறினுன்.

ஆனல்—

குளியல் அறையில் தண்ணீர் விழும் சப்தம் கேட்டதால் ராமன் பதட்டம் ஒரளவு அடங்கியது.

நேரம் போய்க் கொண்டே இருந்தது. தண்ணீரும் விழுந்து கொண்டே இருந்தது. சீதா இன் னுமா குளிக்கிருள்?

சந்தேகம்; சஞ்சலம்.

விழுவது தண்ணீரா? அல்லது சீதா அழும் கண்ணீரா?

கதவைத் தள்ளிப் பார்த்தான் ராமன். பூட்டி இருந்தது. தட் டிப் பார்த்தான்; கத்திப் பார்த் தான். கடையில் முழுப் பலத் தோடு கதவில் மோதினுன்.

கதவு திறந்து கொண்டது.

சுயிற்றிலே தொங்கிக் கொண் டிருந்தாள் சீதா.

"ஐயோ சீதா!"

ராமன் அலறினுன்; அலமோதி னுன்; துடித்தான்; துவண்டான்; அழுதான்; அழுதுகொண்டே இருந்தான்; அழுதுகொண்டே இருக்கிருன். ●

அண்ணன் தீர்க்கதரிசனம்



இன்றைக்குச் சர்க்கார் மேற்கொண்டுள்ள போக்கு எப்படி இருக்கிறது? முந்திரா ஊழல் நடவடிக்கையின்போது, குற்றம் செய்தவர் என்று காட்டப்பட்ட, இந்திய சர்க்கார் அதி காரி ஒருவர்— எச். எம். படேல் என்பவர், நர்மதா பள்ளத்தாக்கு கார்ப்பரேஷனில் வேலேக்கு அமர்த்தப்பட்டு இருக்கிருர். பத் திரிகையில் பார்த்தேன். தற்காலிகப் பதவிதான். அந்த சபையில் இதுகுறித்து கேள்வி கேட் கப்பட்டபோது பிரதம மந்திரி எழுந்திருந்து...

பூபேஷ்குப்தா:— இரண்டு வருஷங்களுக்குப் பிறகு அவருக்கு பத்மவிபூஷண் பட்டம் கொடுப்பார்கள்.

அண்ணு:— ஏன், மந்திரி சபையிலேயே இடம் கிடைக்கக் கூடும். லோக்சபையில் கேள்வி கேட்கப்பட்டபோது பிரதம மந்திரி எழுந் திருந்து தனக்குத் தெரியாது என்று பதில் அளித்தார். அவர் அவ்விதம் சொன்னது கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஏனெனில் அவர்—ஆமாம், யார் நியமிக்கப்பட்டார்கள் என்பது எனக்குத் தெரியும்— என் ஒப் புதல் அதற்கு உண்டு என்று கூறி இருந் திருப்பாராஞல் நான் இடுக்கிட்டுப் போய் இருப்பேன். நல்ல வேளேயாக அவர் தெரி யாது என்று பதிலளித்தார்.

—20-6-62 அன்று அண்ணு மாநிலங்களவையில் ஆற்றிய உரையில் ஒரு பகுதி 1-7-62 திராவிடநாடு இதழில் வெளிவந்துள்ளது.

மஞ்சி விரட்டு மச்சான்



பூவை.எஸ்.ஆறுமுகம்

மஞ்சி விரட்டுப் பொட்டல் அமளி துமளிப்பட்டது!

உதயசூரியன் கண்மலரத் தொடங்குகின்றான்.

தாரை–தப்பட்டைகள் முழங்கின.

முன்னடியான் சாமிக்கு நிழல் பரப்பி, வெண்சாமரம் வீசிக்கொண்டிருந்த வேப்பந்தூரடியில் பட்டாளமாக அணிவகுத்து நின்ற கன்னிப் பூஞ்சிட்டுக்கள் சுதாரிப்படைந்தனர்.

''அடியே, கொடி!''

வள்ளி அலட்டினாள்.

''ஒன்னைத் தாண்டி, பவளம்!''

கமலி கூப்பிட்டாள்.

பவளக்கொடி சிலிர்ப்படைந்தாள். கோலமதர் விழிகள் தவித்தன; இடது கண் துடித்தது. கண்மூடிக் கண் திறக்கும் நேரம் அவள் மெய்மறந்தாள். ஒன்றோடு ஒன்றுப் பின்னியும் ஒன்றில் ஒன்றுகப் பிணைந்தும் வீனையாடிக் கொண்டிருந்த காதலின் இன்ப உணர்வுகள் ஒருருவாக 'அநுராகம்' பாடிக்கொண்டிருந்தன. நாணப்பூ மணந்தது. 'மச்சானே!'— மாணிக்கம், தமிழ்ச்சாதியின் தவப்புதல்வனுக வீரம் சுடர் தெறிக்க எத்துணை கம்பீரமாகப் புன்னகை செய்கிறான்!... அவள் பார்வை மஞ்சி விரட்டுத் திடலின் மையத்தில் 'பொலிகான'வெனப் பாய்ந்தது.

இளமைத்திமிர் கொழிக்க, சட்டி முண்களாக இளஞ்சுடரொளியில் மின்னிப் பளபளத்த அழகான—அபாயமான வர்ணக் கொம்புகளைச் சிலுப்பிய வண்ணம் ஒற்றைத் தவி வைரமாக, அதோ நின்று கொண்டிருக்கிறது அந்த 'நீலத்தநல்லூர்க்காளை!' கழுத்திலே கரும்புத் தூணுக்குகள்; அவற்றின் நடுவிலே, புத்தம் புதிய சாயத்துணி; அந்தத் துணியில் மஞ்சி விரட்டுப் பந்தயப் பணம் — ரூபாய் ஆயிரம்!

மாணிக்கம் தயார்!

வேலப்பனும் கூடத்தான்!

சங்கராந்திச் சுங்கடியின் அழகுக்கு அழகு சேர்த்தவளாக, சலன மடைந்த நெஞ்சோடும், சலன மடையாத வைராக்கிய நம்பிக்கையோடும் சமைந்து நின்றாள் 'சமைந்த' பெண் பவளம். தவித்துத் துடித்து ஊடுருவிய அவளது பார்வையில் மாணிக்கம் மாத்திரமல்ல, வேலப்பனும் ஆலவட்டம் சுற்றினர். 'எம்புட்டு நேச மச்சானே!' விழிகள் சுகிந்திட, அவள் தனக்குத்தானே விளித்துக் கொண்டாள். மாணிக்கம் எவ்வளவு நாணயமாகச் சிரிக்கிறான்!

''அடியே பவளக்குட்டியோ! ஒன்னோட நெஞ்சான நெஞ்சிலே கொலுவிருக்கிற ஒன்னோட நேசமான—ஆசை மச்சான் மாணிக்கம் எப்படியும் மஞ்சி விரட்டுச் செவலேயை லாந்திப் புடிச்சு, பத்தயப் பணம் ஆயிரத்தையும் கட்டாயம் கெலிச்சுக்கிடுமடி. பவளம்! தைரியமா இருடியோ!''

அம்பிகையின் அருள் வாக்காக, 'நல்வாக்கு'க் கொடுக்கிறானே, அஞ்சலே!

பவளக்கொடியின் கண்கள்பொடிக்கின்றன. கண்ணுமூச்சி வீனையாட்டு வீனையாடிய கன்னிச் சிரிப்பிலே அவளது இன்பச் சொப்பனம் சொக்கட்டான் ஆடியதோ?— 'என்னோட உசிரே, ஆத்தா அங்காளம்மை சொல்லப்போற தீர்ப்பிலேதான் அடங்கி முடங்கிக் கெடக்குதாக்கும்!... ஆயி மகமாயியே, ஆத்தாளே மூத்தவளே!' நிமிரிக் கிடந்த இளம் மார்பகங்கள், நெடுமூச்சுத் தாளாமல் பட்டாம் பூச்சிகளாக எம்பி எம்பித் தணிந்து கொண்டேயிருக்கின்றன!

தாரை முழங்கியது.

பறை ஒலித்தது.

'வேட்டு' அதிர்ந்தது.

அடுத்த பொட்டுப்பொழுதிலே—பட்டுத்தெறித்த இரத்தத்திலகம் போல, படாமல் தெறித்த கண்வீச்சைப்போல அங்கே சலசலப்பு மிகுந்த அரவம், அரவமாக நெளியத் தலைப் பட்டது. மூர்த்தண்யமான முழக்கம் மண்ணே முட்டி விண்ணிலே மோதியது.

'சீட்டி' ஒலிகள் விண்ணே முட்டி மண்ணில் ஒலித்தது; எதிரொலித்தது.

கலேத்துப் போடப்பட்ட சீட்டுக் கட்டாகக் கானாளின் கும்பல் கலேந்தது; சிதறியது.

அதோ, அந்த நீலத்தநல்லூர்ச் செவலேக்கானே பாய்ச்சல் லயம் தவறுமல், பாய்ச்சலுக்கான தாளக் கட்டு, கட்டுவிடாமல் பாய்வதற்குத் தயாராகவே நிற்கிறது!

மூன்றுவது தடவையாகவும்வெடிச் சத்தம் வீரிட்டது.

அவ்வளவுதான்!

மறுஇமைப்பில்—

தலேநிமிர்ந்து நின்ற தமிழனுக, பாய்ந்தான் மாணிக்கம்!

வேலப்பனும் 'சோப்பளாங்கி' இல்லே!— அவனும் பாய்ந்து விட்டான்!

அவர்கள் இருவருக்கும் ஊடாக, பாய்ந்து வந்த 'செவலே' பாய்ச்சல் காட்டத் தொடங்கியது.

''பலே, மாணிக்கம் அண்ணச்சி!''


''ஊம், அப்படித்தான் வேலப்பா!''

உற்சாகத் தூண்டுதல்கள் 'சடுகுடு' மறித்தன.

'மச்சானே! மாணிக்கம் மச்சானே!— பவளக்கொடி உயிர் ஊசலாட, உள்ளம் தத்தளிக்க உருகிக் கரைந்து, தவித்துத் தடுமாறிக் கொண்டேயிருந்தாள். ஆசை மச்சானே தினேந்தவளின் விழிச் சிமிழ்களிலே கண்ணீர் நனேந்தது. தன் பேரிலே மையல் கொண்டிருந்த சம அந்தஸ்து கொண்ட மாணிக்கம் — வேலப்பன் ஆகிய இருவருக்கும் இடையில், அங்கேரிக்கப்பட்டுப் பிரகடனப்படுத்தப்படாத்தொரு நியாயத்தின் தீர்ப்பை ஏற்படுத்த முடிவு செய்த தன் தந்தையின் முடிந்த முடிவான பேச்சை அவள் நினேவு கூர்ந்தாள்:

''மாணிக்கத்துக்கும் வேலப்

எழுத்து வேள்வி



அகில இந்தியா என்னும் ஏகாதிபத்தியத்துக்கு, இந்தி முத்திரை மொழி! அந்த முத்திரை பொறிக்கப்பட்டவர்கள் எல்லாம், டில்லியின் அடிமைகள் என்பது பொருள். அதற்காகவே இந்தியை ஏற்றுக்கொண்டாக வேண்டும் என்றனர்.

—அறிஞர் அண்ணு.

பனுக்கும் நான் சொல்லப் போற சங்கதி இதுதானுங்கும்!.. இப்ப நான் கூறப் போற இந்த முடிவை நீங்க ரெண்டுபேருமே ஆத்தா மூத்தவளோடதீர்ப்பாட்டம் எண்ணிக்கிட வேணுமாக்கும்!— நீங்க ரெண்டு பேருமே எனக்கு வலக்கண், இடக்கண் கணக்கிலே ஒரே சமட்டிதான்— ஆனபடியினாலே எங்க வளவு வீட்டு நீலத்தநல்லூர் செவலைக் காளையை வார மஞ்ச விரட்டிலே யாரு மல்லுக்கட்டிப் பிடிச்சு, அது கழுத்திலே சாயத் துவாலையிலே முடிச்சுப் போட்டிருக்கிற ஆயிர ரூவாய்க் காசை லாந்தி அவிழ்த்துக்கிடுருங்களோ, அந்தப்புள்ளிக்குத்தான் நான் எம்புட்டுச் செல்லக்குட்டி பவளத்தைக் கெடுவிலே கண்ணுலம் கட்டிக் குடுப்பேனுக்கும்! நீங்க ரெண்டு பேருமே எம்மவ பவளத்து மேலே உசிருக்குரிரான நேசம் வச்சிருக்கிறதாலேயும், எம்புட்டு எந்த ஒரு முடிவும் விதிக்கு உரித்தான தீர்ப்பாட்டம் ஆகிப்பிடப்படாதே என்கிறதாலேயும் நான் இப்படிப்பட்ட தர்மநாயமான — சத்திய வழிப்பட்ட ஒரு நல்ல முடிவுக்கு வர வேண்டிய தாச்சு. அந்த முடிவு உங்களிலே யாருக்கு நல்ல பொறுப்பை எழுதிக் காட்டுதோ, அந்த ஆள் எங்க பவளத்தைக் கைபிடிக்கலாம்!— மற்ற ஆள் மூச்சுக் காட்டாமல், 'முரண்டு' புடிக்காமல் தகிலையை நிமிர்த்தி ஒதுங்கிக்கிட்டு ஆகவேணும்!— ஏன்னு, ஆண்பிள்ளைக்கு அதுதானே அழகு?...''

—தந்தையின் முடிவுக்கு ஒரு தீர்ப்பை ஒனி 'ஆத்தா' வழங்கி விடுவாள்!— 'மச்சான்!' உள்வட்டமாக விம்மல் சுழித்தது. சுடுநீர் அவளைச் சுடாமல் இருக்குமா?

''ஏலே புள்ளே பவளம்! நடக்கப் போற மஞ்சவிரட்டுப் பந்தயத்திலே கெலிப்பு எம்பக்கம்தான் இருக்கும்!— என் உசிரைக் கொடுத்தாச்சும், ஒன்னை என்னோட ஆசைக்கண்ணுட்டியா ஆக்கிக்கிடத்தான் போறேன்!— கண்ணை மூடிக் கண்ணைத் திறக்கிற பொட்டுப்பொழுதுக்காச்சும் நீ எனக்கு ஒரு நல்ல ராவிலே முந்தாணை விரிக்க, நான் ஒம்பக்கத்திலே ஒண்ணடிமண்ணடியாய் படுத்துக்கிட்டு ரகசியம் பேசி, நையம்பாடி, சரசம் ஆடறதுக்கு உண்டான ஒரு பாக்கியம் எனக்கு விதிச்சாத்தான் எனக்குநல்ல மூச்சு கிளம்பும்! ஆமா, சொல்லிப் பூட்டேன், பவளக்கொடி!'' என்று ரோசத்துடன் சூள் உரைத்துச் சவால் விடுத்த மாணிக்கத்தை— மாணிக்கத்தில் பேச்சை எப்படி மறப்பாள், பாவம்?

பாவமும் புண்ணியமும் ஐந்தொகைக் கூட்டுப்புள்ளியைக் கணக்குப்பார்த்துக்கொண்டிருந்த வேளை அது!

மறுபடியும் குழப்பமும் கூச்சலும் முட்டிக்கொண்டன; மோதிக் கொண்டன.

ஆ!

'ஆத்தாடி! ஐயையோ! அந்த வேலப்பன் மச்சான் கை எங்க செவலையோட கழுத்துக்குப் போயிடுச்சே?'— நடுநடுங்கினாள் பவளம்.

'அம்மான் பொண்ணே,பவளம்! நீ எனக்குப் பெண்டாட்டியாக வாழ்க்கைப்படறதுக்குப் பரிசம் போட்டாச்சுதின்னு, அந்த விஞடியிலேயே நான் ஒன்னை எந்தகேமேலே தூக்கி வச்சுக்கிணு இந்தச் சிலட்டூர் வட்டத்தைப் பூராவும் சுத்திச் சுத்தி வருவேனுக்கும்! இந்த இனையராசாவுக்கு ஏத்த இனையராணியாய் நீ எனக்கு வாய்ச்சால்தான்என்நெஞ்சுவேகும்!' வேலப்பனின் சொற்கள் கன்னிகழியாத பவளத்தின் அழகான— அந்த மான நெஞ்சத்தில் உப்புக்கோடு மறித்தன.

மறுநொடியில்

வேலப்பன் புழுதியில் சாய்ந்தான்.

திமிரிவிட்டது செவலை.

பாய்ந்தான் மாணிக்கம். ரத்தக் காணிக்கு உடைத்தான அன்பின் முத்திரைகள் சிலிர்க்க, கம்பீரமான மிடுக்கோடும், மிடுக்கு நிரம்பிய ஆணவத்தோடும், அணவம் மண்டிய வீரத்தோடும், வீரம் செழித்த ரோசத்தோடும், காளை மீது பாய்ந்தான் அவன். புதிய ரத்தம் அப்போதுதான் புதிதாகப் பிறந்த பாவனையில் சிந்தியது; தெறித்தது; சிதறியது. விழிமூணைகளுக்குக் 'குறி' வைக்கப்பட்ட ஈட்டிக் கொம்புகளைத்தட்டிவிட்டான். மானத்தின் சவுக்கடிக்கு 'மாப்பு' கிடைக்காத சோதனைக்குப் பதில் சொல்லத் துணிந்த காளையின் உயிராபத்தான பாய்ச்சல் தன்னை மறுபடி மண்ணிலே சாய்த்துவிழ்த்தி வேடிக்கை காட்டிய போக்கைப்பெரிதாக்கிக் கொதிக்க இதுவா நேரம்?— தூண்டப்பட்ட காதல் வெறி அவனை ஆட்டிப்படைக்க, அவன் அந்தச் செவலையை ஆட்டிப் படைத்தான்!

கணங்கள் பேய்க்கணங்களாக ஊர்ந்தன.

அடுத்த கணம்—

''சவாகங்க, எம்மச்சானே!''

வானத்துக்கும் பூமிக்குமாகக்குதித் தாள் கன்னிப்பூ: தமிழச்சியாகக் கும்மாளம் கொட்டினுள்!

''பவளம், நீ மெய்யாலுமே கொடுத்து வச்சவதாண்டியோ!.... உன் மனசுப்படியே, உம் மனசுக்கேத்த மம்முதராசா மாணிக்கம் எனக்குக் கைக்கு மெய்யாய்க்கிடைச் சிடுச்சடியோ!''

தோழிமார் சிலாகித்துச் சிரித்தனர்.



பவளம் மெய்மறந்தாள். பவளம் சிரிக்க, கொடி சிலிர்க்க, மெய் மறந்தாள் பவளக்கொடி.

''பவளக்கொடியோ!''

திரும்பினுள் பவளம்.

அங்கே—

வாகை சூடிய மறத்தமிழனுக, தள்ளாடித் தள்ளாடித் தவழ்ந்து வந்தான் மாணிக்கம். அவன் கையில், அயிர ரூபாய் முடிந்திருந்த சாயத்துணி ரத்தச் சிவப்பாகப் பூச் சாண்டி காட்டிற்று. அவனது அகன்று பரந்த மார்பிலிருந்து ரத்தம் பீறிட்டுக்கொண்டேயிருந்தது!


''ஐயையோ, மச்சானே!'' என்று அலறிக் கதறினுள் பவளம்.

மாணிக்கம் சிரித்தான்: ''ஏலே புள்ளே!....உங்க அப்பன்காரர் என்னோட அந்தரங்கபூர்வமான நேசத்தைச் சோதிக்க வச்ச பந்தயத்திலே நான் கெலிச்சு, உம் மேலே நான் கொண்டிருக்கிற பாசமானநேசத்தை ஊருக்கும் நாட்டுக்கும் மெய்ப்பிச்சுக் காட்டிப்புட்ட இந்த நல்ல நேரத்திலே, நீ எதுக்கு இப்படிக் கதற வேணும்? எம்மாநிரி நீயும் சிரி, பவளம்!— அப்பத்தான் இந்தத் தமிழனுக்குச் சமதையான தமிழச்சியாக நீ விளங்க ஏலும்!... என் ரோசத்துக்கு ஓங்க செவலேக்காளேயோட ரோசம் ஒண்ணும் குறைஞ் சிடல்லே!—அதனாலேதான் அது விதியாய் வீளையாடிடுச்சு!— ஆனாலும் முடிவிலே கெலிப்பு, நான் கொடுத்திருந்த வாக்குப்படி, எம்பக்கம்தான் கிடைச்சிடுச்சு!...பவளம், இங்கிட்டுக் குந்திக்க!— எனக்கு மார்க்கண்டன் வயசு அப்படின்னு என்னைப் பெற்ற புண்ணியவதி சதா மூச்சுப் பறிக்கும்! ஆனதாலே, நான் சாகவே மாட்டேன்! ஆனாலும், இந்தாலே கூடியிருக்கிற நம்ம சாதி சமுதாயத்து முன்னிலேயிலே, இப்பவே நீயும் நானும் புருசனும் பெண்சாதியுமா ஆயிடுவோம்!— இதுவே போதும், நம்ம ரெண்டு பேரோட காதலும் சொக்கப்பச்சைத் தங்கம் மாதிரி அசலானது, மெய்யானது, சத்திய மானது, தருமமானது என்கிறதை ரூபிச்சுக் காட்டுறத்துக்கு!— இந்தாலே பவளம், எம்புட்டு அசல் பவுன் மோதிரம்!...ம்... வெரசிலே கையை நீட்டு, பவளம்!''



இராமன் கதைக்கு வேடு வை நீலன்

மஞ்சள் வெயிலின் மாலையிலே—அரச
மரத்தி னடியில் நானிருந்தேன்.
கொஞ்சும் அணில்கள் ஒருஜோடி—இமே
குதித்து வந்தது விளையாடி.
நெஞ்சம் பதைக்க ஒருநிமிடம்—என்னை
நிமிர்ந்து பார்த்தது மறுநிமிடம்
கொஞ்சம் திரும்பி துள்ளியதே—மூன்று
கோடுகள் முதுகில் மின்னியதே.
மின்னும் கோட்டின் கதையொன்று—ராமன்
விரல்கள் தடவிய வரியென்று
உண்மைப் பற்றியே சொல்வதுண்டு—அதன்
உண்மை யாதெனச் சொல்லென்றேன்
பின்ன அணிலும் சிரித்துவிட்டு—கேலி
சிந்திட என்னைப் பார்த்துவிட்டு
சொன்ன உண்மையை சொல்லிடுவேன்—அணில்
சொல்லிய கருத்துரை கேட்டிடுவீர்.
"இன்பத் தமிழின் தனிச்சிறப்பு—இயல்
இசையொடு நாடக மென மூன்று.
மன்னும் தமிழ்நிலத் தீங்கனிகள்—ஈடில்
மா, பலா, வாழையாம் மூக்கனிகள்.
தொன்மைத் தமிழை ஆண்டவர்கள்—சேர
சோழர்கள் பாண்டிய ரெனமூவர்.
மூன்று வேந்தர்கள் தமிழ்வளர்க்க—கண்டது
முதலிடை கடையெனும் முச்சங்கம்.
ஈன்ற தாயும் இறந்திடுவாள்—என்றும்
இறவா தாய் தமிழ். உணர்ந்திடுவாய்
என்றே உணர்ச்சி எழுப்பிடவே—இந்தி
ஏறி மிதிப்பதைத் தடுத்திடவே
என்றும் தமிழைக் காத்திடவே—நல்ல
இதயம் படைத்த அண்ணாவும்
மூன்று எழுத்தால் படைத்திட்டார்—போர்
முரசு ஒலிக்கும் தி.மு.க.
கங்கை கொண்ட சோழ மண்ணில்—உயர்
கலைஞர் பிறந்ததும் ஜூன் மூன்று
எங்கும் இதனை நினைவூட்ட—இயற்கை
என்மேல் போட்டாள் வரி மூன்று
இங்குன் காதில் போட்டுவை—பண்டை
இராமன் கதைக்கு வேட்டுவை.
பொங்கும் களிப்பில் இதைக்கூறி—அணில்
போனது துள்ளி இணையோடு.



பவளக்கொடியின் 'முத்திரை மோதிரத்'தில் அவளுடைய ஆனந்தக்கண்ணீர் ஆத்ம சமர்ப்பணமாக ஆகிக்கொண்டிருந்தது போலும்!

அமைதியை வெட்டிப் பாய்ந்தது பரபரப்பு!

"ஐயையோ!" என்று அலறிப் பாய்ந்து, அவளுடைய மஞ்சி வீரட்டு செவலைக்காளையை நோக்கிப் பாய்ந்து வந்த பட்டாக் கத்திக்குக் குறுக்கே மறித்து நின்றாள் பவளக்கொடி!

"பவளம்!...பவளம்!"

"மச்சானே!"

அழகான மார்பகத்தினின்றும் பீச்சியடித்த குருதிப்புனலுடன் சாய்ந்தாள் பவளக்கொடி.

குண்டுக்கட்டாகக் கட்டிப்பிடித்திருந்த கூட்டத்தைத் திமிரிக் கொண்டு விடுதலை அடைந்தான் வேலப்பன். விம்மி வெடித்தவளை, பவளத்தின் காலடியில் வீழப் போனான்.

அப்போது—

அந்த நீலத்தநல்லூரார்ச் செவலைக் காளை ரோசத்தோடு வேலப்பன் நெஞ்சிலே கொம்புகளைக் கொடுத்து மேலே அலாக்காகத் தூக்கி வீசப் போன நேரத்தில்—

சாரைப் பாம்பாகப் பாய்ந்தாள் பவளம்.

"பவளப்பொண்ணே! என் நெஞ்சிலேயும் நீனிலேயும் நீ ஒருத்தி தான் கொலு இருக்கிறே!— அந்த ஒரு ஆனந்தமான நினைப்போடவே நான் கண்ணை மூடிக்கிடச் செஞ்சுக்புடு!— என்னைக் காப்பாற்றுதே!.... உன் காளை என்னைமட்டும் தோற்கடிக்கல்லே!— என்னோட பரிசுத்தமான காதலையும் தோற்கடிச்சிடுச்சு!....நீ இல்லாத இந்த மண்ணிலே நான் உயிர் வாழவே மாட்டேன்! என்னைச் சமிச்சு, எனக்கு மாப்புக் கொடுத்துப் புடு, தாயே!"

மறுகணம்—

எட்டிப்போய் விழுந்தான் வேலப்பன்! அவனுடைய வாயினின்றும் நுரை கொப்புளித்து வழிந்து கொண்டேயிருந்தது!— அவனுடைய காலடியில் குன்றிமணிகள் இரண்டு சிதறிக்கிடந்தன.

"வேலப்ப மச்சானே! என் நெஞ்சிலே எம்புட்டு மாணிக்க மச்சான் கொலு இருக்காங்க! ஆனா, ஒங்க நெஞ்சிலே நானு கொலு இருந்தேன்! ....ஐயையோ! விதி எப்பிடி விளையாடிப்புடுச்சு!... விளையாடிக் காட்டிப்புடுச்சு!...மச்சான்!" விம்மிக் கொண்டே, தன் விரலில் போட்டிருந்த அந்த மோதிரத்தை வேலப்பனின் வலது கை விரலில் அன்போடும் பரிவோடும் பாசத்தோடும் போட்டு விட்டாள் பவளக்கொடி!

மாணிக்கம் செருமினான்: "பவளம்! நம்ப வேலப்பன் அண்ணனே வண்டியிலே ஏற்றிக்கிட்டு அறந்தாங்கி ஆசுபத்திரிக்கு இப்பவே பறிவோம்! எப்படியும் வேலப்பன் அண்ணச்சியை மறுபிறவி எடுக்கச் செஞ்சிப்புடுவோம்!...ஊம்!"

"சரிங்க, மச்சான்!"

ஆகா! வேலப்பன் இப்போது எத்தனை ஆனந்தமான அமைதியுடன் புன்னகை செய்கிறான்!...

அன்றும் இன்றும் என்றும்

எல். கணேசன்

திருச்சியில் டிசம்பர் 24-ல் இந்தி எதிர்ப்புப் போர்ப் பிரகடனம் செய்துவிட்டது கழகம். கழக வீரர்களே அணிவகுத்து நிற்குமாறு ஆணை பிறப்பித்துவிட்டார் கழகத் தலைவர். கழகம் தொடுத்த போர் எதிலும் தோல்வி கண்டதில்லை. இந்தப் புனிதப் போரிலும் கழகம் வெற்றிவாகை சூடத்தான் போகிறது.

இந்தி ஆதிக்கம் 1938லிருந்து இன்று வரை தொடர் கதையாக நீள்கிறது. ஆனாலும் அவ்வாதிக்க வரலாற்றைக் கூர்ந்து நோக்கினால் அதில் வேறுபாடுகள் இருப்பதை அறியலாம்.

1938-ல் இராஜாஜி சென்னை இராஜதானியின் பிரதமராக இருந்தபோது இந்தி புகுத்தப்பட்டது. ஆனால் அப்போது நாடு விடுதலை பெற்றிருக்கவில்லை; குடியரசு நாடில்லை. அரசியல் சட்டம் இல்லை. அதில் பதினேழாவது பிரிவு இல்லை. அதில் இந்தி ஆட்சி மொழி என்ற விதி இல்லை. இராஜாஜி இந்தியை-ஆட்சி மொழியாக இல்லை; இணைப்பு மொழியாக இல்லை; பாட மொழியாகக்கூட இல்லை; வெறும் பாடமாகத்தான் பள்ளிகளில் புகுத்தினார். அப்போது தமிழகம் துடித்தெழுந்தது. கட்சி வேறுபாடு இன்றி ஒன்று பட்டுப் போராடியது. இந்தி விரட்டப்பட்டது.

இந்தியா 1947ல் விடுதலை பெறும் வரை இந்திப் படை எடுப்பு மீண்டும் எழவில்லை. நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, காங்கிரசு ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு இரண்டும் இரண்டாக முனைந்தது. மீண்டும் போராட்டம் தொடங்கியது. இந்தி பின்வாங்கியது.

1950-ல் இந்திய அரசியல் சட்டம், அமலுக்கு வரத் தொடங்கியது. அவ்வரசியல் சட்டத்தில் பதினோராம் பிரிவின் முதற் பகுதியில், இந்தி இந்தியாவின் ஆட்சிமொழி என்ற விதி ஏற்படுத்தப்பட்டது. 1950-க்குப் பிறகு இந்தி ஆட்சி மொழி எனும் அந்தஸ்தோடு தமிழகத்தில் படை எடுத்தது. தமிழகம் தொடர்ந்து போராடியது. இந்தி நுழைவதும்; போராட்டம் என்றால் திரும்புவதுமாக இருந்து வந்தது.

1965-ல் ஒரு புதிய நிலை ஏற்பட்டது. 1950-ல் அமலுக்கு வந்த அரசியல் சட்டம் இந்தி அரசியல் சட்டம் அமலுக்கு வரும் நாளில் இருந்து ஆட்சி மொழியாகிறது. 1965 ஜனவரி 26 வரை ஆங்கிலமும் இந்தியோடு துணை ஆட்சி மொழியாக இருந்துவரும். 1965 ஜனவரி 26லிருந்து ஆங்கிலம் துணை ஆட்சி மொழி எனும் நிலையிலிருந்துமுற்றும் நீக்கப்பட்டு இந்தி தனி ஒரு ஆட்சி மொழியாகும் என்ற விதி செய்திருந்தது. அதன்படி இந்தி மட்டும் ஆட்சி மொழியாகும் அபாயம் 1965ல் உருவாகியது. இந்த இந்திப் படை எடுப்பு கடுமையான படை எடுப்பு. அரசியல் சட்டவிதி, மத்திய-மாநில அரசுகளின் ஆதரவு இவைகளோடு இந்திப் படை எடுப்பு நிகழ்ந்தது. இந்தப் படை எடுப்பை எதிர்த்து தமிழ்நாட்டில் பெரும் புரட்சியே நடைபெற்றது.

உலகில் அரசியல் புரட்சிகள் நடந்ததுண்டு; பொருளாதாரப் புரட்சிகள் நடந்ததுண்டு; தொழிற் புரட்சிகள் நடைபெற்றதுண்டு.



ஆனால் தமிழகத்தில் மட்டும்தான் 1965ல் மொழிப் புரட்சி நடைபெற்றது. மாணவர்கள் புரட்சியின் கதாநாயகர்களாகத் திகழ்ந்தார்கள். அந்தப் புரட்சியை அடக்க சுதந்திரம் பெற்ற பிறகு முதன்முறையாக தமிழகத்திற்கு இராணுவம் வரவழைக்கப்பட்டது. இயந்திரத் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டது. நூற்றுக் கணக்கான தமிழர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டார்கள். இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியது. பிணமலைகள் உயர்ந்தன. இந்தியாவில் சுதந்திரப் போராட்டத்தின்போதுகூட, தங்களைத் தாங்களே தியாகம் செய்துக்கொண்டார்கள் என்ற வரலாறு இல்லை. ஆனால் தமிழ்நாட்டில் 1965ல் எட்டுத் தமிழ்ச் சிங்கங்கள் தங்கள் தேக்கு மரத் தேகத்தை தீக்கு இரையாக்கிக் கொண்டார்கள். இப்பெரும் புரட்சியை இன்று நினைத்தாலும் உள்ளம் நடுங்குகிறது. இப்புரட்சிக்குப் பிறகு இந்திப் படை எடுப்பு ஒழிந்து விடவில்லை; ஒப்பு எடுத்துக் கொண்டது.

1965ல் புரட்சிய நடத்திய மாணவர்கள் அது முடிவுற்ற பின் நடத்திய மாநாடுகளில் ஒன்றைத் தீர்மான மாக்கினார்கள். இந்தியை எதிர்த்து தமிழக மக்கள் மத்திய அரசோடு போராடினால் தமிழ்நாட்டில் உள்ள மாநில அரசுதான் அதனை அடக்க அடக்குமுறையை ஏவுகிறது. இந்தி எதிர்ப்புப் போரில் தமிழகம் வெற்றி பெற வேண்டுமானால் தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு அரசு இருந்திடவேண்டும் எனும் தெளிவு ஏற்பட்டது.

எனவே மாணவர்கள் 1967 தேர்தலில் இந்தி எதிர்ப்பு அரசை உருவாக்குவது என்று தீர்மானித்தனர். அவர்களின் எதிர்பார்ப்புப்படி 1967ல் இந்தி எதிர்ப்பை உயிர்க் கொள்கையாகக் கொண்டிருக்கும் தி.மு.க. ஆட்சிக்கு வருகிறது. 1968ல் அறிஞர் அண்ணா அவர்கள் தமிழக சட்டமன்றத்தில், இந்நிலை நாட்டுப் பள்ளிக்கூடங்களில் சொல்லித் தரப்படாது எனும் தீர்மானத்தை நிறை

ஆதிபத்திய வெறியரின் அளவுகோல்!

இது மொழிப் பிரச்சினையே அல்ல; அரசியல் ஆதிக்கப் பிரச்சினை!

இன்றுவரை இந்திக்காரர்கள் தங்களது இந்தி வளமான மொழி – நல்ல மொழி என்று மார்தட்டிக் கூறிக் கொள்ளவில்லை.

இன்னும் சொல்லப் போனால், அவர்கள் மொழியிலே வார்த்தைகளைக் கண்டுபிடிக்க கமிட்டியை அமைத்து "ஒரு நாளைக்கு 400 சொற்கள் கண்டுபிடித்தோம்" என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

வெளிப்படையாகவே சொல்கிறார்கள், இந்த இந்தி அரை குறை மொழி; ஆனால் அது எங்கள் மொழி என்கிறார்கள்.

இன்னும் சொல்லப் போனால், நாம் எத்த அளவு பணியப் போகிறோம் என்பதைக் கண்டு கொள்ள இந்தி ஆதிபத்திய வெறியர்கள்கொண்டு வந்திருக்கிற அளவுகோல்தான் இந்த இந்திச் சட்டம்.

-அறிஞர் அண்ணா

வேற்றினர்கள்.தமிழர்கள், ஒழிந்தது இந்தி என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். ஆனால் அந்த நிம்மதி நிரந்தரமாக நீடிக்கவில்லை.

1976ல் நடைபெற்ற தேர்தல் இரண்டாவது சுதந்திரப் போராட்டம் என்று வர்ணிக்கப்பட்டது.அதில் இந்திராவின் சர்வாதிகாரம் முறியடிக்கப்பட்டு ஜனதா அரசு உதயமாயிற்று. முதல் சுதந்திரத்திற்குப் பிறகு இந்தி ஆட்சி மொழி எனும் அரசியல் சட்ட விதி வகுக்கப்பட்டது. இரண்டாவது சுதந்திரத்திற்குப்பிறகு இந்தியை ஆட்சி மொழியாக்கித் தீர்வது எனும் தீவிரம் வலுப்பெற்றுள்ளது. ஜனதாவில்ஆயிரம் மோதல்கள், ஆயரம் கோஷ்டிப் போராட்டங்கள், ஆயிரம்குடுமிபிடிச் சண்டைகள். ஆனலும் அவர்கள் அத்தனை பேரும் ஒன்றில் ஒற்றுமையாக இருக்கிறார்கள், ஒன்றுபட்டு செயல்படுகிறார்கள். இந்தியைத் திணிப்பதில் அவர்கள் அனைவரும் ஐக்கிய நாடுகள் மன்றம். அம்மன்றத்தில் மூத்திசை நாடுகளும் மேற்திசை நாடுகளும், வெள்ளையர் நாடுகளும், கறுப்பர் நாடுகளும், சோஷலிச நாடுகளும், முதலாளித்துவ நாடுகளும் அங்கம் வகிக்கின்றன. அதில் கூடியிருந்தவர்கள் எல்லாம், ஜனதா அரசின் அயல்நாட்டுக் கொள்கை எப்படி இருக்கப் போகிறது என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதில் கலந்துகொண்ட வெளிவிவகார அமைச்சர் வாஜ் பாயியோ இந்தியிலே பேசுகிறார். கடந்த 30 ஆண்டுகளாக இந்தியப் பிரதிநிதிகள் இம்மன்றத்தில் ஆங்கிலத்தில்தான் பேசியிருக்கிறார்கள். ஆனால் முதன்முறையாக வாஜ்பாய் இந்தியிலே பேசினர்.

சட்டப் பேரவைக்கான தேர்தல் நடைபெற்றபோது கர்னாடகத்திற்கு சரண்சிங் சென்றார். ஜனதாவிற்கு ஆதரவு திரட்டச் சென்றார். இந்தியிலே பேசத் தொடங்கினர். கூடியிருந்த வாக்காளர்களோ ஆங்கிலத் வார்க்குகளைப் பற்றிக்கூடக் கவலைப் படாது வாக்காளர்களின் விருப்பத்திற்கு விரோதமாக இந்தியிலேயே பேசி முடித்தார்.

அயல்நாடுகளோடு இந்திய அரசு செய்து கொள்ளும் உடன்பாடுகள் இந்தியிலேயே அமையுமாம்.

மொரார்ஜி இந்தத் துறையில் மட்டும் இவர்களுக்கெல்லாம் உண்மைத் தலைவராகத் திகழ்கிறார். இந்தி மொழியை ஆட்சிமொழியாகப் பயன்படுத்துவது வளர்ச்சி பெற்றுத் தான் தீரும் என்கிறார்.

நேரு ஆங்கிலத்தின் தேவையையும் சேவையையும் உணர்ந்தவர். இந்தி மொழி வெறியைப் பெரிதும் ஊக்கப்படுத்தியதில்லை. இன்னும் சொல்லப்போனால், இந்தி வெறியர்களுக்கும் இந்தி மொழி பேசாத மக்களுக்கும் சமரசமாகத் திகழ்ந்தார். ஆனால் மொரார்ஜியோ இந்தி வெறியர்களுக்குத் தலைமை ஏற்கிறார்.

இந்தி பேசாத மக்கள் மீது இந்தி திணிக்கப்படமாட்டாது. அதே போல் இந்தி மொழி பேசாத மக்கள் ஆங்கிலத்தைத் திணிக்கவும் அனுமதிக்கமாட்டோம் என்று கூறுகிறார். இந்த அபத்தமான விவாதத்தை ஒரு நாட்டின் பிரதமரே எழுப்புவது வேதனைக்குரியது.

ஆங்கிலத்தை யார் திணிக்கிறார்கள்? ஆங்கிலம், பல ஆண்டுகளுக்கு முன்னே ஆங்கிலேயர்கள் ஆண்டபோது வேண்டுமானால் திணிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இப்போது யார் திணிக்கிறார்கள்? ஆங்கிலத்தை முதல் தலைமுறை சுதந்திரப் போராட்ட வீரர்களே வரவேற்றார்கள்; ஆதரித்தார்கள். ஆங்கிலக் கல்வி பயின்றவர்கள் முதல் முதல் தேசிய உணர்ச்சி பெற்றார்கள். வங்கத்திலும், பாஞ்சாலத்திலும் தமிழகத்திலும் தனித் தனியாக ஆங்கிலக் கல்வி பயின்றவர்கள்தான் சுதந்திர உணர்ச்சி பெற்று சுதந்திரத்திற்குப் பாடுபடத் தொடங்கினர்கள். அப்படி துண்டுதுண்டாகப்போராடியவர்கள் ஒருவரோடு ஒருவர் உறவுகொள்ள, உரையாட, ஒருங்கிணைந்து போராட பெரிதும் துணைபுரிந்தது ஆங்கிலமே.

ஆங்கிலேயர்கள் தங்கள் நிர்வாக வசதிக்காகப் புகுத்திய ஆங்கிலம்தான் இந்திய தேசியத்திற்கு வித்திட்டது; தேச ஒற்றுமைக்கு அடிகோலியது. ஆங்கிலம் இல்லாதிருந்தால் இந்தியா பல நூறு சிறு சிறு நாடுகளாகவே இருந்திருக்கும். ஆனால் நிர்வாக வசதிக்காகப் புகுத்தப்படும் இந்தியோ இன்று இந்திய ஒருமைப்பாட்டிற்கும் ஒற்றுமைக்கும் உலை வைக்கிறது. தேச ஒருமைப்பாடு-ஒற்றுமை என்று பார்க்கும்போது ஆங்கிலமே இந்தியைவிட அதிகச் சிறந்த பணி செய்தது. அன்று வேண்டுமானால் ஆங்கிலம் திணிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் தாய்ப்பால் அருகிய நிலையில் புட்டிப்பாலை நாடுவது போல் இன்று நாட்டின் நலன் கருதி ஆங்கிலத்தை நாமே ஏற்கிறோமே தவிர

இந்தியை எதிர்ப்பதற்கு மிக அடிப்படையான காரணங்கள் இருக்கின்றன. இந்தியைத் திணிப்பது ஜனநாயகத் தத்துவத்தையே குழிதோண்டிப் புதைப்பதாகும். பாரபட்சமின்மையும் சமவாய்ப்பும் தான் ஜனநாயகத்தின் அடிப்படையாகும். இந்திய அரசியல் சட்டம் அடிப்படை உரிமைகள் எனும் பகுதியில் இவைகளை உறுதி செய்கின்றன. அரசியல் சீட்டம் விதி 15(1) மதம், இனம், ஜாதி, பால், பிறப்பிடம் இவைகளின் அடிப்படையில் மக்களிடையே பாரபட்சம் காட்டப் படக்கூடாது எனறு கூறுகிறது.

இது குறித்து ஐவர் ஜென்னிங்ஸ் எனும் அரசியல் சட்ட மேதை ஓர் கருத்தைத் தெளிவாகக் குறிப்பிடுகிறார். இந்தியாவைப் பொறுத்த வரை பாரபட்சம் மொழி அடிப்படையிலும் காட்டப்படக்கூடாது என்றும் கூறப்பட்டிருக்க வேண்டும். மொழி அடிப்படையில் காட்டப்படும் பாரபட்சம் மற்ற அடிப்படையில் காட்டப்படும் பாரபட்சத்தைவிடக் கொடியதாக இருக்கும் இந்தியாவில்.

அடிமை இந்தியாவில் ஆங்கிலேயர்கள் உயர்ந்த சாதியாகவும் ஆங்கிலம் பயின்றவர்கள் இடைநிலை சாதியாகவும் மற்றவர்கள் மூன்றும்தர சாதியாகவும் இருந்தனர். அதைப்போலத்தான் இந்தி ஆட்சி மொழியானால் இந்திக்காரர்கள் முதல் சாதியாகவும், இந்தி பயின்றவர்கள் இரண்டாம் சாதியாகவும் இந்திதெரியாதபிறமொழிக்காரர்கள் மூன்றும் சாதியாகவும் ஆகிடும் அபாயம் ஏற்படும். சொந்த நாட்டிலேயே நாம் மூன்றும் சாதியாராக இருக்கவா நாம் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டோம்?

சம வாய்ப்புக்கள் (Equality of opportunities) வழங்கப்பட வேண்டும் என்பது நீதி நயாகம். இந்தி ஆட்சி மொழி என்றும், அரசு அலுவலராக இந்தி பயில வேண்டும் என்றும் நிலை வருகிறது. இந்தியை பிற மொழிக்காரர்கள் எவ்வளவு பயின்றாலும் இந்திக்காரர்களோடு சம நிலையில் போட்டியிட முடியுமா? இந்திக்காரர்கள் பிற மொழிக்காரர்களைவிட அதிகம் வாய்ப்புக்களைப் பெறுவார்களல்லவா?

இதில் மட்டுமா பேதம்? இந்தி மொழிக்காரர்கள்இந்தியும், தேவைப்பட்டால் ஆங்கிலமும் கற்றால் போதும். ஆனால் மற்றவர்கள் தாய் மொழி, இந்தி, ஆங்கிலம் ஆகமூன்று மொழி பயில வேண்டும். ஆங்கிலம் மட்டும் ஆட்சி மொழி என்றால் சுமையோ சுகமோ ஆக்கமோ இழப்போ அனைவர்க்கும் சமமாக இருந்திடும். இப்படிப்பட்ட நியாயவாதங்கள் இந்தி வெறியர்களிடம்– மத்திய ஆட்சியாளரிடம் எடுபடாது. எந்த விலை கொடுத்தாலும் இந்தியை ஆட்சி மொழியாக்குவது என்ற தீவிரம் காட்டுகிறார்கள் அவர்கள்.

இந்த நிலையில் நாம் நம் தன்மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள, சொந்த நாட்டிலேயே இரண்டாந் தரக் குடி மக்கள் என்ற இழிநிலை ஏற்படாது தடுத்திட, செந்தமிழைக் காப்பாற்றிட நாம் எந்தத் தியாகம் செய்யவும் தயாராக வேண்டும்; எந்த விலை கொடுக்கவும் சித்தமாகிட வேண்டும். கழகத் தலைவர் திருச்சி மாநாட்டில் இந்தியை எதிர்த்துப் போர்ப் பிரகடனம் செய்து விட்டார். கழகம் களத்தில் குதித்திடத் தயாராகி விட்டது. தமிழர்கள் கட்சி வேறுபாடுகளை மறந்து இந்தப் புனிதப் போரில் ஒன்றுபட்டு ஈடுபட ஆயத்தமாகி விட்டார்கள். கழகத் தலைவரின் தலைமையில் தமிழர்கள் ஒன்றுபட்டுகளத்தில் குதித்தால் இந்தி நிரந்தரமாக விரட்டப்படும்.

"இந்திக்கு இந்நாட்டில் ஆதிக்கமா? எல்லோரும் வாருங்கள் நாட்டினரே... அற்பம் என்போம் அந்த இந்திதனை; அதன் ஆதிக்கம் தன்னைத் தகர்த்திடுவோம்."



சில மொழிகள் இருக்கின்றன. அவை, கற்க முடியாதவை; கற்றாலும் கருத்திற் பதியாதவை.

சில மொழிகள் இருக்கின்றன. அவை பேச மட்டும் முடிந்தவை. எழுத முடியாதவை. காரணம், அவற்றிற்கு இன்னும் எழுத்து வடிவம் உண்டாக்கப்படவில்லை.

சில மொழிகளுக்கு எழுத்தும் உண்டு; பேச்சு வழக்கும் உண்டு. ஆனால், சரியான இலக்கியவளமோ, இலக்கண வரம்போ கிடையாது.

அப்படிப்பட்ட மொழிகளைக் கற்றால், அவை நீண்டவிலும் நில்லாது; நில்லாத பயனையுந் தராது.

இப்படி, எழுதவும் முடிந்து, பேசவும் தெரிந்து, வளமான இலக்கியமோ, வரம்பு கண்ட இலக்கணமோ இல்லாத மொழி வரிசைகளில் இந்தியும் ஒன்று என்பதை மொழி நூல் வல்லுனர் பலரும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இந்தி, ஒரு மொழிக்கு உரிய வாய்ப்பினையும், வளத்தினையும் பெற இன்னும் பல ஆண்டுகள் பிடிக்கும் என்றும், அப்படி அது ஒரு நல்ல மொழி வடிவத்தை எடுத்துக்கொண்டாலும், அது ஒரு நாட்டின் பொது மொழியாக ஆகும், அல்லது ஆக்கலாமென்பது முடியாத ஒன்றும் என்றும் திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது.

என்ற போதிலும், ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருப்போர், இந்தியே இந்நாட்டின் பொது மொழி என்று விளம்பரம் செய்து அதற்கான பெருமுயற்சிகள் பல வகையிலும் எடுத்துப் பார்க்கின்றனர்.

1965ல், இந்திதான் இந்நாட்டின் பொதுமொழி என்று அறிவித்தனர்.

ஆனால், அது முடியாதென்று தெரிந்ததும், இல்லே இல்லே. தெரிவிக்கப்பட்டதும், 1965க்குப் பின்னரும், ஆங்கிலமே இந்நாட்டின் பொது மொழியாக இருக்கும் என்று கால வரம்பு குறிப்பிடாமல் கூறி விட்டனர்.

இந்தி வெறியர்களுக்கு இது ஒரு பேரிடியாகப் போய்விட்டது. இந்தியால் ஆதிக்கம் பெறக் கனவுகொண்டோரெல்லாம் கை பிசைந்து நிற்கும் காட்சி நமக்கு நன்றாகத் தெரிகிறது. என்ன செய்வது? அவர்களைப் பார்த்துப் பரிதாபப்படுவதை விட நம்மால் வேறென்ன செய்ய இயலும்?

ஏன், ஒரு வளமும் வாய்ப்பு மற்ற மொழியை இந்நாட்டின் பொது மொழி என்று விளம்பரம் செய்யவேண்டும்? பின்னர் அது முடியாத காரியம் என்ற நிலை கண்டு கலங்கவேண்டும்!

இந்த இரங்கத்தக்க நிலை இந்திக்கு ஏற்பட்டும் இந்தி வெறியர்களுக்கு அதன்பாலுள்ள மோகம் குறைந்ததாகத் தெரியவில்லை.

அதனை எப்படியாவது அரசுபீடத்தில் உட்கார வைத்து விடலாமென்று இன்னும் சிலர் பெரு முயற்சி எடுத்து வருகின்றனர்.

அந்த முயற்சி இனி கைகூடி வராது என்பதற்கு நாமும் நடுநிலையாளர் பலரும் பற்பல மேற்கோள்களை எடுத்துக் காட்டி வந்திருக்கிறோம்.

–அறிஞர் அண்ணா

Grams: AMECO CALICUT Phone: 8661

Ameco

AMECO ENGINEERING INDUSTRIES

Mfrs: DOOR LACES, FLEXIBLE,VELVET, RIGID & ALUMINIUM CHANNELS, CONTOUR TAPE, CLIPS & RIVETS.

2/404-A, MAIN ROAD
BEYPORE, CALICUT 673 015

With Best Compliments From

CHANDRA TEXTILES
PRIVATE LIMITED

Peelamedu Post, Coimbatore - 641004

G. CHANDRAKANTHI
Managing Director.

தாளமுத்து-நடராசன்



''இந்திமொழி பொதுமொழியா? தகுதி என்ன
இருக்கின்ற தம்மொழிக்கு? குயில்கள் கூவும்
கொந்தவிழும் மலர்ச்சோலை தமிழர் நாடு;
கோட்டானுக் கங்கென்ன வேலை?'' என்று
செந்தமிழும் பிறமொழியும் நன்கு கற்றோர்
சீர்தூக்கி நன்குணர்ந்து மறுத்து ரைத்தார்;
எந்தவழி இந்திமொழி வந்த போதும்
ஏற்பதிலே என்றெல்லாம் எடுத்துச் சொன்னர்.

அரசியலில் மூதறிஞர் மறுத்துச் சொன்னர்
ஆய்வுரைகள் அறிவுரைகள் எழுதிப் பார்த்தார்;
முரசொலிக்கும் போர்க்களத்தில் நின்று நாளும்
முழக்கமிடும் பேரறிஞர் எதிர்த்து நின்றார்;
உரமிகுந்த அறப்போர்கள் பலந டாத்தி
உயிர்ப்பலிகள் பலகொடுத்தார்; எல்லாம்கண்டும்
இருள்மதியர் இந்திவெறி கொண்ட மாந்தர்
இன்றுவரை கேளாராய் உலவு கின்றார்.

விரலேந்தும் தனித்தனியே இயங்கி நிற்கும்
வேலேந்தும் பொழுதிலவை இணைந்து நிற்கும்;
தரமறந்த உரிமையுடன் மாநி லங்கள்
தனித்தனியே இயங்கிவரும்; பகைவ ருங்கால்
உறவுணர்ந்து தோள்தந்தே இணைந்து நிற்கும்;
ஒற்றுமைஎன் றிதனைத்தான் உரைப்பர் மேலோர்;
ஒருமைஎனும் பெயராலே விரல்கள் ஐந்தை
ஊசியினுல் தைப்பதற்கு முனைவா ருண்டோ?

தத்தமது நாகரிகம் மொழிகள் பண்பு
தனித்தன்மை எள்ளளவும் கெடுதலின்றி
ஒத்துரிமை உணர்வுடனே மாநி லங்கள்
உளமொன்றி வாழ்வதுதான் நமது வேட்கை;
பித்தரென வெறியரென ஒருமை என்ற
பெயர்சொல்லி இந்தியினுல் தைத்து விட்டால்
எத்தனைநாள் ஒட்டிருக்கும்? குனிந்த மாந்தர்
இருதோளும் விரித்தெழுந்தால் தெறித்துப் போகும்.


உறவுக்குக் கைகொடுப்போம் எனினும் எங்கள்
உரிமைக்கும் குரல்கொடுப்போம்; தென்பு லத்தின்
மறுதிக்கில் வாழ்வோர்கள் குரலைக் கேட்க
மறுத்துவிடின் உயிர்கொடுப்போம்; சிறையில்
மாண்ட
திறமிக்க நடராசன் தாள முத்து
தென்னுட்டில் பலருள்ளார்; இன்று வாழ்வோர்
உரிமைக்கே உயிர்கொடுப்போம் என்பர் நானே
உணர்வுடையார் என்சொல்வார்? யாரே கண்டார்.



கவியரசு முடியரசன்

வாக்குமூலம்





மதிப்புமிகும் நடுவருக்கு வணக்கம்! நீதி
மன்றத்தில் நிற்கின்றேன் குற்றக் கூண்டில்!
கொதிப்போடு மொழிப்பிரிவைக் கொளுத்தி விட்டேன்;
கொழுத்துப்போய் அல்ல!இது குற்றம் என்று
விதிப்பீர்கள் தண்டனையை! பெற்றுக் கொள்வேன்;
வீண்வாதம் நான்செய்ய மாட்டேன்! இந்தி
எதிர்ப்புணர்வில் மொழிப்பிரிவை எரித்த செய்கை
எனதுமனச் சாட்சித்கோ குற்றம் அல்ல!

முன்னேற்றக் கழகத்துக் கவிஞன்; நாலே
முத்தமிழைக் கற்றுணர்ந்த புலவன்! ரொம்பச்
சின்னவன்தான்! இருந்தாலும் பிறர் மதிக்கும்
சீர்வாய்ந்த பேச்சாளன்! இந்தி தன்னை
என்னென்ன வோவிதத்தில் எதிர்த்துப் பார்த்தேன்!
எழுதிப்பார்த் தேன்;பேசிப் பார்த்தேன்; இன்னும்
என்னவழி? ஆட்சிமொழிச் சட்டம் தன்னை
எரிப்பதுதான் வழியென்று எரித்தும் பார்த்தேன்!

தயங்கவில்லை; மயங்கவில்லை! இந்த நாட்டில்
தமிழ்படித்தோர் இந்திதனை எதிர்ப்ப தற்குப்
பயங்கொண்டு ஒதுங்கிவிட்டால் இனிக்கும் வெல்லப்
பாகுநிகர் தமிழ்கெட்டுச் செத்துப் போகும்!
நயங்கெட்ட இந்திமொழி வந்து குந்தி
நாட்டாண்மை செய்திடுமே! அதனால் நன்றாய்
இயங்குகின்ற இயக்கத்தில் உள்ள தொண்டன்
எரித்திட்டேன் ஆட்சிமொழிச் சட்டம் தன்னை!

சாட்சிமொழி பலசொல்லிக் காட்டி நீங்கள்
சட்டத்தை நீனைவூட்டிச் சபையைக் கூட்டி
'ஆட்சிமொழிச் சட்டத்தை எரித்த தற்கு
அளித்திடுக நீவாக்கு மூலம்!' என்றீர்
சாட்சிஎன்ன? காட்சிஎன்ன? நீங்கள் சொல்லும்
சட்டம்என்ன? ஆட்சிஎன்ன? எனது நெஞ்சின்
சாட்சிக்கோ நான்குற்ற வாளி யல்ல;
சட்டம்அது குற்றமென்றால் மறுக்க மாட்டேன்!

அமிழாமல் வளர்கிறது எங்கள் கட்சி;
அதனைநான் எப்போதும் நினைத்தி ருப்பேன்!
கமழ்கின்றார் எனதுமன நினைவாய் எங்கள்
கற்கண்டுத் தனித்தலைவர் அறிஞர் அண்ணா!
தமிழ்காக்க எரிந்தவனும் சின்ன சாமி
தன்னையும்நான் மனநினைவில் உலவ வைப்பேன்!
தமிழ்காக்கும் தொண்டனுக்கு இந்த நாட்டில்
தண்டனைதான் பரிசென்றால் ஏற்றுக் கொள்வேன்!

1964 பிப்ரவரி 26-ல் தூத்துக்குடியில் ஆட்சிமொழிச் சட்டத்தை எரித்துக் கைதானபோது தூத்துக்குடி நீதிமன்றத்தில் வாசித்தளித்த வாக்குமூலப் பாட்டு இது. பாட்டுசுருக் கிடைத்து பரிசு ஆறு மாதக் கடுங்காவல்.

கவியரசர்
பொன்னிவளவன்

நெருப்புக் பூத்தமலர் சின்னச்சாமி!

மணிமொழி

நெருப்புக்கும் சூடேற்றித் தந்தவன்நீ!
நெஞ்சத்தின் நெஞ்சத்தில் கலந்தவன்நீ!
செருப்புக்குக் காலானோர் இந்தநாட்டில்
செந்தமிழைப் புறக்கணித்து இந்தியின்மேல்
விருப்பம்மிகக் கொண்டிருக்கும் இழிவையெண்ணி
வேதனையின் விளிம்புக்கே சென்றதாலோ
நெருப்பான நெஞ்சத்தைக் காட்டும்வண்ணம்
நெருப்புக்குள் பாய்ந்தாய்நீ சின்னச்சாமி!


சின்னசாமி என்கின்றார் உண்மையில்லை
தியாகத்தால் நெஞ்சுரத்தால் பெரியசாமி!
சின்னசாமி நீவிர வரலாற்றுக்கோர்
'சின்ன' சாமி யாகிவிட்டாய்! இந்த மண்ணில்
என்னசாமி இருந்தென்ன தமிழைக்காத்த
இனியசாமி எழுச்சியினை வடித்த சாமி
சின்னச்சாமி! தா.பழூர் தந்தசாமி
செந்தமிழர் சாமியாகி வாழுகின்றாய்!

தோன்றின்நற் புகழுடனே தோன்றவேண்டும்
திருக்குறளார் தெரிவித்தார்; கருவிருந்து
தோன்றுகையில் உனக்கெந்தப் புகழுமில்லை
தீயில்நீ வீழ்ந்துபுதுத் தோற்றம்பெற்றாய்!
தோன்றுகையில் புகழுடனே தோன்றிவிட்டாய்
தொகைதொகையாய் நின்வுகளே ஊன்றிவிட்டாய்!
சான்றோனாய் உனக்காணு சுற்றத்தாரும்
சரித்திரமாய்ப் பார்த்துவிட்டார் சின்னச்சாமி!

'வன்நெஞ்சர் இந்தியினைத் திணிக்கின்றாரா
வரலாற்றுத் தமிழமுதை அழிக்கின்றாரா?'—
உன்நெஞ்சை சுட்டெரித்த புண்ணே நீயோ
உன்னுயிரைச் சுட்டெரித்தா பொசுக்கவேண்டும்?
என்நெஞ்சில்; உலகத்தார் நெஞ்சிலெல்லாம்
எழுச்சித்தீ மூட்டிவிட்டாய்! தமிழழிக்க
வன்நெஞ்சர் இனிமுயன்றால் தீப்பிழம்பு
வடிவெடுக்கும் படையெடுக்கும் முடிவெடுக்கும்!

இருவரியில் அறவழியைக் குறளில் சொன்னார்!
இந்தியத்துக் காந்தியதை அடுத்துச் சொன்னார்!
நெறியதனை நமதண்ணன் தமிழ்நிலத்தில்
நித்தம்விதை யாய்ஊன்றிக் கொண்டிருந்தார்!
துறவிகளே வியட்னமில் தீக்குளித்தார்
தீந்தமிழர் நிலத்திடையே தீக்குளித்தே
அறவழிப்போர் வரலாற்றைத் தொடங்கிவிட்டாய்
அச்சமின்றித் தமிழ்காப்போம் சின்னச்சாமி!

நெருப்பின்மேல் சாம்பல்தான் பூத்திருக்கும்
நித்திலமாய் நீபூத்துச் சிரிக்கின்றாயே!
கருப்புநிறப் புகையைச்செந் தணல்கிளப்பும்
கருஞ்சிவப்புக் கொடிவண்ணம் காட்டிநிற்கும்!
கருப்புசிவப் பானவன்நான்; தமிழினத்தைக்
காப்பதெங்கள் கழகம்தான் எனவுரைத்தே
நெருப்பின்மேல் ஆணையிட்டுச் சென்றுவிட்டாய்
தின்வழியில் நடந்துதினம் தமிழைக் காப்போம்!



இலட்சியம் மணக்கும் சந்தனம்

நெருப்பிலே பூத்த
ஒருமலரே
அரங்க நாதா!
உன்
ஒற்றை மரணத்தால்
சரித்திரம் பெற்ற
பெருமையை
நூறு வாழ்க்கைகளாலும்
உருவாக்க முடியாது.

நீ
மரணித்தாய் — உன்
மரணத்தை வாழவைத்தாய்.
பிறந்த தேதியும் நேரமும்
கொண்டே — உலகம்
ஆ டம் கணிக்கிறது.
ஆனால்... உன்
இறந்த நாள், நேரம்
வைத்தே
எங்கள் தமிழின்
எதிர்காலத்தை நிச்சயப்படுத்து
கிறோம்.

தேனீக்கள் தாலாட்டும்
திராட்சைத் தோட்டம்
தித்திப்பு ஒத்திகை
நடத்'வதும்
போராட்டமும்
ஒன்றல்ல...

எரிமலையின் நெற்றி
அரங்கில்
செந்தமிழ் வாழ்க
இந்தி ஒழிக—
என்று எழுதுவது...
நடிகை இடையைப்
பிடித்தபடி — அவள்
சடையில்
பூச்செருகும்
சிருங்காரமல்ல

இந்தியை எதிர்க்கத்
தம்மைச்
செந்தழல் படுத்தும்—

வரலாறு—
அந்தாதியாக
அனுமதிக்க மாட்டோம்!
இந்தி மட்டுமே
இனி எரிக்கப்படும்.


குறட்டையூர்க் கட்டிலில்
அரிமா கிடந்தால்
நரியே நாட்டாண்மை செய்யும்...
தாமரை, முல்லை
ஊமைகளானால்...
அரளியின் உதடுகளில்
ஆணைகள் பிறக்கும்...

அரங்கநாதா...எம்
வாழ்வுத் தூக்கத்தை
உன் மரண விரல்களால்
தட்டி எழுப்பி நீ
தந்த இச்செய்தியை
மறந்திட மாட்டோம்.

அக்கினிக் காட்டில்
கடைசி மூச்சை,
தமிழ் வாழ்க என்ற
முழக்கத்தில் நீ
கரைத்தாய்... அந்த
முழக்கத்தை இதோ.. இதோ
எல்லா இதயங்களும்
எதிரொலிக்கின்றன.

சூரிய தேசம்
ஆறி விட்டால் கூட,
அதனை மீண்டும்
சூடு படுத்த—
உன்னை எரித்த நெருப்பை
எங்கள் விழிகளில்
ஏந்திக் கொண்டிருக்கிறோம்.


அந்த நாள்
நந்தி வர்மன்
செந்தமிழ் கேட்க
வெந்தழல் புகுந்தான்—
நீயோ
இந்தியை எரிக்க
இந்தன மானாய்...
எரிந்த பின்னும்
இலட்சியம் மணக்கும்
சந்தன மானாய்!



இளம்பாரதிதாசன்

இந்தி எதிர்ப்பு

தியாகி சிவலிங்கம்



இளங்குமரி

உண்ணுதல் விடுத்தாய் உறக்கம் மறந்தாய்
எண்சாண் உடலும் இற்றதாய் எண்ணினாய்
இன்பந் துறந்தாய் இதயம் கேவினாய்
கண்டவை யாவிலும் கருமையே கண்டாய்
விந்தைகள் ஆயிரம் வீளைந்து மலியும்
இந்தப் புவியினில் இணையுறச் சிறந்து
சிந்தை கவர்ந்திடும் செந்தமிழ் அழிக்க
இந்தி யென்னுமோர் இழிமொழி நுழைதலே
கண்டுளம் பொங்கினாய் கடுஞ்சின முற்றாய்
தன்னிலே அறியா தமிழர்கள் சிலபேர்
இன்னும் விழிப்பிலா இழிநிலே யுற்று
ஈனம் வீளைத்ததை எண்ணிப் பொருமினாய்
மானம் அற்றவர் வடமொழி மதித்தலே
காணும் நிலையால் கலங்கினாய்; அவர்க்காய்
நாணினாய் நின்மனம் நலிந்தாய் மெலிந்தாய்
கூனிக் குறுகி குற்றுயி ராகினாய்
மனவலி வில்லா மாக்களே நினைத்து
தினம்தினம் வருந்தினாய் திகைத்தாய்; ''தனித்தநல்
தன்மொழி அழிக்க இன்னொரு மொழிவரும்
புன்மையைக் கண்டும் பொங்கா துறங்கினர்
என்னடா தமிழர் இவரென'' சாடினாய்
என்றுதான் விழிப்பரோ என்றுயிர் வாடினாய்
பயந்தோர் தம்மை பார்வையால் பொசுக்கி
உயிரினும் தாய்மொழி உயர்வென ஒதினாய்
''செந்தமிழ்ச் சேனே ஒன்றெனத் திரண்டால்
எந்த வழியினில் இந்தி நுழைந்திடும்?''
என்றதோர் வினுவை எழுப்பினாய் தன்னையே
முன்னு தாரணம் ஆக்கவுந் துணிந்தாய்
தன்னிக ரற்று தரணியில் மூத்த
பொன்தமிழ் காக்க தன்னுயி ரழித்தாய்
அறுபத் தைந்தில் இந்தியை எதிர்த்து
பெருங்களம் அமைத்த கழகப் போரினில்
எரிதழல் புகுந்து பெரும்புக ழுற்ற
இருபதே வயதுடை வரிப்புலிப் போத்தே
உறுதி குலேயா உள்ளத் துணிவால்
செறுகள இலக்கணம் செய்தசிவ லிங்கா
இன்றுநீ யிருடன் இல்லே ஆயினும்
என்றும் எம்முள் இருந்தே இயக்கும்
தமிழ்ப் பெருமாளே தவத்திருக் கொழுந்தே
நிமிர்ந்தே நிற்கும் சரித்திர நாயகா
அன்று ஆர்த்துநீ தொடங்கிய பெரும்பணி
இன்றைய நாள்வரை முடிவுற வில்லேயால்
ஒன்றினே உரைப்போம் உன்மேல் ஆணே
இன்று நாங்கள் இடையற நிகழ்த்தும்
இந்தி எதிர்ப்புப் போர்மூணே தன்னில்
உந்தன் நினேவையே உறுதுணே யாக்கி
இந்தி மொழிக்கு செந்தழல் மூட்டி
பெற்றதாய் மொழியின் பெருமையைக் காக்க
சற்றுந் தளரோம் சாவுக் கஞ்சிடோம்
கற்றவர் போற்ற காலம் யாவையும்
வாழ்ந்தால் தமிழுடன் வாழ்வோம் அன்றேல்
தாழ்வுற இப்புவி தன்னில்
வாழ்வினைக் கொள்ளோம் வாழ்கநின் புகழே!

நாசேந்திரனின் பேத்திநேன்



எத்தனைப்பேர் என்னைப்போல் சாகவேண்டும்
இராசேந்திரன் என்பவன்நான்! தெம்ப ரத்தின்
முத்தென்பார்! முத்தமிழோர் வீணை என்றுல்
முனைமுறியா ராகம்நான்! இராக்கா லத்தின்
நித்திரையில் நான்கண்ட தமிழ்க்க னக்கள்
நிமிர்த்தியது என்னைஓர் தமிழ குக
சொத்துக்கோ சுகத்துக்கோ சாக வில்லை
துணிவோடு இந்தியனை எதிர்த்தேன்–செத்தேன்.

கவிநுணுக்கம் தெரியாதான்–கவிதை என்னும்
கனபடிமம் அறியாதான் கண்ணில் பட்ட
கவிதைஎன இந்தியன்முன் மடிந்து போனேன்
கல்தோன்றி மண்தோன்று முன் மடிந்து போனேன்
புவியனுக்கள் முகிழ்க்காத காலத் தில்தான்
ஆந்தமிழின் ஒலிஅலைகள் சுழன்ற தென்பேன்
அவியவிந்தே ''தமிழ்வீழ்ந்த'' வந்த போது
அதைத்தடுக்க உயிர்ப்பறவை பறக்க விட்டேன்.

பிடரிபட ஒடிவிட்ட இந்தி மீண்டும்
பின்வாயில் வழியாக நுழையு மானுல்
அட தமிழா! அழுக்காறு பொச்ச ரிப்பின்
அடிதளத்தில் வீழ்ந்தவனே! எனது வாழ்க்கைத்
தடயத்தில் நடந்தேனும் உனது வீரத்
தாக்கீதை எழுதிக்கு அனுப்பு! வினைப்
படத்தினிலே பாய்கின்ற சிங்கம் போல
பாவலனைக் காட்டாதே! இறங்கு போரில்.

வானுறைபோல் மீசைவைத்த தமிழா! இந்தி
வன்யத்தைப் பொடியாக்கு! படிகளும் போதே
தோளுயர்த்திப் பொதிகையென நின்றேன்! ஆட்சி
துப்பாக்கி நீட்டியது! நீல வான்போல்
மார்பகத்தை விரித்தேன்குண் டடித்த காயம்
விண்மீன்போல் வான்மார்பில் பதிந்த தன்று
சோர்ந்தேன்நான் சருண்டேன்நான் தமிழே என்று
சருகுமட்டும் குலையாத இசையாய் வீழ்ந்தேன்.

விழிப்போரில் காதல்கள் வீழ்வ தைப்போல்
வில்லைப்போரில் நாணயங்கள் சருங்கு தல்போல்
மொழிப்போரில் முடிந்துவிட்டேன்! எனக்குப் பின்னே
முடியாமல் தொடர்கின்ற இந்திப் போரில்
நீயும்சேர்! கல்லறையால் தமிழ்ச்செல் வத்தை
நிலைக்கவைப்போம்! நம்கூர்ஞர் வில்! நீ அம்பு
போய்த்தாக்கு! தமிழ்ப்பொழுது விடியட் டும் உன்
புறப்பாட்டை நான்கேட்டு விழிக்க வேண்டும்.

கவிஞர் குடியாசு

முத்தமிழ் முத்து

கவிஞர் முருகசுந்தரம்



வளர்பிறை தேய்பிறை என்பது போலத்
தளர்முறை யில்லாது தழைக்கின்ற செந்தமிழ
மூற்றிக் கனிந்த மொழிக்குலத் தரசியின்
நெற்றி வானத்தில் நிற்கின்ற திலகம்.
வீணாய் மூளீத்துப் படரும் கனகனீத்
தானே கனிந்து தழைக்கும் செழும்பயிர்.

பழுதில் லாத இலக்கணப் பாங்கும்
இழுமென் றிசைக்கும் வழுமிய ஓசையும்
அகமும் புறமும் ஆர்க்கும் சிலம்பும்
என்புநெக் குருகி அன்பரா குதற்குக்
கண்கள்நீர் சோரக் கழறு வாசகமும்
தன்பால் பெற்றுத் தழைத்தசெந் தமிழைச்
சீதை மொழிக்குப் பிறந்த இந்தியா
மோதி எதிர்த்து வீழ்த்த முடியும்?
வடக்கில் இருந்து வருகின்ற மொழிப்போர்
இத்திரு நாட்டின் இளஞ்சிங்கங் கட்குச்
சித்திரை நிலவில் தின்னும் நிலாச்சோறு.

சதியால் தமிழைச் சாய்க்கவந் தவர்முன்
கொதித்துக் குமுறிய முதற்றமிழ் வீரன்
நெருப்பு மழையில் நின்றநக் கீரன்.
சேனூரில் பிறந்த முத்து
வேரூய் இருக்க முடியுமா? எனவே
இந்திப் போருக் கிவனே ஈட்டிமுனை!
வடக்கர் இந்தியை வழிமறித்துத் தன்னை
முடித்துக் கொண்ட மூச்சு ஊஞ்சல்!
வாழிய சேனூர் முத்துவின் பெரும்புகழ்!

மலைத்தேன் தமிழ்க்கனல் சண்முகனே!



கதிர்நேர் எதிர்காண் மழைவில்லும்
கலைமா மதியின் இளம்பிறையும்
பதிந்தொளிர் கண்நிறைப் பைந்தோகை
நில மயில்கள் பயின்றுடும்
'பதி'தான் 'விராலி மலை'யாகும்!
பழமுதிர்ச் சோலை—முகில்சூழும்
பதியம் மலைமேல் அறுமுகத்தான்—
சண்முகம், 'திருப்புகழ்ப் பாட்'டுறைந்தான்!

மலையூர் விராலி மலை,அவ்வூர்
வயங்கிட 'சண்முகம்' நீபிறந்தாய்!
உலகோர் அறிந்தப் புகழ்ஊராய்
உறைய மொழிப்போர் வரலாற்றில்,
உலகே அதிர ''உயிர்வேள்வித்
தீ''யில் உனையே உவந்தளித்தாய்
மலைத்தேன் தமிழ்க்கனல் சண்முகனே!
வீரா! விராலி மலையோனே!

''தீயை நிகர்த் தீ 'இந்தித் தீ'
தீந்தமிழ்த் தாயை அழிக்க வரும்
தீ''என் றறிஞர் முன்னுரைத்தார்;
செய்தார் எதிர்த்தே பல அறப்போர்!
தியில், 'உயிர்த் தீ', 'குருதித் தீ'
'னெத் தீ' எனமூ வகைப்படுமாம்!
தீயில்அம் மூவகைத் தீயொன்றுய்ச்
சேர்ந்துதீய்ந் தாய்த்தமிழ்ச் சண்முகனே!

தண்டமிழ் மாமயில் தீய்ந்தழிய
தணலாய் வரும் 'இந்தித் தீ'யணைய
'சண்முகக்கோவே!' தணல் வீழ்ந்தாய்!
சாகாப் புகழொளி வீசுகின்றுய்!
''ஏண்மணிக் கோவை'' இயற்றிடுவோம்;
எங்கும்உன் 'தீ'ம்பணிச் சூளுரைப்போம்!
ஒண்டமிழ்க் 'காப்பு' நீயடைத்தாய்!
உயிர்க்காப் பியத்தமிழ்க்கு எமைப்
படைப்போம்!

கவிஞர் முருகுவண்ணன்

தமிழ்த் தணற்பரிதி

தனசேகரன்

நெருப்பரண் எழுப்பி இந்தி
நெருங்கொணு வண்ணம் அந்நாள்
எரித்துடல் மாய்ந்த வீரர்
இலட்சியம் அணைய வில்லை!
அருந்தமிழ் ஆசான் வீரன்—
வீரப்பன் எரிந்த அந்தத்
திருச்சியில் மீண்டும் கூடித்
துவக்கினேம் இந்திப் போரே!

அதிகாரம், பதவி, செல்வம்
அனைத்தையும் தமக்கே யாக்கச்
சதிகார இந்திக் கூட்டம்
துடிக்கின்ற செயல் தொடர்ந்தால்
மிதிநாகம் போலச் சீறி
எழுகின்ற தமிழினத்தை
எதுவொன்றும் தடுக்கொணுதே!
இந்திக்கேன் இந்தக் கேடே?

மும்மொழிச் சூமை நமக்காம்!
இழிமொழி இந்தி தன்னைத்
தம்மொழி யாகக் கொண்டோர்
இருமொழி மட்டும் கற்று
நன்மைகள் யாவும் பெற்று
நாட்டினில் உயர்வராம்! நாம்
சம்மதிப் போமா இந்த
மோசடிச் சதியி னுக்கே?

மாணிக்கம் வேண்டா மென்று
மகுடத்தில் சூழாங் கல்லைப்
பேணியே சேர்ப்பா ருண்டோ?
பேழையுள் ஏற்பா ருண்டோ?
பூனையோ ஆளும் வெய்ய
புலிக்குலம் வாழும் காட்டை?
ஹனஞ்சேர் இந்திக்(கு) ஆட்சி
உரிமையா? தமிழா ஏற்கும்?

பாரினில் மொழிகட் கெல்லாம்
பழமையோ டிளமை தன்னில்
ஓர்சிறி தேனும் குன்ரு
வலிமையும் வளமும் கொண்ட
சீர்த்திகொள் தமிழ ணங்கு
மூலையில் கிடக்க எந்தச்
சீருமில் லாத இந்திச்
சக்களத் திக்கா செங்கோல்?

நல்லபாம் பெனினும் புற்று—
புதருடன் அது இருந்தால்
தொல்லையொன் றில்லை; இல்லத்
துட்புகின் தொல்லை யாகும்!
எல்லையோ டிருந்தி டாமல்
இந்திநச் சரவம் நச்சுப்
பல்லுடன் சீறி வந்தால்
பாய்ந்துநாம் அதையடிப் போம்!

ஆசிரியர் வீரப்பன்

ஏராஜதேவன்



பிறந்த நாட்டின் பெருமையே நோக்கமாய்
பெரியார் கொள்கையே பெரும்பிடிக் கொள்கையாய்
அருந்தமிழ்ச் சிறப்பை கூறவே தொழிலாய்
அண்ணா வழியே தன்வழித் தடமாய்
சிறுமைகள் நாடா செயலே தொண்டாய்
சிறப்புறு வாழ்வே தான்பெறும் செல்வமாய்
உரிமையைக் காப்பதே உடல்வாழ் மூச்சாய்
உள்ளத் துணிவே கவசமாய் ஏற்று
ஆன்றோர் வாழ்க்கை வாழ்ந்த போதிலும்
அதனினும் மேலொரு வாழ்க்கை உண்டென
சான்று காட்டும்ஓர் சரித்திர மாகி
சாகா மனிதனாய் தமிழகம் போற்ற
இந்தியை எதிர்த்து எரிதழல் புகுந்து
இலட்சிய வாழ்வை உலகில் சாற்றிய
செந்தமிழ்ச் சிங்கமே வீரப்ப னேநீ
செய்த தியாகம் தமிழர்தம் நெஞ்சில்
என்றும் அணையா ஒளியாய்
நின்றே நிலவும் வாழ்கநின் பேறே!

இன்னொரு பொற்காலம்

புலவர் குழந்தை



கட்டபொம்மு கோட்டையும்
கடற்கரைச் சிலைகளும்
கட்டிடங்கள் யாவையும்
கட்டிவைத்த மேன்மையர்

தெள்ளுதமிழ்ப் புலவனும்
தெய்வமொழிப் பாவலன்
வள்ளுவர் கோட்டமதை
வளர்த்த சிற்பி நம்மவர்

பாடுபடுவ தொருவராம்
பலனைத் துய்ப்பதொருவராம்
நாடுபடும் பாடதை
நாமுணர்வ தவசியம்

இரவு பகல் பார்த்திரார்
என்றுமக்கட் காகவே
விரைவுடன் செயல்படும்
வேங்கையாக விரைபவர்

செய்ததை மறந்திடும்
செய்கை தமிழனுக்கில்லை
நன்றிமறந் தவரலர்
நாமும் ஒன்று திரளுவோம்.

உடலிச்சிறை வைப்பினும்
உணர்வைச் சிறைவைப்பரோ
கடலையொத்த தமிழ்ப்படை
கதறி எழும் காணிரோ

எரிமலைபோல் குமுறட்டும்
இதயகுகை உணர்வுகள்
மரித்துவிட்ட போழ்திலும்
மானம் காக்க வேண்டுமே

உரிமையை யிழப்பதா
உண்மையும் மறைவதா
ஒன்றுசேர வாருங்கள்
உள்ளங்கனித் தாருங்கள்

பொற்காலம் படைத்திடுவோம்
பொன்னிநாடன் தலைமையில்
நற்காலம் நமக்கினிமேல்
நம் தலைவர் வாழ்கவே.

தாழ்ச்சி மனப்பான்மையேன்
தமிழுணர்வு சாவதேன்
வீழ்ச்சி வந்தபோதிலும்
விரைந்தெழுக நண்பனே!

நீயடிமை யல்லவே
நெஞ்சம் ஊமையல்லவே
நாயடிமை யாவதா
நைந்துயிர் போவதா

நாவிலேந்து செந்தமிழ்
நறைபருகு நெஞ்சராம்
பாவில் வேந்தர் தம்வழி
பார்த்துணர்ந்த பண்பினர்

தென்னவர்க்கோர் அண்ணலும்
திருவமைந்த கலைஞர், அம்
மன்னவர்க்கோர் தம்பியாம்
மதியும், ரவியும் போலவர்

ஆட்சிசெய்ய வந்ததோர்
அருந்தமிழத் தாய்மகன்
ஆட்சிகாலம் மக்களுக்கு
அமுதமாய் இருந்ததே

பீடுமிக்க பேச்சினால்
பெற்றிமிக்க கவிதையால்
நாடுகாக்க வந்தவர்
நலம்விளைத்து நின்றவர்

பாடகக் கொலுசுகள்
பாட நடம் ஆடிடும்
ஆடகப்பொன் மாதவிக்கு
அழகுசிலை சமைத்தவர்

பாவைமன்றம் ஒப்பிலா
பளிங்(கு) இலஞ்சி மன்றமும்
நெடுங்கல் மன்றம் மற்றுள
நிலையமெலாம் அமைத்தவர்

அருந்தமிழ்ப் புகாரிலே
அரசு செய்த வளவனே!
திருந்துகல்லைக் கூடத்தின்
திறமுரைப்ப தெங்ஙனம்?

பொங்கல் வாழ்த்துக்கள்!

தந்தி: பைரூப்பிள் போன்: 34411

BGS

பெங்களூர் கிரேப் ஸ்டால்

(உரிமையாளர்: ஜி. கிஷண்சந்த்)

பழ மண்டி

116 A, கருப்ப கவுண்டர் தெரு,
கோவை 1.

அனைவருக்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்கள்!

ஸ்ரீமதி இன்ஜினீயரிங் ஓர்க்ஸ்

ஸ்டீல் ட்ரஸஸ், கிரில்ஸ், ஜன்னல்கள்
தயாரிப்போர்.

138, படேல் ரோடு,
கோயமுத்தூர்-641009.

With The Best Compliments
FROM

RAM SARUP MALHOTRA

THEATRE DELITE

V. H. ROAD, COIMBATORE-1.

SARGAM:

16-A, Lokamanya Street
R. S. Puram—CBE-2

Res: Phone: 34538

Phones: 23436
30609
26145

பொங்கல் வாழ்த்துக்கள்

தந்தி: ESTEEARR தொலைபேசி: 22140

S. T. ராதாகிருஷ்ண செட்டியார்


ராதாகிருஷ்ண ஜுவல்லரி
& பான் புரோக்கர்,

279, பெரியகடை வீதி,
கோவை-1


கள்ளச் சாராய சாம்ராஜ்யத்தில்.... சட்டம் ஒழுங்கு!



11.10.1977-ல் கிணத்துக் கடவில் அ.இ.அ.தி.மு.க எம்.எல்.ஏ. காவல் நிலையத்தில் நுழைந்து லாக்-அப்பில் இருந்த தன் மகனைப் பலவந்த மாக 'மீட்டு' வந்தார்.



16-10-77-ல் சென்னை தி. நகரில் சாராய வேட்டையின் போது ஆளும் கட்சியினர் ஒரு காவலரைக் கட்டி வைத்து அடித்துக் காலை ஒடித்தனர். போலீஸ் அதிகாரியைக் கத்தியால் குத்தினர். போலீசார் மீது சைக்கிள் செயின் தாக்குதல் நடத்தினர்.




18.5.78 இல் மைலாப்பூர் காவல் நிலையத்தை அ.இ.அ.தி.மு.க.வினர் தாக்கி சாராய வழக்கில் கைது செய்யப்பட்டோரை விடுதலை செய்யக்கோரி கலவரம் நடத்தினர்



12.7.78 இல் சைதை புளியந்தோப்பு சரகத்தில் அரிவாள் கம்புகளுடன் போலீசாரைத் தாக்கிச் சாராயக் கைதிகள் விடுதலை! வெட்டுக்காயங்களுடன் போலீஸ் அதிகாரி மருத்துவமனையில் அனுமதி!



27.6.78-ல் சென்னை ஓட்டேரியில் இரு கள்ளச் சாராய கோஷ்டியினர் பல நாட்கள் ஒரு உள் நாட்டு யுத்தமே நடந்தினர்! மக்கள் பீதியுடன் வெளியேறினர்!



5.10.78 ஆம்பூர் காவல் நிலையத்தைச் சுற்றி வளைத்து ஆளும் கட்சியினர் தாக்குதல்! இரு சப்இன்ஸ்பெக்டர்கள் – 8 போலீசார் காயம்.



29.9.78 இல் கடலூர் காவல் நிலையத்தில் ஒரு ஆளும் கட்சி எம்.எல்.ஏ புகுந்து ரகளை செய்து ஒரு சாராயக் கைதியை மீட்டு வந்தார்.




7.9.78 இல் கோவை சர்க்கிள் இன்ஸ்பெக்டர் வீட்டில் ஆளும் கட்சி எம்.எல்.ஏ ரகளை! போலீஸ் வலைவீச்சு! ஆசாமி தலைமறைவு!




13.10.78 இல் கடையநல்லூரில் ஆளும் கட்சியினர் 300 பேர் கம்பு கத்திகளுடன் போலீசாரை தாக்கி ; கள்ளச் சாராய கைதிகளை விடுதலை செய்தனர்!



31.7.78 இல் ஆளும் கட்சியினர் இராமநாதபுரத்தில் கலெக்டரையே தாக்கினர்!



19-11-78-இல் கீழப்பாவூர் தூரில் வரிவசூலிக்க வந்த திருவண்ணமலை துணைத் தாசில்தாரை அ.இ.அ.தி.மு.க. அமைப்பாளர் தாக்கினர்



25-11-78 இல் ஆளும்கட்சியினர் பேருந்தில் பிரயாணம் செய்த மாணவிமீது கல்லை வீசினர்.



27-11-78 இல் பல்லாவரத்தில் சாராயக் கைதிகளை விடுவிக்கக் கோரி ஆளும் கட்சியினர் காவல் நிலையத்தின் மீது "படையெடுப்பு" நடத்தினர். துப்பாக்கிச் சூடும் நடைபெற்றது.



9.12.78-இல் கழகச்செயல்வீரன் பாங்கோ ஆறுமுகத்தின் பிணத்தையும் ஆளும் கட்சிக் காட்டுமிராண்டிகள் தாக்கினர்

பாவம்! காவல் துறை!
ஆளும் கட்சியினரின் அடி, உதை வாங்கி
கள்ளச்சாராய சாம்ராஜ்யதத்தின்
காவல்துறையாகப் பயன்படுத்தப்படுகிறது!

திராவிடத்தில் கலாச்சாரப் புரட்சி

கி.வீரமணி

தந்தை பெரியார் அவர்கள் சுய மரியாதை இயக்கங் கண்டு நிகழ்த்தி யுள்ள ''கலாச்சாரப் புரட்சி'' உலக வரலாறு காணாத ஒன்றாகும்.

'கலாச்சாரப் புரட்சி' என்றோ அல்லது வேறு வகையிலோ பிரம் மாண்டம் தொனிக்கும் வகையில் தந்தை பெரியார் அவர்கள் அதற்கு பெயர் கொடுக்கவில்லை.

சனத்தின சிவப்பாக்க— செஞ் சீனம், பழமையின் தளையிலிருந்து விடுபட வேண்டும் என்று அரும் பாடுபட்ட 'மா'வின் புரட்சிகர சிந் தனைகளும் செயல் திட்டங்களும் அரி யவைகள் என்றாலும், அரசியல் அதிகாரம் மட்டும் கலாச்சாரப் புரட்சியினை உருவாக்கிவிட முடி யாது என்று கருதியேதான் அந் நாட்டு சுதந்திரத்திற்கு சில ஆண்டு கட்குப் பின்னர், மாவோவே ஒரு செங்காவலர் (Rec Inwards) படையினைத் துவக்கி, 'கலாச் சாரப் புரட்சி'யையும் ஆயுதம் தாங்கி நடத்த முனைந்தார். இது அரசியல் விடுதலையில் 'ஆட்டோ மேடிக்' விளைவாக சமூக விடுதலை பூத்துவிடும் என்ற மாயையிலிருந்து அனைவரையும் விடுபடச் செய்ய அருமையானதோர் எடுத்துக்காட் டாகும்!

திராவிடச் சமுதாயத்தைத் திருத்தி சமத்துவமும், சம வாய்ப் பும் உள்ள மக்கள் சமுதாயமாக அவர்களை உருவாக்கமுனைந்ததந்தை பெரியார் அவர்கள், தன்மான இயக்கத்தின் மூலம் உருவாக்கிய 'மனுப் புரட்சி'களில் கலாச்சாரப் புரட்சியே முக்கியமானதும், எதிர் கால வரலாற்று ஆசிரியர்களின் ஆய்வுக்கும் மிகவும் தேவைப் படும் ஒன்றாகும்.

'அக்கிராசனாதிபதி அவர்களே' என்று அழைத்து, சகோதர சகோ தரிகளே என்று மகாஜனங்களை விளித்து, 'ஸ்ரீமான்' (பேச அல்ல) பிரசங்கம் செய்ய முனையும் அந்தக் காலத்தை இன்றைய தமிழ் இளை ஞர்கள் அறியமாட்டார்களே!

கடிதம் எழுத வேண்டுமானால் கூட 'மகாராஜராஜஸ்ரீ' 'தேவரீர்' என்று தொடங்கி (மூத்தவர்கள் ஆனால்) அல்லது (இளையவர்கள் ஆனால்) 'சிரஞ்சீவி' என்று துவங்கி 'நமஸ்காரம்' கூறி க்ஷேமம், க்ஷேமத் திற்குப் பதில் எழுதிடும் நிலை இன்று உண்டா?

'அன்புள்ள தோழரே, வணக்கம். நலம். நலமறிய நாட்டம்' என்று தமிழ் உணர்வு கொப்பளிக்க எழு திடும் நிலைக்கு இந்த இயக்கம் அல் லவா காரணம்?

இதைக் கலாச்சாரப் புரட்சி என்று சொல்லாமல் வேறு எதைச் சொல்வது?

'அபேட்சகர்' வேட்பாளர் ஆன கதை இதனால் அல்லவா?

உயர்ந்த சாதிக்காரருக்குத்தான்



படிப்பும் உத்தியோகமும் என்றுகி விட்ட நிலையில் இப்படிப்பட்ட மாறு தல்களால்தானே தமிழன் மானம் பெற்றுன்? மண்டைச் சுரப்பைப் பெற முயன்றுன்?

'விவாக சுபமுகூர்த்தப் பத்திரிகை' மறைந்து 'வாழ்க்கைத் துணைநல ஒப் பந்த வீழா' வந்ததே, அது வெறும் மாற்றமா? இல்லையே! மாபெரும் கலாச்சாரப் புரட்சி அல்லவா?

'கன்னிகாதானம்' இன்று இல்லை; 'தாராமுகூர்த்தம்', 'பாணிக் கிர கணம்'— இவையெல்லாம் இன்று இல்லையே! 'கர்ணபூஷண பண்டிகை' காதணி விழாவாகியது.

'பிரசவ விடுதி' பிள்ளைப்பேறு அல்லது மகப்பேறு விடுதியாயிற்று.

உத்தரக்கிரியை பத்திரிகை 'நீத் தார் நினைவு நாள்' அறிவிப்புக் கடிதமாயிற்று.

இவையெல்லாம் எப்படி நிகழ்ந் தன?

இவை ஏதோ வெறும் சொல் மாற்றங்கள் அல்லது மணிப்பிர வாள நடையிலிருந்து தனித்தமிழ் ஆக்கப்பட்டவைகள் என்று மாத் திரமே உற்று நோக்கப்படக் கூடாது!

தத்துவ ரீதியாகவே இவைகள் மாற்றமடைந்துவிட்டன!

பிறவியில் எவர் உயர்ந்த சாதிக்காரரோ அவர்தான் திரு மணம் நடத்தி வைக்கத் தகுதி படைத்தவர் என்ற புரட்டு உடைக் கப்பட்டு, மணமக்கள் நல்வாழ்வில் அக்கறை உள்ள கொள்கைக் குடும் பத்தினர்களே மணவிழாவிற்குத் தலைமை தாங்கத் தகுதி உள்ள வர்கள் என்ற அடிப்படையில்தான் தன்மான இயக்க வாழ்க்கை ஒப்பந் தங்கள் நடைபெறுகின்றன.

வெறும் சம்ஸ்கிருத எதிர்ப்பு என்பதல்ல இது; ஒரு சிறுபான்மை யினர் மிகப் பெரும்பான்மை யினரை ஆதிக்கம் செலுத்தும் கொடுமையாகும். (Tyranny of the minority)

பெண்கள் அடிமைகள், பெண்கள் பண்டங்களைவிடக் கேவலமான வர்கள் என்ற பழைய போக்கு சுயமரியாதைத் திருமணத்தின் மூலம் உடைக்கப்பட்டு, புரியாத மொழியின் ஆதிக்கம், மேல்சாதி யினர்— பார்ப்பனரின் ஆதிக்கம்— இவைகள் எல்லாம் ஒழிக்கப்பட்டு விட்டன.

மனுஸ்மிருதியும் இராமாயண மும் பாரதமும் பகவத் கீதையும் படிக்கப்பட்ட மக்களிடையே 'குறள்' மாநாடு கூட்டப்பட்டு, திருக்குறள் பரப்பப்பட்டதேகூட இக்கலாச்சாரப் புரட்சியின் மற் றொரு அம்சம்தான்!

பெயர்களில்எல்லாம்வடமொழிப் பெயர்கள், கடவுள்பெயர்கள் என் றும், மத அடிப்படைப் பெயர்கள் என்றும் இருந்த நாட்டில், 'இராவணன்', 'மேக தூதன்', 'சம தர்மம்', 'குடியரசு', 'ரஷ்யா', 'லெனின்', 'ஸ்டாலின்' 'தமிழ்ச் செல்வி', 'தமிழரசு', 'இரணியன்' என்றெல்லாம் பெயர் சூட்டிக் கொண்டு இனஉணர்வு, தன்மானம், தமிழ் வீரம், சமுதாய சமத்துவம் முதலியவற்றை உணர்த்தியது மிக மிகப் பெரியதோர் புரட்சி அல் லவா?

அண்ணு அவர்கள் சென்னை சட் டக்கல்லூரியில் தோழர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களிடம் வாதா டியபோதும், பிறகு நாவலர் சோம சுந்தர பாரதியிடம் வாதாடிய போதும் எடுத்து வைத்த வாதங்கள் இந்தக் கலாச்சாரப் புரட்சியை மிகத் தெளிவாகக் காட்டின.

தந்தை பெரியார் துவக்கிய கலாச்சாரப் புரட்சியின் ஒரு திருப் பம்தான் சுயமரியாதைத் திரு மணத்திற்கு சட்ட வடிவம்— அண்ணு காலத்து அருஞ்சாதனை.

அதுபோலவே, மடி கட்டி கோயி லின் படிக்கட்டில் நின்று— தமிழர், தமிழ் மொழி கருவறைக்குள் நுழை யக்கூடாது என்ற நிலையை மாற்ற, கருவறைக்குள் பூசை செய்ய எவ ரும்— எந்தச் சாதினரும் செல்ல லாம் சில பயிற்சிகட்கு உட்பட்டு என்ற சட்டத்தை கலைஞர் அவர்கள், தந்தை பெரியார் அவர்களது பெரு விருப்பத்திற்கிணங்க கொண்டு வந் ததே 50 ஆண்டுக் கால மவுனப் புரட்சியின்— கலாச்சாரப் புரட்சி யின் மற்றொரு திருப்பம்தானே!

அது மட்டுமா? தாழ்த்தப்பட்ட வர்கள் இன்று இருவர் உயர்நீதி மன்ற நீதிபதிகளாக தமிழ்நாடு உயர்நீதி மன்றத்தில் வீற்றிருக் கின்றனர். உயர்சாதியினர் அவர் கள் ''ஒ மை லார்ட்'' என்றுதான் அடக்கத்தோடு விளிக்கின்றனர்!

சாஸ்திரமும் சட்டமும் அதற்கு இடங்கொடுக்காத நிலை 60 ஆண்டு கட்கு முன்பு—

இன்றோ அது ஒரு சாதாரண— புயல் வீசாத— சம்பவம்!

இவைகள் எல்லாம் தந்தை பெரியார் அவர்களது அறிவு, ஆற் றல், உழைப்பு காரணமாகவும், அவர்தம் கொள்கைக் குடும்பத்து உறுப்பினர்களான அண்ணுபோன்ற வர்களது அரியஉழைப்பாலும்தான்!

'கொலை வாளினை எடடா— மிகு கொடியோர் செயல் அறவே!' என்று ஒங்கி முழங்கிய புரட்சிக் கவிஞர்தம் பொன்மொழியாம் கொலைவாள் எடுக்காமல், இடை விடாத பிரச்சாரம், எழுச்சிமிகு பிரச்சாரம், எதையும் தாங்கும் இளர்ச்சிகள்— இவைகள் மூலமே இவ்வளவு மகத்தான சாதனைகள் இன்று வந்துள்ளன!

தமிழிசை இயக்கமானுலும், கலைத்துறையில் 'இரும்புத்திரை'யை உடைத்து செயல் ஆனுலும் எல்லாம் இப்புரட்சியின் மறுக்கமே என்ப தனை எவர்தான் மறுக்க இயலும்?

தந்தை பெரியார்தம் சாதனை என்ன?

அழிவுவேலைதானே என்று கேட் பவர்களுக்கு முகத்தில் அறைந் தார்போலக் கூறவேண்டும்.

ஆக்க வேலையின் முதல் கட்டம் அழிவு வேலைதான் என்றுலும், ஆக்க ரீதியாக எவ்வளவு சாதனைகளை தந்தை பெரியார் அவர்களும், அவர் கண்ட இயக்கமும், அதன்வழி வழி வரும் ஏனைய இயக்கங்களும் செய்துள்ளன என்று பார்த்தால் வரலாற்றில் ஒரு புதிய கண்ணோட் டமும் தேவை என்பது புலப் படும்.

கத்தியின்றி, இரத்தமின்றி, ஏன்— யுத்தமின்றி புத்தம் புதிதாக நமது இயக்கம் உருவாக்கிய அரிய சாதனை மூச்சை இன்று சுவாசிக்காத தமிழ்ப் பெருமக்கள் எங்கும் இல்லையே!

உணர்வது குறைவு! ஒப்புக் கொள்ளுபவர் அதினினும் குறைவு. அதனுல் உண்மை மறைந்துவிடுமா?

பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

G S

கோவிந்தசாமி & கோ.,

பழ மண்டி

28/67, கருப்ப கவுண்டர் வீதி, கோயமுத்தூர்-641001

தொலைபேசி: 30139 இல்லம்: 33188 தந்தி: ''AUMWADA''

உரிமையாளர்கள் :

N. கோவிந்தராஜ், P. மாக்கான், K. V. சாமி, K. S. சித்தாராமன்

சட்டமன்றத்தின் சிறப்பு உரிமைகள்

துரைமுருகன்
எம்.எல்.ஏ



மக்களாட்சி முறையில் செயல்படுவது, மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட சட்டமன்றத்தில்தான். மக்கள் பிரதிநிதிகள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டு விவாதிப்பதும், சட்டங்கள் இயற்றுவதும், அரசாங்கச் செலவினங்களுக்கு வேண்டிய நிதியை வழங்குவதும் சட்டமன்றத்திலேயே நடைபெறுகின்றன. ஜனநாயகம் இயங்குவதற்குத் தனிக்கருவியாகத் தொழில்படும் சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் சுதந்திரத்தோடும், அச்சமின்றியும், வேறு வகைகளில் தங்கு தடையின்றியும் தங்கள் பணிகளை சட்டமன்றத்தில் ஆற்றினால்தான் சட்டமன்றம் மக்களாட்சியின் மாண்புமிக்க பீடமாகப் பொலிய முடியும். எனவே, சட்டமன்றத்திற்கு என்றும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்றும் தனியான சிறப்பு உரிமைகள் உள்ளன.

இங்கிலாந்து நாட்டில் வரலாற்றோடு வளர்ந்த இச்சிறப்பு உரிமைகளை நம் நாட்டு மக்களவைக்கும், மாநிலங்களவைக்கும், மேலும் மாநிலங்களில் உள்ள சட்டமன்றங்கட்கும் நமது அரசியல் அமைப்புச் சட்டம் அளிக்கிறது. (அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 105, 194)

சட்டமன்றங்களுக்கு வரும் உறுப்பினர்கள் தங்கு தடையின்றி சட்டமன்றத்திற்கு வரவும். அங்கு எவ்வித மான அச்சமுமின்றி உரையாற்றி விவாதம் செய்யவும் உறுப்பினர்கட்கு தனி உரிமை வேண்டும். உதாரணமாக, நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள குறைகேடு பற்றி உறுப்பினர்கள் பேசும்போது பிற நபர்களைக் குறைகூறிப் பேச வேண்டியது அவசியமாகலாம். உடனே அவ்வாறு குறை கூறப்பட்டவர் தனது பெயருக்கு இழுக்கு ஏற்பட்டதென்று, பேசிய உறுப்பினர் மீது ''அவதூறு வழக்கு'' தொடரலாம் என்றால், என்ன ஆகும்? உறுப்பினர் எவரும் சுதந்திரமாகப் பேச முடியாத நிலை ஏற்பட்டு விடும். எனவே, சட்டமன்றத்தில் பேசும் உறுப்பினர்களுக்கு முழுப் பேச்சுரிமை உண்டு என்று சட்டம் கூறுகிறது. அதாவது, அங்கு பேசியது குறித்து உறுப்பினர் மீது யாரும் எந்த நடவடிக்கையும் எடுப்பது இயலாது. இந்த எல்லையற்ற பேச்சுரிமை, சட்டமன்ற உறுப்பினர்களுக்குள்ள சிறப்புரிமை ஆகும்.

அதுபோன்றே, சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றத்திற்கு வரும்போது போதிய காரணமின்றித் தடுத்து நிறுத்தப்பட்டால் அவர்கள் மன்றத்திற்கு வந்து பணியாற்றுவது இயலாததாகி விடும். இவ்வாறு காரணமின்றி ஓர் உறுப்பினர் தடுக்கப்பட்டால், அது உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறிய செயலென்று கொள்ளப்படுகிறது.



நிர்வாகத்திடமிருந்து பல தகவல்களை உறுப்பினர்கள் கோருகின்றனர். தகவல்களை அளிக்கும் மந்திரிகள் உண்மையான விவரங்களையே கூற வேண்டும். இல்லாவிடில் அதை யொட்டிய விவாதம் பொருள் அற்றதாகிவிடும். எனவே, உண்மைத் தகவல்களைப் பெறுவது மன்றத்தின் சிறப்புரிமையாகும்.

இத்தகைய சிறப்பு உரிமைகளை (Parliamentary Privileges) சட்ட மன்றச் சிறப்புரிமைகள் என்று கூறுவார்கள். இவ்வுரிமைகளை மீறும் செயல்களை (Breach of Privilege) என்பார்கள். எனவே, இத்தகைய சிறப்பு உரிமைகள் ஏதோ சட்டமன்றத்திற்கும் அதன் உறுப்பினர்களுக்கும் அளிக்கப்படும் தனிச் சலுகைகள் என்று நாம் நினைப்பது கூடாது.

எவ்வாறு நீதிமன்றம் சுதந்திரமாக இயங்க வேண்டுமெனில் அதன் கவுரவம் பாதுகாக்கப்பட வேண்டுமோ, அவ்வாறே சட்டமன்றம் பயனுள்ள வகையில் பணியாற்றவேண்டுமெனில் அதன் மதிப்புக்கு மாசு ஏற்படா வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும். எனவேதான், நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல்களை எவ்வாறு (Contempt of Court) என்று குற்றமாகக் கொள்ளுகிறோமோ, அவ்வாறே சட்டமன்றத்தின் ஏறத்தாழ இழுக்கு ஏற்படுத்தும் செயல்களை (Contempt of House) சட்டமன்ற அவமதிப்புக் குற்றங்களாகச் சருதுகிறோம். சட்டமன்ற சிறப்பு உரிமைகளை மீறும் செயல்கள் சட்டமன்ற அவமதிப்புக் குற்றங்களாகின்றன.

சட்டமன்ற அவமதிப்புக் குற்றங்கள் இன்ன இன்னவென்று கூறும்



சட்டம் ஏதும் இயற்றப்படவில்லை. இங்கிலாந்து நாட்டில் வரலாற்று மரபுப் படி அங்குள்ள பார்லிமெண்ட் அப்போதைக்கப்போது எழுந்த சூழ் நிலைகளில் எவற்றையெல்லாம் உரிமை மீறும் செயல்கள் என்று கண்டு குற்றங்களாகக் கொண்டதோ அவற்றையெல்லாம் மரபை யொட்டி நம் நாட்டிலும் குற்றங்களாகக் கொள்கிறோம். அவ்வாறு கொள்ளுவதற்கு நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் 105, 194 பிரிவுகள் வகை செய்கின்றன.

இனி, அடுத்த கேள்வி, இத்தகைய குற்றங்களை இழைத்தோரை எப்படி தண்டிப்பது? யார் தண்டிப்பது? என்றதேயாகும். உதாரணமாக, சட்ட மன்றம் நடந்து கொண்டிருக்கையில் பார்வையாளர்கள் பகுதியிலிருந்த ஒருவர் கோஷமிட்டு சட்டமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்கிறார் என்று வைத்துக்கொள்வோம். இப்போழுது அவரைப் பிடித்து போலீசில் புகார் கொடுத்து ஒரு நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்வதா? அப்படித் தொடர்வதென்றால், சட்ட மன்றம், நீதி மன்றத்திற்குக் கீழ்நிலையில் உள்ளதாக ஆகிவிடும். ஆனால், அரசு என்ற அமைப்பில் நீதிமன்றமும், சட்டமன்றமும் தனித்தனி உறுபுக்கள். சமநிலையில் உள்ள உறுப்புக்கள். எனவே, இங்கிலாந்து நாட்டில் உருவாகியுள்ள மரபுப்படி சட்டமன்றமே தன்னை அவமதித்த குற்றத்தினைச் செய்தவர்களைத் தண்டிக்கின்றது. சட்டமன்றம் வேறு மன்றத்திற்குச் செல்ல வேண்டிய தில்லை. இந்த முறையையே நாமும் பின்பற்றி சட்டமன்ற அவமதிப்புக் குற்றம் செய்தவர்களை சட்டமன்றமே தண்டிக்கும் நிலையை ஏற்றுக் கொண்டுள்ளோம். இத்தகைய அதிகாரம் சட்டமன்றத்திற்கு இருந்தால்தான் அதன் மதிப்பு காக்கப்படும்; அதன் மாண்பு பேணப்படும்.

அடுத்த வினா, எவ்வகையான தண்டனையை அளிப்பதென்பது.

குற்றம் இழைத்தவர்களை சட்ட மன்றம் சிறையிடலாம்– அல்லது அபராதம் விதிக்கலாம் – அல்லது எச்சரித்து விட்டு விடலாம். ஓர் உறுப்பினரே கூட சட்டமன்றத்திற்கு எதிரான அவமதிப்புக் குற்றத்தைச் செய்தால், அவரையும் இவ்வாறே சட்டமன்றம் தண்டிக்கலாம். அதோடுகூட, அவரை அந்த மன்றத்தின் உறுப்பினர் பதவியிலிருந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்கோ அல்லது அச்சட்டமன்றத்தின் ஆயுள் காலம் முடியும் வரையிலோ விலக்கி விடலாம். நம் நாட்டைப் பொறுத்தவரையில் இவ்வாறு குற்றமிழைத்தவர்கள் சிலர் சிறைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்; உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளனர்.


சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கையில், அதன் கண் முன்னிலையே இழைக்கப்படும் குற்றங்களுக்கு, அப்பொழுதே மன்றம் தண்டனை விதித்து விடுகிறது. ஆனால், வேறு வகையில் இழைக்கப்படும் குற்றங்களை ஆய்ந்து காணுதற்கென உரிமைக் குழு (Committee of Privilege) என்ற குழுவை சட்ட மன்றம் அமைக்கிறது. இந்தக் குழு வினர்தான், ஒருவர் மீது சாட்டப்பட்ட குற்றம் உண்மையா இல்லையா என்பதை ஆய்ந்து அதற்கு என்ன தண்டனை விதிக்கலாம் என்பதையும் பரிந்துரைத்து தனது அறிக்கையினை மன்றத்தின் முன்பு வைக்கின்றனர். அந்த முடிவை ஏற்பதும், ஏற்காததும் சட்டமன்றத்தின் உரிமையாகும். பொதுவாக அந்த அறிக்கையை விவாதிக்கும்பொழுது உரிமைக் குழு உறுப்பினர்கள் விவாதத்தில் பங்குபெறுவதில்லை. அறிக்கையை ஏற்று தண்டனை விதிக்கும் அதிகாரம் மன்றத்திற்கே உண்டு. சில வேளைகளில் உரிமைக் குழுவின் அறிக்கையில் தண்டனையைப் பற்றிப் பரிந்துரை ஏதும் செய்யப்படாமல், அதனை மன்றத்தின் விருப்பத்திற்கே விட்டு விடுவதும் உண்டு.

இதைப் பொறுத்து, ஒரு முக்கியமான கருத்தை நினைவில் கொள்ள வேண்டும். என்னவென்றால், சட்ட மன்ற உரிமை என்பது சட்ட மன்றம் என்ற மக்களாட்சியின் மாண்புமிக்க பீடத்திற்கு உரியது. எனவே, அது மன்றத்திலுள்ள ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்ற கட்சிகளைச் சேர்ந்த தல்ல. உரிமை மீறல் குற்றங்களைத் தீர்மானித்து அதற்கான தண்டனை வழங்கும்பொழுது உறுப்பினர்கள் கட்சிக் கண்ணோட்டம் சிறிதுமின்றி மக்களாட்சி மாண்பு நிலை பெற வேண்டும் என்று ஒரே கருத்தோடு செயல்பட வேண்டும். இதையொட்டி பொதுவாக உரிமைக்குழுவின் அறிக்கைகள் கூட பெரும்பான்மையினரின் கருத்து, சிறுபான்மையினரின் கருத்து என்று வேறுபாடு இலலாமல், குழுவினரின் ஒருமனதான கருத்தாக அமைவதே மரபாகும். இதுகுறித்து சட்ட மன்ற அவைமுன்னவரின் (Leader of the House) பொறுப்பு மிக மகத்தானது.

இவ்வாறு, குறுகிய கட்சிக் கண்ணோட்டமின்றி மன்றத்தின் மதிப்பையே கருத்தில் கொண்டு சட்ட மன்றம் இயங்கி மக்களாட்சி மாண்பினை பேணிப் பாதுகாக்கின்றது.

போங்கல் நல்வாழ்த்துக்கள்!

SSI




SREE SIDHA INDUSTRIES

MFRS: SSI DOMESTIC PUMPS, SINGLE PHASE & THREE PHASE MOTORS & SSI UNIT ELECTRIC PUMPING SETS

4/36 AVINASI ROAD,
BHARATHIPURAM
P.N. PALAYAM — COIMBATORE
641 037
Phone : 30219

என்ன பொங்கல்?

கவிஞர். கு.மா.பா



சீரோடு நாம் வாழ்ந்த பண்டைநாளில்
செழிப்போடு புத்தாண்டு பிறக்கும்போதில்,
ஏரோடு சேர்ந்தாடும் உழவர் மக்கள்
இனிப்போடு விளைவித்த புதிய நெல்லே
ஊரோடு பங்கிட்டு மஞ்சள் இஞ்சி
உறவோடு புதுப்பானைப் பொங்கலிட்டுப்
பாரோடும் உடனுழைத்த மாட்டினோடும்
பகிர்ந்துண்ட பண்பினிலே அறப்பாற் பொங்கல்!

கூழோடும் குடலோடும் சொந்தநாட்டில்
குடியோடு வாழ்ந்திடவும் வசதியின்றித்
தோலோடும் எலும்போடும் சோர்ந்துநிற்கும்
தோற்றத்தைக் காணுத அந்தநாளில்,
தோளோடும் வாளோடும் கடல்கடந்தும்
துணிவோடு கொடிநாட்டும் தமிழர்கூட்டம்,
வேலோடும் பகைவர்கூட வீழ்த்துகின்ற
வீரத்தால் பொங்கியதே பொருட்பாற் பொங்கல்?

பொன்னோடும் பூவுடலாள் புன்னகைப்பாள்;
பொருளோடும் புருவத்தின்வில் வளைப்பாள்!
வண்டாடும் விழியம்பை எய்வாள்! செம்பில்
வார்த்தாடும் வடிவத்துக் காளைநெஞ்சைப்
புண்ணேடிப் புரையோடிப் போகச்செய்வாள்!
புகழோடும் வீரமகன், பொல்லாப் பெண்ணின்
பின்னோடிக் காதலிலே பிச்சைகேட்பான்!
பிணைந்தாடப் பொங்கியதே இன்பப் பொங்கல்!

நேரோடும் இலக்கியத்து நெறிகள் பேசி
நெடுங்காலம் ஊருக்கே உபதேசித்தோர்,
சீரோடும் தோழமையால் பயனடைந்த
செய்நன்றி மறந்தவராய்க் கொள்கைவிற்று,
காரோடும் பணத்தோடும் பதவிதேடக்
கையேந்திக் கயவர்களின் கால்பிடித்துச்
சோறுண்டு தூங்குவதே வாழ்வாய் எண்ணும்
சூதர்களின் உள்ளுணர்வில் என்ன பொங்கல்?



பொங்கல் நல்வாழ்த்துக்கள்

இருதயா & அருள்

தியேட்டர்கள்

கோயமுத்தூர்

உரிமையாளர் : R. P. முத்து கவுண்டர்

"நெஞ்சுக்கு நீதி"

கதை வசனம்:

கலைஞர் மு. கருணாநிதி

விரைவில் இருதயாவில் திரையிடப்படும்

With The Best Compliments

FROM

Murugesan Enterprises

Film Exhibitors & Distributors


Regd. OFFICE : *10, S. V. V Naidu Street*

POLLACHI

இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம்!
தமிழையும் இந்தியாவின் ஆட்சிமொழி ஆக்கிடுவீர்!





திருப்புமுனை ஏற்படுத்திய
திருச்சி மாநாட்டுக் காட்சிகள்!



ஊர்வலக்காட்சி

எப்படிக்கும் வந்து புகுந்துவிடும் - இந்தி
எந்தனை பட்டாளம் கூட்டிவரும்?






கொட்டும் மழையில், முழுநிலைகொட்டமும் தயங்காத
கொள்கை வீரர்கள் அணிவகுப்பு காணீர்!

செந்தமிழுக்கே தீமை வந்தபின்னும் - இந்தத்
தேசமிருந்தொரு லாபமுண்டோடா? - எனத்
தீக்குளிக்கச் சென்ற தியாகி ஒருவரின்
நினைவாக...







தொடர்வண்டிகளைப்போல
பேருந்துகள் அணிவகுப்பு!



முத்தமிழுக்கு முடிசூட்ட
முக்கனிகளுடன் வந்தோர்!


தளர்வுகளற்றதில்
தமிழகத்தையெவரும்,
முன்னணியிலிருந்தனரும்!


பந்தலுக்கு வெளியே...
பந்தலுக்கு உள்ளே...



உரசேற்புக்
குழுத்தலைவர்
அன்பில் பேட்சி
அணினிக்கிமுர்



மேடையில் தலைவர்கள்!

இந்த
மாநாட்டில்
ஒரு திருமணமும்
நடைபெற்றது!




படத்திறப்புக்
காட்சிகள்!






இந்தி எதிர்ப்பு போரில்
உயிர் நீத்த தியாகிகள்



N. H. Road, Coimbatore
641001

உரிமையாளர்:

P. சுப்ரமணியம்

தொலைபேசி:
தியேட்டர்: 33334
இல்லம்: 35352

அனைவருக்கும்

ஸ்ரீஅன்னபூர்ணா ஸ்ரீகௌரிசங்கர்

நிறுவனங்களின் சார்பில் வாழ்த்துக்கள்

மெஸர்ஸ் கே. தாமோதரஸ்வாமி

நாயுடு & பிரதர்ஸ்

29-29, சுப்பிரமணியம் ரோடு,

ஆர். எஸ். புரம் :: கோயமுத்தூர்

தொலைபேசி: 33052

காதலின் புன்னகையும் கண்ணீரும்

காதல்— மனித குலத்தின் மகத்துவ மந்திரம்! உச்சரிக்க, உச்சரிக்க உதடுகளுக்கு ஆயுள் வளர்க்கும் உன்னத மந்திரம்!

''காதல், காதல், காதல்
காதல் போயின், காதல் போயின்
சாதல், சாதல், சாதல்''

என்று பாட்டுக்கொரு புலவன் பாரதியும்,

''கண்ணின் கடைப்பார்வை
காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரர்க்கு மாமலையும்
ஓர் கடுகாம்!'

என்று பாவேந்தர் பாரதிதாசனும்,

''காதல்—
மனிதனைத் தேவனுக்கும்
இரண்டாம் பரிணாம
இது''

என்று வாழும் இளங்கவிஞர் ஒருவரும் வகுத்துச் சொன்னபடி, மனிதனின் இதய அணுக்களில் மின்சாரம் பாய்ச்சும் அற்புத ஆற்றல் அது.

மனித வாழ்வின் ஊற்றுக்கண்கள் என்று காதலியும், வீரத்தையும் தலை மேல் வைத்து ஆடியது தமிழ் இனம். வீரத்தை நடப்பியலாகவும், காதலை நாடகவியலாகவும் பாடித் திளைத்தனர் பைந்தமிழர்.

அகத்தொகுப்புக்களில் அற்புத மானது குறுந்தொகை எனுமொரு நறுந்தொகை— தமிழர்க்கு அஃதோர் அருந்தொகை.

காதல் தொடுக்கும் பூக்களையும், காதல் வடிக்கும் கண்ணீரையும் சின்னச்சின்ன வரிகளால் வண்ண வண்ண ஓவியங்களாய் வரைந்துகாட்டுவது குறுந்தொசையின் அருஞ் சிறப்பு.

தலைவன் — தலைவியின் மனச்சித்திரங்களை வரைந்து காட்டுவதற்கு, தோழியைப் படைத்துக் கொள்வது பண்டைநாளின் பாட்டுப் பண்பு.

தலைவன் — தலைவி இருவருக்கு மிடையே அவள் ஓர் இணைப்புப்பால மாக இருப்பாள்! தலைவியின் கண்ணீரும் காதலும்— தலைவனின் ஏக்கமும் தோக்கமும் அவளிடத்திலே தான் பேசப்பெறும்.

காதலெனும் மதுவுண்டு கிடக்கும் களி வண்டுகளே, மயக்கந் தெளிவித்து— காமத்துப்பாலின் மயக்கத்தை அறத்துப் பாலூட்டி அகற்றி இல்லற நெறிக்கு ஆற்றுப்படுத்தும் அரும்பணிதான், காதலில் தோழியின் கடமையாகும்.

தலைவனின் பிரிவு தாளாமல், கண்ணீர் உகுக்கிறாள் காதல் தலைவி. அவள் தன் துயரைச் சொல்லவும் முடியவில்லை. சொல்லாமல் காலம் தள்ளவும் முடியவில்லை. மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் பேதலிக்கிறது அந்தப் பேதை மனம்.

''என் தலைவனின் நினைவுகளால்
நான்
ரணமாகிப் போனேன். அந்த
ரணங்களே எனக்கினி ஆபரணம்;
மரணம் சாதாரணம்''

என்று பஞ்சாபிப் பெண் கவி ஒருத்தி வேதனையில் விம்முவதுபோல், தமிழ்த் தலைவியும், தன் காதல் கலத்தைக் கண்ணீர்க் கடலில் செலுத்துகிறாள். தன் கண்ணீரின் வெம்மையை அவள் கணக்குப் பார்க்கிறாள். ''ஆற்றியிரு பெண்ணே'' என்று தேற்ற வந்த தலைவிக்கு ஆற்ற முடியாமல் தான் தோற்றுப் போன கதையைத் தொகை தொகையாய்ச் சொல்லுகிறாள்.


நாலாயிரம் உணர்ச்சிகள் நகர்ந்து வரும் அந்த நாலு வரிப் பாட்டில், தன் கண்ணீரின் வெப்பம் இமை களையே தீய்க்கிறது என்று அவள் தெரிவிக்கிறாள்.

இதுவரை எழுதிய படத்துக்கான பாடல் இது:

நோமென் நெஞ்சே! நோமென் நெஞ்சே!
இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற மமைந்தநங் காதலர்
அமைவில ராகுதல் நோமென் நெஞ்சே''

—குறுந்தொகை

அடடா! என்ன வேதனை கலந்த விம்மல்! இமையையே தீய்க்கக்கூடிய



வெப்பக் கண்ணீரைச் சொட்ட விட்டுக் கொண்டிருந்தால், சோர்ந்து போகமாட்டாளா அந்தச் சுந்தர மேனியாள்?

இந்தத் தலைவியின் வேதனையை எண்ணி எண்ணி இளகுகிறபோது வள்ளுவனின் காமத்துப்பால் தலைவி கண் சிமிட்டுகிறாள். தலைவன் வருவான், வருவான் என்று வழிபார்த்து வழிபார்த்து அவள் கண்கள் ஒளி குன்றிப்போயினவாம். அவன் சென்ற நாட்களின் எண்ணிக்கையைச்சுவரில் ஒற்றி எழுதி எழுதி அவள் விரல்களும் தேய்ந்தனவாம். தலைவன் மட்டும் வந்தபாடில்லை.

வள்ளுவ வரிகள் வரைபடம்எழுதுகின்றன இப்படி:

''வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்''

இந்தக் குறளின் குரலில்தான் எத்தனை சோகம்!

தலைமகனைப் பிரிந்தால், இவ்வளவு சோகம் ஒரு தலைமகட்கு நேர்கிறது என்றால் அவன் அவளிடத்து வைத்திருக்கும் அன்புக்கு ஆழம் காண இயலுமோ?

வள்ளுவனின் தலைவன், தன் தலைவியைக் கண்ணுக்குள் வைத்துக் காக்க விழைகிறான். அதற்காக அவன் தனது விழிமையமாக இருக்கும் கருமணியைக் கூடக் கழன்று போகுமாறு கட்டளையிடுகிறான். அந்த இடத்தில் அவனின் தலைவி அமர வேண்டுமாம்:

''கருமணியிற் பாவாய்நீ
போதாயாம் வீழும்
திருநுதற் கில்லை இடம்''

எவ்வளவு நுண்ணிய உணர்ச்சியின் கண்ணியக் கனவு இது. காதலின் உன்னதம் எப்படியெல்லாம் மனிதனைப் பேச வைக்கிறது!

உண்மைதான். காதல்தான் பாலை வனங்களையும் சோலைவனங்களாக்கி விடுகிறது.

தந்தி : கிருஷ்ணா டெக்ஸ்

அலுவலகம் 23235
தொலைபேசி: இல்லம் 23517
நூலாலை 89209

பொங்கல் வாழ்த்துக்கள்

மருதமலை ஸ்ரீமுருகன் டெக்ஸ்டைல்ஸ்
பெரியநாய்க்கன்பாளையம், கோயமுத்தூர் - 641020

&

மருதமலை ஆண்டவர் ஸ்பின்னிங் மில்ஸ்
கோயமுத்தூர் - 26

தரமிக்க 40s 60s 80s 100s பருத்தி நூல்
சிட்டங்களும், கோன்களும் உற்பத்தி செய்வோர்.

நிர்வாக இயக்குனர்கள் :
வி. என். கிருஷ்ணசாமி நாயுடு & ஸன்ஸ்
அலுவலகம்: பேரூர் ரோடு :: கோவை - 26

தந்தி : "KRITHIKAI"


பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

தொலைபேசி : 31470 (10 லைன்).

ஹோட்டல் ஸ்ரீ முருகன்
தேவி அண்டு கோ. லேன்
(ரயில் நிலையத்துக்கு எதிரில்)
கோயமுத்தூர் - 641018

கட்டண விவரங்கள்

ஏ. சி. அல்லாத தனி அறை ரூ. 20
டிலக்ஸ் அறை ரூ. 45
ஏ. சி. டிலக்ஸ் அறை ரூ. 65



இந்தி என்றால் என்ன?

வட இந்திய வரலாறு ஆரியர் வருகையிலிருந்து துவங்குகிறது. அவர்களது மொழி வரலாறும் அப்படித்தான்!

இன்றைக்குச் சுமார் 3,500 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய ஆசியாவின் ஏதோ ஒரு பகுதியிலிருந்து ஒரு பெரிய மக்கள் கூட்டம் வடமேற்குக் கணவாய்கள் வழியாக வட இந்தியாவிற்குள் நுழைந்தது.

அவர்கள் தங்களோடு தங்கள் பேச்சு மொழிகளையும் கொண்டு வந்தனர். அது பல வேறு கிளைமொழிகளைக் (several dialects) கொண்டது.

அவர்கள்தான் 'ஆரியர்கள்' என்று அழைக்கப்படுவோர்; அவர்கள் கொண்டுவந்த அந்த மொழியை ''வேத காலத்துப் பேச்சுமொழி'' ("Vedic Speech") அல்லது '' பழைய சமற்கிருதம்'' ("Old Sanskrit") என்று பிற்கால ஆராய்ச்சியாளர் அழைப்பர்.

பேச்சு வழக்கில் மட்டுமே இருந்த அந்தப் பழைய சமஸ்கிருதத்தில்தான் 'வேதங்கள்' என்று இப்போது வழங்கப்படுபவை இயற்றப் பட்டன.

வியாசர் என்பார் பிற்காலத்தில் வாய்மொழியில் வழங்கப்பட்ட அந்த வேதங்களைத் தொகுத்தார். வியாசர் என்றாலே 'தொகுப்பாளர்' ('arranger') என்று பொருள். அவர் ஆரியர் அல்லாதவர் என்று கருதப்படுகிறது.

பிற்காலத்தில் வந்த தொகுப்பாளர்கள் அந்த வேதங்களைச் செம்மைப்படுத்தி வெளியிட்ட காரணத்தால் அந்த வேதங்களில் அவை இயற்றப்பட்டபோது உள்ள கிளைமொழி வேறுபாடுகள் இப்போது அதிகமாகத் தெரியவில்லை. அவையனைத்தையும் அந்தந்த ஆசிரியர்கள் அந்தக் காலகட்டத்தில் பேசிய பேச்சுமொழிகளால் இயற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த வேதங்களை எழுத்து வடிவில் எழுதிய காலம் கி. மு. 10—ஆம் நூற்றாண்டாகும்.

இதற்கிடையில் அந்த ஆரிய மொழிகள் அந்த வட்டாரத்திலே வழங்கப்பட்ட இதர மொழிகளோடு கலந்து வெவ்வேறு வடிவங்களைப் பெறலாயின.*

எனவே, அந்த 'வேத காலத்துப் பேச்சு மொழி' உருத்தெரியாமல் அழிந்துவிடாது காக்கும் அவசியம் ஏற்பட்டது.

எனவே, தற்போதைய பஞ்சாபிலும் மேற்கு உத்தரப் பிரதேசத்திலும் இருந்தவர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டனர்.

வட இந்தியாவின் இந்தப் பகுதிதான்

'மத்திய தேசம்' அல்லது 'ஆரியா வர்த்தம்'

என்று சிறப்பித்துக் கூறப்படுவதாகும்.

கி. மு. 7—ஆம் நூற்றாண்டிற்கும் 5—ஆம் நூற்றாண்டிற்கும் இடையில் 'ஆரியாவர்த்தத்தை'ச் சேர்ந்த பண்டிதர்கள், அப்பகுதியில் 'தூய்மை' பெற்று விளங்கியதாகக் கருதப்பட்ட வேத காலத்துப் பேச்சு மொழிகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதை ஒரு நிலைத்த எழுத்து மொழியாக்கும் பணியில் ஈடுபட்டனர்.

அப்படி உருவாக்கப்பட்ட மொழிதான் 'சமற்கிருதம்' (Sanskrit) என்பதாகும்.

''சமற்கிருதம்'' என்றால் ''தூய்மை செய்யப்பட்ட'' ("refined")— ''மெருகேற்றப்பட்ட'' ("polished")— ''புனிதமான'' ("sacred")— ''செயற்கையான'' ("artificial") —என்று பொருள்.

---

* அப்போது வட இந்தியாவில் திராவிட-ஆஸ்டிரிக் (Austric)—நீக்ரிட்டோ (Negrito) குடும்பங்களைச் சேர்ந்த மொழிகளைப் பேசியோர் இருந்ததாகக் கூறுவர்.

முரசொலி மாறன் M.P.

நம்மை அடிமை ஆக்குவோர்?

நாக்கிலுள்ள மெல்லிய தோலே உரித்தால் மைனா பேசும்; அதுவும் சில வார்த்தைகள்தான் பேசும்.

அந்த நாக்குரித்த மைனாபோல்தான் நாம் என்னதான் இந்தி கற்றாலும் பேச முடியும். நாம் கற்கிற இந்தி நாளாக ஆக தேயும்; இந்திக்காரன் கற்கிற இந்தி வளரும்; மலரும். ஏனெனில் அவன் இந்தியிலேயே பிறந்து வளர்கிறான். அவனது இந்தி மொழியை ஆட்சி மொழியாக்குவது, அந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு நம்மை அடிமையாக்குவது என்றுதான் பொருள்.

-அறிஞர் அண்ணா

கி. மு. 5–ஆம் நூற்றாண்டில் பஞ்சாபைச் சேர்ந்த **பாணினி** என்பார் சமற்கிருதத்திற்கு ஒரு நிலையான இலக்கணத்தை உருவாக்கிக் கொடுத்தார்.

வெகுவிரைவில் சமற்கிருதம் ஆண்டவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டுத் 'தேவ பாஷை' யாயிற்று.

என்று சமற்கிருதம் இலக்கணச் சிறையில் பூட்டப்பட்டு 'தேவ பாஷை'யாக மாற்றப்பட்டதோ அன்றே அதற்கும் பாமர மனிதனுக்கும் உள்ள உறவு ஒழிந்தது.

என்றுமே சமற்கிருதம் இந்தியா முழுவதிலுமுள்ள பாமர மனிதனின் வீட்டு மொழியாக அல்லது பேச்சு மொழியாக இருந்ததில்லை என்பது மொழிநூல் அறிஞர்களின் ஒருமித்த கருத்தாகும்.

அது பண்டிதர்களின் மொழியாகவும்; சில மன்னர்களின் சபா மண்டபங்களிலே வழங்கப்படும் இலக்கிய மொழியாகவும், மதச் சடங்குகளுக்குப் பயன்படும் மொழியாகவும் மட்டுமே இருந்தது.

"இந்திய ஆரிய இனத்தவர் எவராலும், எக்காலத்திலும் சமற்கிருதம் பேச்சுமொழியாக வழங்கப்படவில்லை... அது ஒரு இனத்தின் மொழியோ, ஒரு நாட்டின் மொழியோ அன்று; அவ்வினத்தவருள் ஒருசார் மக்களின் மொழியாகவே அது வழங்கி வந்துள்ளது; பாடித் திரியும் பாணர், பெருந்தவம் புரியும் முனிவர், கற்றுவல்ல அறிஞர்–ஆகியோர் மொழியே அது; அது ஒரு இலக்கிய மொழி"– என்கிறார் டாக்டர் கால்டுவெல்.

அப்படியானால், அந்தக் காலகட்டத்தில் வடக்கே பாமர மக்கள் பேசிய மொழிகள் எவை?

அவற்றைப் "பிராகிருத" மொழிகள் என்று அழைப்பர்.

"பிராகிருதம்" என்றால் "**இயற்கையான**" ("natural") — "தூய்மை செய்யப்படாத" ("unrefined") — "பொதுவான" ("common") என்று பொருள். (பிராகிருதம் என்பதற்கு 'இயற்கையானது' என்கிற பொருளும், சமற்கிருதம் என்பதற்கு 'செயற்கையானது' என்கிற பொருளும் அவை தோன்றிய முறையைக் குறிப்பனவாகும்.)

ஒரு பக்கம் சமற்கிருதம் எழுத்து மொழியாக விளங்க; மற்றொரு பக்கம் பேச்சு மொழிகளாகிய பிராகிருதங்கள் திரிந்து திரிந்து மாறிக் கொண்டிருந்தன.

மேற்குப் பகுதியில் பெரிதும் வழங்கிய பிராகிருத மொழிக்கு **சூரசேனி** என்று பெயர். சூரசேனி அரசு சிறிது காலம் தற்போதைய லாகூரிலிருந்து அலகாபாத்வரை பரவியிருந்தது. ஹர்ஷச் சக்கரவர்த்தி இந்த சூரசேனி பிராகிருத மொழிக்கு ஆதரவு கொடுத்தார்.

கிழக்குப் பகுதியில் பெரிதும் வழங்கப்பட்ட பிராகிருத மொழி **மகதி** (அதாவது மகத நாட்டு மொழி) என்கிற பெயரைப் பெற்றது. அம்மொழி வழங்கிய பகுதியை தற்போதைய தெற்கு பீகார் என்று கூறலாம்.

இந்த இரண்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் 'அர்த்த மகதி' (அர்த்த என்றால் பாதி என்று பொருள்) என்கிற பிராகிருதம் வழங்கப்பட்டது. இந்த அர்த்த மகதியில் சூரசேனியின் இயல்புகளும், மகதியின் இயல்புகளும் கலந்திருந்தன. (மகாவீரர் இந்த அர்த்த மகதியில்தான் தனது சீடர்களுக்கு உபதேசம் செய்தார்.)

—அப்போதுதான்—கி. மு. 6–ஆம் நூற்றாண்டில்–கிழக்கே (தற்போதைய பீகார் பகுதி) யிருந்து பிராமணீயத்திற்கு எதிர்ப்பாக 'புத்த மதம்' 'ஜைன மதம்' என்கிற இரு மாபெரும் இயக்கங்கள் தோன்றின.

வேதகாலச் சடங்குகளுக்கு எதிராக-அந்தச் சடங்குகளின் பெயரால் செய்யப்படும் உயிர்ப் பலிக்கு எதிராக – வர்ணாசிரமக் கொடுமைகளுக்கு எதிராக – அவை அறிவு கொளுத்தும் இயக்கங்களாக உருவெடுத்தன.

அந்த இரு மாபெரும் பிராமணீய எதிர்ப்பு இயக்கங்களும் தங்கள் பிரச்சாரத்திற்கு உள்ளூரில் மக்கள் பேசும் தாய்மொழிகளையே பயன்படுத்தின என்பது, அந்த இயக்கங்களின் மகத்தான வெற்றிக்கு ஆதாரம் என்பது குறிப்பிடத்தக்கது.*

அப்போது வட இந்தியாவின் கிழக்குப் பகுதியில் — அதாவது தற்போதைய கிழக்கு உ.பி., பீகார் பகுதியில் – மக்கள் பயன்படுத்திய ஒருவகைப் பிராகிருத மொழியில் புத்த – ஜைன மதங்கள் பிரச்சாரம் செய்யப்பட்டன.

அசோகச் சக்கரவர்த்தி அந்தக் கிழக்குப் பகுதியில் வழங்கிய பிராகிருத மொழியை மௌரியப் பேரரசின் ஆட்சிமொழி (Court language) யாக்கினார்.

அசோகனுடைய கல்வெட்டுகளில் (காலம் கி. மு. 250) கிழக்குப் பகுதியில் பேசப்பட்ட பிராகிருத மொழியும், மேற்குப் பகுதியில்

---

* மகாவீரர், 'அர்த்த மகதி' என்று அழைக்கப்படும் ஒருவகைப் பிராகிருதத்தில்தான் தனது சீடர்களுக்கு உபதேசம் செய்தார். புத்தர், மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் 'பாலி' மொழியில்தான் தனது சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்.

பேசப்பட்ட பிராகிருத மொழியும் காணப்படுகின்றன.

வட இந்தியாவின் மேற்குப் பகுதி என்பது வேத காலத்து ஆரியாவர்த்தம்!

கிழக்குப் பகுதியில் பேசப்படுகிற ஒரு மொழிக்கு ஆட்சிமொழி அந்தஸ்து கிடைத்து விட்டதென்றால் 'ஆரியாவர்த்தம்' சும்மாயிருக்குமா?

ஆரியாவர்த்தப் பண்டிதர்கள் வெகு விரைவில் தங்கள் பகுதியில் பேசப்பட்ட பிராகிருத மொழியொன்றைத் தேர்ந்தெடுத்து அதற்கு இலக்கணம் அமைத்தனர். அத்தகைய இலக்கண வரம்பு பெற்ற பிராகிருதம் 'பாலி' என்கிற பெயரைப் பெற்றது.

விரைவில் 'பாலி' என்பது ஆரியாவர்த்தத்தில் பெரிதும் வழங்கப்பட்ட எழுத்து மொழியானது.

இலக்கணச் சிறையில் அடைக்கப்பட்டதும் சமற்கிருதத்தைப் போலவே பாலி மொழியும் விரைவில் மக்களை விட்டு விலகி மரணத்தைத் தழுவத் தொடங்கியது.

சாதாரண மக்கள் பேசும் மொழிகளோ வேறு திசையில் விலகிச் சென்று கொஞ்சம் கொஞ்சமாக வெவ்வேறு வடிவங்கள் பெற்றுக் கொண்டிருந்தன.

''புத்தர் தன் அருள் அற உண்மைகளைப் பரப்பும் வாயிலாகப் பொதுமக்கள் வழங்கும் மொழியையே மேற்கொண்டார் எனினும், அவருக்குப் பிறகு வந்த அச்சமயத் தலைவர்கள், அவ்வுண்மைகளை எழுத்துருவில் பொறித்து வைத்தனர்; அதனால் அவர் மேற்கொண்ட பிராகிருத மொழி, புத்த சமய மொழியாகும் தகுதியைப் பெற்றதும், அது கடவுள் தன்மை வாய்ந்ததாக மதிக்கப்பெற்று, மாற்றமோ வளர்ச்சியோ பெற முடியாதபடி காக்கப்பெற்று விட்டது. அதற்கும் அக்கால 'மக்கள் மொழிக்கும் இடையில் மிகப் பெரிய வேறுபாடு இடம் பெற்று விட்டது'' என்கிறார் டாக்டர் கால்டுவெல்.

அதன் விளைவாக கி. பி. 1000–த்திற்குள்

ளாக அனைத்துப் பிராகிருத மொழிகளும்

மெல்ல மெல்ல வழக்கொழிந்து, செத்த

மொழிகளாயின.

சரி; இப்போது பிராகிருத மொழிகள் செத்துவிட்டன. அப்படியானால் மக்கள் பேசிய மொழிகள் எவை?

பிராகிருத மொழிகளின் அழிவை அடுத்து கி. பி. 600–இல் அப்பகுதி மக்கள் பேசிய மொழிகளின் நிலை 'அப–பிரம்சா' (Apabrahmsa) என்று அழைக்கப்படுகிறது.

'அப–பிரம்சா' என்றால் 'கலப்படமான' ('corrupt'), 'சிதைந்த' ('decayed'), 'இழிவான' ('vulgar') என்பது பொருள் – அதாவது பிரா

கிருத மொழிகள் சிதைந்து 'அப–பிரம்சா'

வாயின!

'அப–பிரம்சா' என்பது இந்தோ–ஆரிய மொழிகளின் வளர்ச்சியில் ஒரு நிலையாகும்.

இந்த 'அப–பிரம்சா'விலிருந்துதான் தற்

போதைய நவின இந்தோ–ஆரிய மொழிகளின்

தோற்றத்திற்கான கருவைக் காணலாம்.*

அந்தக் கால கட்டத்தில் இந்த 'அப பிரம்சா' நிலையில் பல மொழிகள் இருந்தன.

தற்போதைய மேற்கு பாகிஸ்தான் உள்ளிட்ட இந்தியத் துணைக்கண்டத்தின் வடமேற்குப் பகுதியில் 'வீராச்சடா' (Vrachada) என்கிற 'அப–பிரம்சா' மொழி நிலவியது.

அதுவே காலப்போக்கில் சிந்தி மொழியாகவும், காஷ்மீரி மொழியாகவும் உருவெடுத்தது.

நர்மதை நதிக்குக் கீழே விதர்பத்தை மையமாக வைத்து ஒருவித அப–பிரம்சா (வைதர்பி Vaidarbi or Dakshinatya என்று பெயர்) வழங்கப்பட்டது. அதுவே பின்னர் மராட்டி மொழியாக வடிவம் பெற்றது.

அதற்கும் கிழக்கே தற்போதைய ஒரிசா மாநிலத்தில் ஒட்ரி அல்லது உட்கலி (Odri or Utkali) என்கிற 'அப–பிரம்சா' பேசப்பட்டது. அதுவே இன்றைய ஒரிய மொழியின் தாயாகும்.

ஒரிசாவிற்கு வடக்கே — தற்போதைய பீகார் மாநிலத்திலும், காசிக்குக் கிழக்கேயுள்ள உத்தரப் பிரதேசத்திலும் மகதி மொழியிலிருந்தும் திரிந்த அப–பிரம்சாவிலிருந்து தற்போதைய பிகாரி மொழிகள் பிறந்தன.

மகதத்திற்குக் கிழக்கே தற்போதைய வங்கத்தில் பேசப்பட்ட பிராச்யா (Prachya) அல்லது கௌடா (Gauda) என்கிற அப–பிரம்சா நாளாவட்டத்தில் நவீன வங்கமொழியாயிற்று. அதே அப–பிரம்சா அப்பகுதியில் கங்கைக்கு வடக்கே தற்போதைய அசாம் மாநிலத்தில் அசாமி மொழியாக உருவெடுத்தது.

பிகாரி, ஒரியா, வங்காளி, அசாமி ஆகிய அனைத்தும் ஒன்றுக்கொன்று பெரும் உறவு கொண்ட மொழிகள். இவை அனைத்தும் கிழக்கத்திய பிராகிருதத்திலிருந்து உருவானவை.

அவற்றுள்ளும் அசாமி, வங்காளி, ஒரியா–ஆகியன ஏறத்தாழ ஒரே மொழியைப் போன்றவை.

உனக்கு எப்போது?

வரலாற்றுச் சிறப்புப் படைத்த மொழியைப் பெற்றுப் பெருமை கொண்டவர்கள் மீது இந்தியைத் திணிக்கலாமா?

குறிப்பிட்ட சில மாநில மக்களின் தாய் மொழியான இந்தியை பொது ஆட்சி மொழி ஆக்கத் துடிக்கிறீயே, அதன் விளைவாக அந்த மக்கள் மேலோர் ஆக்கி வைத்துள்ள தாசர்கள் ஆக்கிடும் சூழ்ச்சியைச் செய்யலாமா?— என்றெல்லாம் சமூகம் கேட்கப் போகிறது — கேட்கும் தெளிவு பரவிவிட்டது; துணிவும் துளிர்த்துக் கொண்டிருக்கிறது.

அந்த விசாரணை நாள் விரைந்து பெறப்பட வேண்டும். அந்தப் பணியில் ஈடுபட்டிருப்போர், எத்தனை முறை வழக்குமன்றம் செல்ல வேண்டி வந்தாலும், அவை வாய்ப்புக்கள் என்றே கொள்ள வேண்டும்.

அத்தகைய வாய்ப்பு எனக்கு கிடைக்கிறது! உனக்கு? எப்போது?

அறிஞர் அண்ணா

---

* GRIERSON, P. 406

இன்னும் சொல்லப் போனால், அசாமி மொழியும், வங்காளி மொழியும் ஒரே எழுத்து வடிவில்தான் இன்றைக்கும் எழுதப்படுகின்றன. அசாமிக்கு மட்டும் வங்காளி மொழியில் இல்லாத இரண்டு விசேஷ எழுத்துக்கள் இருக்கின்றன.

அதுபோலவே வங்காளியும், ஒரியாவும் ஏறத்தாழ ஒரே மாதிரியானவை. இரண்டையும் புரிந்து கொள்வது எளிது. எழுத்து வடிவங்களில்தான் மாற்றம்!

அர்த்த மகதி பிராகிருதத்திலிருந்து உருவான அப-பிரம்சா மொழிகள் பிற்காலத்தில் கிழக்கத்திய இந்தியாின! இது காரியிலிருந்து அலகாபாத்தைச் சுற்றிப் பேசப்படுகிறது.

சூரசேனி பிராகிருதத்திலிருந்து தோன்றிய அப-பிரம்சாவிலிருந்து மேற்கத்திய இந்தியும், பஞ்சாபியும் பிறந்தன.

நகர அப-பிரம்சாவிலிருந்து அவதியும், குஜராத்தியும்; பின்னர் ராஜஸ்தானியும் உருவாயின.

டாக்டர் ஹார்ன்லே (Dr.Hoernle)யின் ஆராய்ச்சி!

டாக்டர் ஹார்ன்லே இரண்டு ஆரியப் படையெடுப்புகள் நிகழ்ந்திருக்கவேண்டுமென்று கருதுகிறார்.

முதலில் நுழைந்த ஆரியக் கூட்டம் தங்கள் குடும்பத்தோடு பஞ்சாபில் குடியேறியது.

இரண்டாவது நுழைந்த கூட்டம் மூன்று அடித்ததுபோல் ஆரியாவர்த்தத்திற்குள் ஊடுருவியது.

இதன் காரணமாக முதல் கூட்டம் ஆரியவர்த்தத்தின் மேலும் கீழுமாகவும், கிழக்கிலும் மேற்கிலுமாகவும் பின்வாங்கியது.

இரண்டாவதாக வந்தவர்கள் முதல் கூட்டம் ஆக்ரமித்திருந்த பஞ்சாபைப் புனிதமற்ற பகுதியாகக் கருதினார்கள்; இரண்டாவது வந்த கூட்டத்தினர்தான் சரஸ்வதி – யமுனை – கங்கை நதிக்கரைகளில் யாகங்களை இயற்றி அதைப் 'புனிதமான ஆரியவர்த்த'மாக்கினர்கள்.

——இந்த இரு படையெடுப்புக் குடியேற்றங்கள் காரணமாக மத்தியில் அமைந்த ஆரியாவர்த்தத்தில் ஒருவித ஆரிய மொழிக் குடும்பமும், அதைச் சுற்றிலும் ஒரு முக்கால் வட்டம் போட்டது போன்ற பகுதிகளில் இன்னொருவித ஆரிய மொழிக் குடும்பமும் காரணின்றியது.

ஆரியாவர்த்தத்தில் தற்போது பேசப்படும் மேற்கத்திய இந்தி இரண்டாவது வகை ஆரியரைச் சேர்ந்த மொழியாகும்.

அதைச் சுற்றி - முக்கால் வட்டம் போன்ற பகுதிகளில் பேசப்படும் பஞ்சாபி, சிந்தி, மராத்தி, பிகாரி, வங்காளி, அசாமி, மேற்கத்திய இந்தி, ராஜஸ்தானி, குஜராத்தி போன்றவை முதல்வகை ஆரியரைச் சேர்ந்தவையாகும்.

இந்தியாவில் வழங்கப்படும் மொழிகளின் புள்ளி விபரத்தை முதன் முதலில் தொகுத்தளித்த மொழிப் பேரறிஞர் டாக்டர் கிரியர்சன் (Dr. Grierson) டாக்டர் ஹார்ன்லேயின் இந்தக் கருத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார். 'ஆர்யாவர்த்தம்' என்னும் வட இந்தியாவின் மத்தியப் பகுதியில் பேசப்படும் மொழிகளிடையே ஒருவித ஒற்றுமை காணப்படுவதையும், அதைச் சுற்றியிருக்கும் பகுதியில் பேசப்படும் மொழிகளில் ஒரு அலாதியான ஒற்றுமையிருப்பதையும் அவரும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இதிகாசங்களே நன்கு பயின்ற சி. வி. வைத்யா (C. V. Vaidya) என்கிற வடநாட்டு அறிஞரும் இதுபோன்ற கருத்தின் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அவரது கருத்துப்படி, பாரதத்துப் 'பாண்டவர்களும்' அவர்களது உறவினர்களும் இரண்டாவது வகை ஆரியப் படையெடுப்பைச் சேர்ந்தவர்கள்.

அந்த இரு வகைக் குடியேற்றக்காரர்களுக்கும் நடந்த போர்தான் குருக்ஷேத்திர யுத்தம்!

பாரத யுத்தம் இரண்டாவதாக வந்தவர்களுக்கு வெற்றியாக முடிந்தது.

முதலாவதாக வந்த ஆரியர்கள் தங்கள் குடும்பங்களோடு வந்தார்கள்.

இரண்டாவதாக வந்தவர்கள் சுலபமான வழிகளில் வரமுடியாத காரணத்தால் அவர்கள் பெண்களை உடன் அழைத்து வர முடியவில்லை. அதனால்தான் ஒரு பெண்ணை பல ஆண்கள் மணந்து வாழும் வழக்கம் பாண்டவரிடையே இருந்தது.



வேறு மார்க்கமில்லை!

இந்தி, ஒரு தீராத தலைவலியாகவே இருந்து வருகிறது. அது அரசுக் கட்டிலில் அமர்த்தப்படாது என்கிற உறுதிமொழி, தெளிவாகக் கிடைக்க வேண்டும்— இன்று இடுக்குகள் மூலமும் அது புகுத்தப்படாது என்கிற உறுதிமொழியும் பெற்றுக வேண்டும்.

தாய் மொழிக்காக, தமிழ்நாடு, 'நுழைந்தது!' எனும் கட்டம் விரைவில் ஏற்பட்டாலும் ஏற்படலாம். எவ் வளவோ எடுத்துச் சொல்லியும் வற்புறுத்தியும், டில்லி பீடம், தனது எதேச்சாதிகாரத்தையும் சாணக்கிய புத்தியினையுமே பயன்படுத்துமென்றால், ''தமிழர்காள்! தமிழ்நாட்டு மக்காள்! தயாராகுங்கள்!'' என்று முரசொலிப்பதைத் தவிர வேறு மார்க்கமில்லை.

மேகங்கள் விலகுமென்கிற அறிகுறி தெரிய வில்லை! அதற்கான முறுகியுமிழும் நட வடிக்கைகளும் 'இல்லே'யென்றால் 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலே' எனும் கேதக்குப் பாடிக் கொண்டு — அணிவகுத்துக் கொண்டு, அறப் போரில் சுடுபட, தாயகமே - தயாராயிரு! தயாராயிரு!

-அறிஞர் அண்ணா

—இவ்வாறு அந்த ஆசிரியர் கருதுகிறார்.

——இதுதான் இந்தோ—ஆரிய மொழிகள் தோன்றிய வரலாறு ஆகும்.

இன்றைய நவீன இந்தோ ஆரிய மொழிகள் அனைத்தும் கி. பி. 1200-க்குப் பிறகு தோன்றியவை என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய நவீன இந்தோ — ஆரிய மொழிகள் நேரே சமற்கிருதத்திலிருந்து பிறந்தவை என்று யாரும் எண்ணிட வேண்டாம்.

வட இந்தியாவின் பூர்வகுடிகள் ஆரியரோடு கலந்தபோது; அவர்கள் வெற்றி கொண்ட ஆரியரின் பேச்சுமொழிகளையும் தேர்ந்தெடுக்க வேண்டியதாயிற்று. எனவே ஆரியப் பேசுமொழிகளை அவர்கள் தங்கள் வழக்கப்படி மாற்றி ஒலித்துப் பேசலாயினர்.

—இப்படி ஆரியப் பேச்சுமொழிகள் ஆரியரல்லாதாரின் பேச்சுமொழிகளோடு கலந்து திரிந்தன.

இதன் விளைவாகப் பிராகிருதங்கள் எழுந்தன — என்பதை முன்பே பார்த்தோம்.

''இவ்வாறு சில கலப்பு மொழிகள் பேச்சளவில் நின்றபோது, தம் கலைகளையும், பிறவற்றையும் எழுதி வைப்பதற்குக் கலப்பு குறைந்த பிராகிருதத்தைச் செம்மைப்படுத்திச் சமற்கிருதம் என அதனைப் போற்றினர்... சமற்கிருதம் எழுத்து மொழியாக விளங்க, மற்ற பேச்சுமொழியாகிய பிராகிருதம் முதலியவை நிரந்து நிரந்து மாறிக்கொண்டிருந்தன. அவ்வாறு நிரந்து மாறிய மொழிகள் பிற்காலத்தில் சௌரசேனி முதலிய பெயர்களால் குறிக்கப்பட்டன. அவற்றிலிருந்து அமைந்த மொழிகளே இன்று வடஇந்தியாவில் வழங்கும் இந்தி முதலிய மொழிகள். ஆகவே இவற்றை வடமொழியிலிருந்து நேரே இன்த்து மொழிகள் எனக் கூறுவதில் பொருள் இல்லை.''

—என்று கூறுகிறார் டாக்டர் வரதராசனார்.

சமற்கிருதம் எதிலிருந்து கிளைத்ததோ அதிலிருந்தே இந்தியும், இதர இந்தோ— ஆரிய மொழிகளும் கிளைதன என்பதே பொருந்துவதாகும்.

தனித்தன்மை பெற்று நன்கு வளர்ந்துவிட்ட வங்காளி, ஒரியா, அசாமி, மராத்தி, குஜராத்தி, பஞ்சாபி— போன்ற இந்தோ— ஆரிய மொழிகள் இப்படித்தான் தோன்றின! இப்போது 'இந்தி'யை எடுத்துக்கொள்வோம். 'இந்தியா' என்பது போல 'இந்தி' என்பதும் ஒரு பாரசீகச் சொல்; இந்தியச் சொல் அல்ல.

'இந்து'— 'முஸ்லிம்'— என்றில்லாமல்; 'இந்தி' என்றால் இந்தியாவில் வாழ்கிறவன் என்பது பெரதுவான பொருள். (இந்தப் பொருள் இன்னும் வடக்கே வழங்கப்படுகிறது.)

இதர இந்தோ — ஆரிய மொழிகளைப் போல அப-பிரம்சாவிலிருந்து இந்தி நேரடியாகத் தோன்றிவிடவில்லை.

அது மேலும் பல பருவங்களைத் தாண்ட வேண்டியிருந்தது.

கி.பி. 10—11-ஆவது நூற்றாண்டுகளில் துருக்கியர்களும், ஈரானியர்களும் இந்தியாவில் படையெடுத்து வந்தபோது வட இந்தியாவில் வழங்கப்பட்ட மொழி உள்ளூர் மொழிகள் கலந்த மேற்கத்திய அப-பிரம்சாதான்!

கி.பி. 13—14-ஆவது நூற்றாண்டில் கூட இந்தியோ— இந்துஸ்தானியோ உருவாகவில்லை! முதலில் வந்த துருக்கியர்கள் வடநாட்டைப் படையெடுத்து, வென்று, கொள்ளையிட்டு பொருட்களோடு திரும்பினர்.

ஆனல் பின்னல் வந்தவர்களோர டில்லியிலேயே தங்கி ஆட்சி நடத்தத் துவங்கினர்.

அவர்கள் காலத்தில் பாரசீகமே ஆட்சி மொழியாக இருந்தது.

16-ஆவது நூற்றாண்டில்தான் மேற்கத்திய அப-பிரம்சாவிலிருந்து பிராஜ் பாஷா என்கிற மொழி இலக்கிய மொழியாக உருவெடுத்தது.

மொகலாயர் காலத்தில் ஆட்சிபீடம் அமைந்திருந்த டில்லிபிலும், ஆக்ராவிலும் உள்ள மேட்டுக்குடியினர், உள்ளூரில் வழங்கிய பஞ்சாபி, பிராஜ் பாஷா, ஜெய்புரி, மார்வாரி போன்ற மொழிகளோடு பர்சிய — அரபி வார்த்தைகளையும் கலந்து பேசினர்.

டில்லி பாதுஷாக்களின் அலைக்கு வெளியே பிராஜ் பாஷா பாமர மக்களால் தட்டித் தடுமாறி வளர்ந்து கொண்டு வந்தது.

கி.பி. 14—ஆம் நூற்றாண்டில் மொகலாயர்கள் பீதார், பீடார், கோல்கொண்டா, அகமது நகர், பீஜப்பூர் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றி தக்கணத்தில் மொகலாய ஆட்சியை நிறுவினர்.

இந்த அரசுகள் மராட்டி, கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகள் வழங்கிய பகுதிகளில் அமைந்தவை.

ஏறத்தாழ 16—ஆம் நூற்றாண்டின் இறுதியில் வடநாட்டில் குடியேறிய முஸ்லிம்களும் தங்கள் பாரசீக மொழியைக் கொஞ்சம் கொஞ்சமாக மறக்கும் நிலை ஏற்பட்டது. வேறு வழியின்றி. பாரசீகத்தைப் பூர்வீகமாகக் கொண்ட அவர்களது சந்ததியினர் உள்ளூர் மொழிகளைப் பேசினர். ஆனல் எழுதும்போது மட்டும் பிராஜ் பாஷாவைக் கையாண்டனர்.

வட இந்திய முஸ்லிம்களே பாரசீகத்தை மறந்துவிட்டபோது தக்கணத்தில் குடியேறியவர்கள் நிலே எவ்வாறு இருக்கும்?

வட இந்திய முஸ்லிம்களைப் போல அவர்கள் உள்ளூர் மொழிகளேயோ, பிராஜ் பாஷாவையோ கையாள விரும்பவில்லே.

ஆனல் அதே நேரம் டில்லியின் தொடர்பையும், பூர்வீக பாரசீகத்தின் தொடர்பையும் அவர்கள் நீடிக்க விரும்பினர்.

எனவே அவர்கள் வட இந்திய மொழிகளே பர்சிய எழுத்துக்களில் எழுதத் துவங்கினர்.

அதில் கவிதைகளே இயற்றினர். அதைப் பர்சிய எழுத்துக்களில் எழுதினர்.

மொகலாயர்களின் ஆட்சி மொழியான பர்சிய எழுத்துக்களும், முஸ்லிம்களின் கலாச்சார மொழியான அரபு மொழி எழுத்துக்களும் அவர்களால் கையாளப்பட்டன.

தக்கணத்து இந்துக்கள் இந்தப் புதிய மொழியை 'முசல்மானி' (முஸ்லிம்களின் மொழி) என்று அழைத்தனர்.

உயிர் வளர்க்கும் தாய்!



இந்தி எங்களுக்கு எடுப்புச் சாப்பாடு! ஆங்கிலம் எங்களுக்கு – நாங்கள் சொல்கின்ற முறைப்படி சமையல் செய்து போடுகின்ற சமையல் காரன்!

தமிழ் – எங்களுடைய மனை அறிந்து – எங்களுடைய மனமறிந்து – எங்கள் ஊனறிந்து– உணர்வறிந்து – எங்கள் ஊனை – உயிரை வளர்க்கின்ற தாய். அப்படித் தாயின் கரத்தாலே எங்களுக்கு உணவு கிடைக்கும் என்ற உத்திரவாதம் கிடைத்து விட்டால் – எங்களுக்கு எடுப்புச் சாப்பாடும் வேண்டாம் – ஆங்கில முறை உணவும் வேண்டாம்.

-அறிஞர் அண்ணா

பின்னர் இந்தப் புதிய வடிவம் டில்லிக்குச் சென்றது. அந்தக் கவிதைகள் அவர்கள் கவனத்தைக் கவர்ந்தன. அங்குள்ளோர் முதலில் இதை 'தக்கணி' (Dakni) (தக்கணத்தில் வழங்கும் மொழி) என்று அழைத்தனர்.

காலப்போக்கில் இதையே வடக்கேயிருந்த வர்களும் சுவீகரித்துக் கொண்டனர். இதற்கு 'இந்துஸ்தானி' என்று பெயர் சூட்டினர்.

இந்துஸ்தான் என்பது ஒரு பாரசீகப் பெயர். பஞ்சாபிலிருந்து வங்கம் வரை உள்ள சமவெளி முஸ்லிம் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது அல்லவா? அப்பகுதிக்கு அவர்கள் இந்துஸ்தான் என்று பெயரிட்டனர்.

'தக்கணி' வடக்கே சென்றதும் இந்துஸ்தானி அல்லது இந்தியாயிற்று! 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து இந்தப் பெயர் நிலைத்துவிட்டது. ஆக; தக்கணம்தான் இந்துஸ்தானி அல்லது இந்தி தோன்றுவதற்கு வழி காட்டியாக இருந்தது. *

* "It was the Deccan which set the example to North India in the direction of literary employment of what may be called Hindustani or Hindi proper, as opposed to Braj Bhasha".—Suniti Kumar Chatterji, "INDO-ARYAN AND HINDI", p. 184.

வட நாட்டு இந்துக்கள் இந்தப் புதிய மொழியை காட்டுமிராண்டி மொழி என்று பொருள்படும் 'ஜமானி' 'யமானி' 'யாவனி' (Jamani or Yamani or Yavani) என்றே அழைத்தனர். வழக்கம்போல பிராஜ் பாஷாவையும், அவதி மொழியையுமே அவர்கள் கையாண்டனர்.

இப்போது இந்துஸ்தானி — உருது—இந்தி என்பவை என்னவென்று பார்ப்போம்.

பார்சிய எழுத்துக்களிலோ அல்லது தேவ நகரி எழுத்துக்களிலோ எழுதப்படக்கூடியது இந்துஸ்தானியாகும். இது ஒரு பொதுவான பெயர்.

பார்சிச் சொற்கள் அதிகம் பயன்படுத்தப்பட்டு— அதன் காரணமாக பார்சிய எழுத்துக்களில் எழுதப்படக் கூடிய இந்துஸ்தானி உருதுவாகும். (உருது என்னுஞ் சொல்லுக்கு பாசறை, பாடி அல்லது படை வீடு என்பதே பொருள். ''துலுக்க மன்னர் தாங்கைக்கொண்ட நகரையடுத்து முன்னமே பேசப்பட்டு வந்த பிராகிருதச் சிதைவான ஒரு மொழியில், தாங் கொணர்ந்த அராபிச் சொற்கள் — பாரசீகச் சொற்களையும் மிகக் கலந்து தமது பாசறையிருப்பின்கட் பேசிய கலவை மொழியே அவரது காலந்தொட்டு 'உருது' மொழியெனப் பெயர் பெற்று நடைபெறலாயிற்று'' என்கிறார் மறைமலையடிகள்.)

சமற்கிருதச் சொற்கள் அதிகம் பயன்படுத்தப்பட்டு — அதன் காரணமாக நகரி எழுத்துக்களில் எழுதப்படக்கூடிய இந்துஸ்தானி இந்தியாகும்.

ஆக; இந்துஸ்தானி என்பது உருது, இந்தி—ஆகியனவற்றிற்கான பொதுப்பெயராகும்.

பாரசீக எழுத்துக்களில் எழுதினால் அது உருது; நகரி எழுத்துக்களில் எழுதினால் அது இந்தி.

முன்னது முஸ்லிம்களின் மொழியாயிற்று; பின்னது இந்துக்களின் மொழியாயிற்று.

—அதனால்தான் வகுப்பு ஒற்றுமையைக் கருதி காந்தியார், இந்துஸ்தானிதான் இந்தியாவின் ஆட்சி மொழியாக வேண்டும் என்று கூறினார்.

அதை வலியுறுத்துவதற்காக அவர் இந்திப் பிரச்சார சபையினின்றும்கூட விலகினார். இந்தமத வெறியர்கள் அதற்கு இடம் கொடுக்க வில்லை.

பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு காந்தி சீடர்களும் 'இந்துஸ்தானி'யைக் கைவிட்டனர்.

இதுவரை இந்துஸ்தானியைப் புறக்கணித்துவந்த இந்துக்கள் 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் திடீரென்று அதன்மீது கவனம் செலுத்தினர். ஏனெனில், அது மொகலாயப் பேரரசர்களின் தர்பார் மொழியாக இருந்ததுதான் காரணம்!

தலைநகரத்து தர்பார் பகுதியையொட்டிப் பிரபலமடைந்த அந்த மொழிக்கு ''கரி போலி இந்தி'' — அதாவது 'நின்று கொண்டிருக்கும் இந்தி' 'Standing Hindi' என்று பெயரிட்டனர்.

பாமர மக்கள் அன்றாடம் பேசி வந்த பிராஜ் பாஷா, அவதி போன்ற மொழிகளை ''பரி போலி''—அதாவது 'வீழ்ந்துவிட்ட மொழிகள்' 'Fallen Languages' என்று பெயரிட்டு அழைத்தனர்.

19-ஆம் நூற்றாண்டின் துவக்கம் வரையில் கடிதங்கள், அல்லது அதுபோன்ற தஸ்தாவேஜுகளைத் தவிர இந்துஸ்தானியில் எந்த வசன நடையும் எழுதப்படவில்லை.

19-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில்தான்— அதாவது 1800-ஆம் ஆண்டில்தான் இந்துஸ்தானியானது நவீன இந்தி, உருது என்கிற இரு வடிவத்தில் வசன நடை பெற்றது.

மொகலாயரை அடுத்து ஆங்கிலேயர் அவர்கள் வாரிசாக டில்லியில் முடிசூட்டிக் கொண்ட காரணத்தால் அவர்கள் உருது, நவீன இந்தி — என்கிற இந்துஸ்தானியின் இரு பிரிவுகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் தந்தனர்.

இராணுவத்திலும், நீதிமன்றங்களிலும் இந்த இரு மொழிகளுக்கும் இடமளிக்கப்பட்டது.

ஆங்கிலேயர் காலத்தில் கல்கத்தா, அலகாபாத், பஞ்சாப் பல்கலைக்கழகங்களில் அவை அங்கீகரிக்கப்பட்ட மொழிகளாயின.

வட இந்தியாவில் பணியாற்ற வேண்டிய ஆங்கிலேய அதிகாரிகளுக்கு உள்ளூர் மொழிகள் தெரிந்திருக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்த ஆங்கில அரசு கல்கத்தாவில் வில்லியம்ஸ் கோட்டையில் ஒரு கல்லூரியைத் துவக்கி நடத்தியது.

அவர்கள் பல பண்டிதர்களை அழைத்து இந்த நவீன இந்தியில் புத்தகங்களை எழுதச் செய்தனர். இப்படியாக பிரிட்டீஷாரின் தூண்டுதலின் பேரில் 'நவீன கரிபோலி இந்தி' உருவாக்கப்பட்ட காலம் 1803- என்று கூறலாம்.

அவ்வாறு உருவாக்கப்பட்ட நூல்களில் ஒன்று லல்லு லால் இயற்றிய 'பிரேம் சாகர்' என்பதாகும். உண்மையில் அவர் அதை உருது மொழியில் இயற்றினார் என்றே கூறலாம். கூடிய வரை பார்சிச் சொற்களை அகற்றிவிட்டு, அதற்குப் பதில் அவர் ஆரியாவர்த்தத்தில் வழங்கும் சமற்கிருதச் சொற்களைப் புகுத்தினார்.

இந்த முதல் சோதனைப் புத்தகம் இந்துக்களின் கவனத்தைக் கவர்ந்து பாராட்டைப் பெற்றது.

சமற்கிருதத்தை உருவாக்கிய ஆரியாவர்த்தம்— பாலியை உருவாக்கிய ஆரியாவர்த்தம்— இப்போது நவீன இந்தியையும் உருவாக்கிற்று.

இது குறித்து மறைமலை அடிகள் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது:

''...நூல்வழக்குடையதாய் இஞ்ஞான்றும்வழங்கும் இந்தி மொழியானது 'லல்லுஜி லால்' என்பவரால் உருதுமொழியினின்றும் பிரித்துச் சீர்திருத்தஞ் செய்யப்பட்ட தொன்றாகும். இதற்கு முன் உள்ளதான பிராகிருதச் சிதைவு மொழியிற் கலந்த பாரசிக அராபிச் சொற்களை அறவே யொழித்துச், சமஸ்கிருத மொழிச் சொற்களை மிகுதியாய் எடுத்துச் சேர்த்து அவர் இந்தி மொழியைப் புதிதாய் உண்டாக்கினர். இங்ஙனம் அவரால் ஆக்கப்பட்ட இந்திமொழிக்கும், இதற்குமுன்னே தொட்டு நாகரிகமில்லா வடநாட்டு மக்களால் ஆங்காங்கு பேசப்படும் பிராகிருதச் சிதைவான இந்தி மொழிக்கும் வேறுபாடு மிகுதியாய் இருக்கின்றது: அதற்குக் காரணம் என்னவென்னில், முன்னையது வடசொற் கலப்பு நிரம்ப உடையதாயிருத்தலும், பின்னையது அஃதின்றிப் பிராகிருத மொழிகளின் சிதைவாயிருத்தலுமேயாமென்பதனை நன்கு நினைவிற் பதித்தல் வேண்டும். ஆகவே, வடசொற் கலப்பினால் ஆக்கப்பட்டுச் சிறிதுகாலமாக இப்போது நூல் வழக்கிற் கொணரப்பட்டிருக்கும் இந்தி மொழியை நம் தென்னாட்டவர் கற்றுத் தெரிந்து கொள்வதனால், இவர்கள் வடநாட்டவரெல்லாருடனும் பேசி அளவளாவி விடக்கூடும் என்று சிலர் மயிகட்டி நின்று கூறுவது நம்மனோரை ஏமாற்றும் பொய்யுரையேயாம்.''

ஆக; நகரி, இந்தி, கரிபோலி இந்தி, உயர் இந்தி (High Hindi) என்று சொல்லப்படுகிற நவீன இந்தி 1803-ஆம் ஆண்டு ஆங்கிலேயர் உதவியால் கல்கத்தாவில் உள்ள வில்லியம்ஸ் கோட்டைக் கல்லூரியில் (Fort Williams) உருவாக்கப்பட்டதாகும்.

இந்த இந்திதான் இப்போது இந்தியாவின் ஆட்சி மொழி என்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது.

உருது மொழி 1740 - லிருந்து வட இந்தியாவில் — பொதுவாக நகரப் பகுதிகளில் — பரவத் துவங்கியது.

முஸ்லிம் ஆளும் வர்க்கமும், அவர்களை அண்டிப் பிழைத்த காயஸ்தர்களும், இந்து உயர் வகுப்பினரும் டில்லி தர்பாருடன் நிர்வாகத் தொடர்பும், கலாச்சாரத் தொடர்பும் வைத்திருந்த காரணத்தால் உருது பிரபலமடைந்தது. உருதுவின் செல்வாக்கைக் குறைப்பதற்குக் கரிபோலி இந்தியை சமற்கிருத எழுத்துக்களான நகரி எழுத்துக்களில் எழுதிப் பரப்பிய முயற்சி இந்து மதவாதிகளைப் பெரிதும் ஈர்த்தது. மீண்டும் அவர்கள் சமற்கிருத நீரோட்டத்திற்கு வருவதற்கும், இந்துமகத் தனித்



விட்டேனா பார்-என்று வீராப்பா?

தெரிந்தவர்களுக்கும் புரியாது; தெரியாத வர்களுக்கும் விளங்காது. இப்படிப்பட்ட ஒரு மொழியை இந்நாட்டின் பொது மொழியாக்க முயல்கிறார்களே சிலர், அவர்களிடம் உண்மையிலேயே சிறிதளவுகூட சகிப்புத்தன்மை இல்லை போலும்!

எனவேதான், இயலாத ஒன்றை இழுத்துப் பிடித்துக்கொண்டு விட்டேனா பார் என்று வீராப்பு பேசுகிறார்கள்.

-அறிஞர் அண்ணா

தன்மையை நிலைநாட்டுவதற்கும் இது பெரிதும் உதவியது.

இந்த நவீன இந்தி அண்மைக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட மொழி.

1850-ஆம் ஆண்டிற்கு முன்பு 'கரிபோலி இந்தி' என்று கூறுவதற்கு எதுவுமில்லை என் கிறார், மொழி நூல் அறிஞர் சுனிதி குமார் சட்டர்ஜி.

ஆக; நவீன இந்தி என்பது வெள்ளைக் காரர்களின் உதவியால் உருவாக்கப்பட்டு இந்து மதவாதிகளால் விருப்பத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு Test-tube Baby —என்கிற ரசாயனச் சாலைக் குழந்தையாகும்!

இந்த நவீன இந்தியைக் கையாளத் தெரிந்து கொள்வதன் மூலம் ஒருவன் தாராள மாக இந்தி வட்டாரத்தில் பேசிப் பழக முடியுமா என்றால், மறைமலை அடிகளார் கூறியதுபோல, முடியாது என்பதுதான் பதி லாகும்.

ஏனெனில், இந்தி வட்டாரம் என்று கூறப் படுகிற உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதே சம், பீகார், ஹரியானு, டில்லி ஆகிய பகுதிகளில் கிழக்கத்திய இந்தி (Eastern Hindi), மேற்கத்திய இந்தி (Western Hindi)— பிகாரி (Bihari) — ஆகிய மூன்று வகைக் குடும் பங்களைச் சேர்ந்த மொழிகள் பேசப்படுகின் றன.

கிழக்கத்திய இந்தியில் அவதி (Awadhi), பகேலி (Bagheli), சட்டிஸ்கர்ஹி (Chhatisgarhi)— ஆகிய மூன்றும் முக்கிய மான மொழிகள்.

மேற்கத்திய இந்தியில் இந்துஸ்தானி, பிராஜ் பாஷா (Braj Bhasha), கனௌஜி (Kanauji), பண்டேலி (Bundeli) ஆகியன முக்கியமான மொழிகள். (இதில் இந்துஸ்தானி, மீரட் பகுதியைச் சுற்றி அதன் தூய்மையான வடிவில் பேசப்படுகிறது. பஞ்சாபிற்குத் தென் கிழக்கே பேசப்படும் அனைத்து மொழிகளுக் கும் மேற்கத்திய இந்தி என்றுதான் பெயர். உதாரணமாக, அரியானுவில் பேசப்படும் மொழிக்கு 'அரியாணி' (Hariani) என்று பெயர்.)

மேற்கத்திய இந்தி — கிழக்கத்திய இந்தி— ஆகிய பெயர்கள் ஒரு தவறான கருத்தைத் தோற்றுவிக்கக் கூடியவை. ஏனெனில், அந்தப் பெயர்களைப் பார்த்ததும் அவையிரண்டும் ஒரே இந்தி மொழியின் இரு கிளை மொழிகளோ— என்கிற எண்ணத்தை ஏற்படுத்தும். ஆனால் உண்மையில் அவையிரண்டும் இரு தருவங் களே!

கிழக்கே பஞ்சாபி மொழிக்கும், மேற்கே வங்காளி மொழிக்கும் எவ்வளவு வேறுபாடுகள் உண்டோ அவ்வளவு வேறுபாடுகளும், தனித் தன்மைகளும் அந்த இரு இந்திகளுக்கும் உண்டு என்று ஒரு ஆராய்ச்சியாளர் கூறியிருக்கிறார்.*

பஞ்சாபி, வங்காளி — என்பன போல அவற்றை இரு தனித்தனி மொழிகளாகவே கணக்கிட வேண்டும் என்பது அவரது கருத் தாகும்.

'பிகாரி' என்று ஒரு மொழி கிடையாது. இந்திய மொழிகளின் புள்ளி விபரங்களைச் சேகரித்த கிரியர்சன், பிகார் பகுதிகளில் வழங் கும் மொழிக் குடும்பத்தை 'பிகாரி — என்று குறிப்பிட்டார்.

இதில் மைதிலி, மகதி, போஜ்புரி (Bhojpuri) —ஆகிய மூன்றும் முக்கியமானவை.

* A. F. Rudolf Hoernle.



இந்தியில்

இந்தி படித்து விட்டால் அந்த மொழி யில் பாண்டித்யம் இந்திக்காரர்களைப் போலப் பெற்றுவிட முடியுமா? அது அவர்களுக்குத் தாய்மொழி. நமக்கு அது படிப்பு மொழி!

ஆங்கிலத்தைப் படிப்பதால் தந்தையை சிலர் ''டாடி'' என்கிறார்கள்; வயதானால் ''ஃபாதர்'' என்கிறார்கள். செல்லமாக ''பப்பி'' என்கிறார்கள். ஆனால் தாய் கற்றுக் கொடுத்த தற்கு இது இணையாகுமா?

தாய் மொழி என்பது தாயின் கருவில் உருவாகி— பிறந்தவுடன் சுற்றுச் சூழ்நிலை அவனுக்குக் கற்றுத் தரும் மொழி. தமிழகத் தில் பிறந்த குழந்தை பிறந்து வளரும்போதே ''அம்மா'' என்கிறது. ''அப்பா'' என்கிறது. ''அத்தை'' என்கிறது. ''அக்கா'' என்கிறது.

ஆனால் உத்திரப்பிரதேசத்தில் பிறந்த குழந்தை இவற்றையெல்லாம் இந்தியில் கூறு கிறது. பிறந்து வளர்கிறபோது இந்தி அவர்

இந்த 'பிகாரி' மொழிகள் ஒருவித இந்தி என்று சொல்லப்படுகின்றன. மொழிநூல் அறிஞர்கள் இதைவிட உண்மைக்கு மாறுதல் வேறெதுவும் இருக்க முடியாது என்று கூறுகின் றனர். அது வங்காளி மொழியின் தங்கையென் பதும்; வங்காளி—ஒரியா மொழிகளைப் போலவே அது 'மகத அப—பிரம்சா'விலிருந்து தோன்றி யது என்பதும் கிரியர்சன் கருத்தாகும். ஆனால் பீகார் வங்கத்திலிருந்து படையெடுப்பைத்தான் சந்தித்திருக்கிறது. எனவே இந்த வரலாற்றுப் பகைமை காரணமாக பீகார்வாசிகள் இந்த உண்மையை ஒப்புக்கொள்ள மறுக்கின் றனர்.

இந்தி வட்டாரத்தில் மிகவும் பரவியிருக் கும் காவியங்கள் இராம காதையும், கிருஷ்ண காதையும், வைணவப் பக்திப் பாடல்களு மாகும்!

—ஆனால், இவை மூன்றும் இந்தி மொழி யில் இயற்றப்படவில்லை.

வடக்கே இராமாயணத்தைத் தெரிந் திராதவர்கள் கிடையாது. ஆனால் 16-ஆம் நூற்றாண்டில் துளசிதாசர் அந்த இராமாய ணத்தை 'அவதி' மொழியில்தான் இயற் றினார். இன்னும் சொல்லப்போனால் வட இந்தியாவில் இதுவரை இயற்றப் பட்ட கவிதை இலக்கியங்களில் பத்தில் ஒன்பது பங்கு 'அவதி' மொழியில் படைக் கப்பட்டவையாகும்.

இராமனைப் போல வடக்கே வணங் கப்படுபவர் கிருஷ்ணன். அந்தக் கிருஷ் ணன் பற்றிய பக்திப் பாடல்களை 16-ஆம் நூற்றாண்டின் மத்தியில் சூர்தாஸ் பிராஜ் பாஷாவில்தான் இயற்றினார்.

வடக்கே பெரிதும் பிரபலமாக இருப் பது வைணவம். அதுகுறித்த பக்திப் பாடல்களை 15-ஆம் நூற்றாண்டில் வித்யா பதி மைதிலி மொழியில்தான் இயற் றினார்.

வெல்வார்களா?

களுடன் இயைந்து வருகிறது. பிறகு படிக்கும் போது அதில் சிறந்த தேர்ச்சியடைகிறார்கள். ஆனல் நாம் பள்ளியில் போய்த்தான் கற்றுக் கொள்கிறோம்.

அப்படிப்பட்ட இரண்டு தரத்தாருக்கும் போட்டி நடந்தால் யார் வெற்றி பெறுவார் கள்? இரண்டு கால்கள் உள்ளவனுக்கும் ஒரு கால் இழுத்துக் கொள்பவனுக்கும் போட்டி வைத்தால் யார் வெற்றி பெறுவார்கள்? பின் னர் எதிர்காலத்தில் உத்திரப்பிரதேசத்துக்காரன் கலெக்டராகவும், நமது நாட்டுக்காரன் கலெக் டர் ஆபீசில் பில்லே போட்ட சேவகனுகவும் நிற்பார்கள். இப்படி எண்ணிப் பார்க்கிற போதுதான் எதிர்காலத்தில் நமக்கு நேரவிருக் கும் கேடு பற்றி ஊர முடியும்!

-அறிஞர் அண்ணு

அதனுல்தான் **முன்ஷி பிரேம்சந்த்**, ''இந்தி இலக்கியத்திற்குக் கடந்த காலம் என் பதே கிடையாது. பிராஜ் பாஷாவிலும், அவதி யிலும் இருக்கிற இலக்கியங்கள் இந்தி இலக் கியங்களல்ல''— என்கிறார்.

பிராஜ்பாஷா, அவதி, ராஜஸ்தானி, போஜ்புரி, பண்டல்கண்டி, மகதி, மைதிலி— ஆகிய மொழிகள் வடநாட்டில் கோடிக்கணக் கான மக்களால் பேசப்பட்டு வருகின்றன. வட இந்தியாவில் அந்த மொழிகளில்தான் அருமை யான கவிதைகள் இயற்றப்பட்டு வருகின்றன.

ராகுல் சாங்கிருத்தியாயனு தனது கம் யூனிஸ்ட்டு இயக்கப் பிரச்சார இலக்கியங் களை பிராஜ் பாஷாவில்தான் இயற்றியிருக் கிறார்.

உதாரணமாக, மன்மோகன் ஜா என்ப வர் மைதிலியில் சிறந்த சிறுகதை எழுத் தாளர். அவரது சிறு கதைகள் இந்தி மொழி யில் **மொழி பெயர்க்கப்பட்டு** பாராட்டைப் பெற்றிருக்கின்றன. (மொழிபெயர்க்கப்பட் டால்தான் அது இந்திக்காரர்களுக்கு விளங் கும் என்பது குறிப்பிடத்தக்கது.)

அண்மையில் மைதிலி மொழியையும் எட் டாவது அட்டவணையில் சேர்க்க வேண்டு மென்று ஒரு ஜனதா கட்சி உறுப்பினர் தனி நபர் மசோதாவை மாநிலங்கள் அவையில் அறிமுகம் செய்திருக்கிறார்.

கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்த ராகுல் சாங்கிருத்தியாயனு, சிவ்தன் சிங் சாவ்ஹான் ஆகியோர் வட இந்தியாவில் பேசப்படும் இரண்டுடஜன் மொழிகளுக்கும் தேசியமொழிகள் என்கிற அந்தஸ்தை வழங்க வேண்டும்— என்று கூறியிருக்கின்றனர்.

எனவே, வட இந்தியாவில் இருக்கிற வர்கள் அத்தனே பேரும் நவீன இந்தி யைக் கையாள்கிறார்கள்;

நவீன இந்தி தெரிந்தால் வட இந் தியக் கிராமங்களிலும் எளிதில் பேசிப் பழகலாம்.

—என்பவை உண்மைக்கு மாருனவை.

இந்த விளக்க இதோ இரு உதாரணங்கள்: அரசு ஊழியர்களின் நவீன இந்தி மொழி அறிவைத் தெரிந்துகொள்வதற்காக பீகார் மாநிலம் ஒரு தேர்வு நடத்தியது. இதில் 1,362 அரசு ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

அந்தத் தேர்வின் முடிவு என்ன தெரியுமா?

அந்த 1,362 பேரும் தேர்வில் தோற் றூர்கள்.

—இது 1951-ஆம் ஆண்டில் நடந்தது.

கும்பமேளா திருவிழாவிற்கு இலட்சக் கணக்கில் மக்கள் கூடுவது நீனேவிருக்கலாம். வட இந்தியாவிலிருந்துதான் அதிகம் பேர் வருவர்.

அண்மையில் ஒரு கும்பமேளாவில் ஜன நெருக்கம் காரணமாக பல பேர் இறந்ததும் நீனேவிருக்கலாம்.

இனி இதுபோல் நடைபெருமல் இருக்க அரசு ஒரு விசாரணேக் கமிஷன் அமைத்தது. அந்த விசாரணேக் கமிஷன் அளித்த பரிந்துரை களில் ஒன்று, வழி எப்படி என்பதை விளக் கும் 'போர்டுகள்' மக்களுக்கு எளிதில் புரியும் மொழியில் இருக்க வேண்டும் — என்பதாகும்! ஆனல் அந்த 'போர்டுகளே' நவீன இந்தியில் தான் எழுதி வைத்திருந்தார்கள்!

—ஆக, இப்போது அரசு உற்பத்தி செய்து கொண்டிருக்கும் நவீன இந்தி, சமற்கிருதச் சொற்கள் அதிகம் கலந்த மொழியாகும்! அதனல் அது பாமர மக்களது மொழியாக இல்லே.

வானெலியில் ஒலிபரப்பாகும் இந்தி இதற் கொரு உதாரணம்! இதை இந்திக்காரர்களே 'ரேடியோ இந்தி' என்று கேலி செய்கிறார்கள்.

எனவே, இந்திச் செய்தி வரும்போது வானெலியை மூடிவிட்டு, பாகிஸ்தானிலிருந்து ஒலிபரப்பாகும் செய்தியை அதிகம் பேர் கேட் கிறார்களாம்!

—இந்தத் தகவலே பிராங் அந்தோனி அரசு அறிக்கையொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

—ஆக, நவீன இந்தி என்பது வட இந் தியாவில் வேண்டுமானல்—அங்கு வழங்குகிற இரண்டு டஜனுக்கும் மேற்பட்ட மொழிகளுக்கு ஒரு இணேப்பு மொழியாக இருக்க முடியுமே தவிர; இந்தியத் துணேக் கண்டத்திற்கு அது இணேப்பு மொழியாக ஒருக்காலும் இருக்க முடியாது.

இந்த நவீன இந்தி இப்போது வட மாநிலங்களில் பாமர மக்களுக்குப் புரிகிற மொழியல்ல.

வட மாநிலங்களில் 'இந்தி வட்டாரம்' என்று அழைக்கப்படும் பகுதிகளில் கோடிக் கணக்கான உழைக்கும் மக்கள்— விவசாயிகள்— பாமர மக்கள் தங்களது தாய்மொழிகளேத்



புரட்சி தலையங்கம்

தாய்மார்கள் அழகாகக் கோலம் போடுவார்கள். எங்கே? வாயிற்படியில்! ஆனால் வீட்டுக்கு வந்த பெண் கட்டிலறையின் மீதே கோலம் போட்டால்— தொட்டுத் தாலி கட்டிய கணவன் என்ன கூறுவான்?

''ஆயிரம் இரண்டாயிரம் செலவழித்து இதற்குத்தானு உன்னைக் கூட்டிக் கொண்டு வந்தது?'' என்று கேட்பான்.

''ஏன், உங்களுக்கு கோலமே பிடிக்காதோ?'' என்றால், ''உனக்கு அழகு இருக்கிற அளவு அறிவு இல்லே'' என்றுதான் கூறுவான்.

அதைப் போல பெரிய இடத்திலே இருக்கிற மனிதர்களுக்கு இந்தி ஆட்சி மொழியாவதை நாம் எதிர்ப்பது புரிவதில்லை.

இங்கேயுள்ளவர்களுக்கு புரியவில்லையே தவிர டில்லியிலுள்ளவர்களுக்குப்புரிந்திருக்கிறது.

அந்த அளவில் இந்தி எதிர்ப்புப் போர் வெற்றியடைந்திருக்கிறது.

முதல் வெற்றி— அவர்களுக்கு மொழிப் பிரச்சினையில் கொஞ்சம் அடக்கம் வந்திருக்கிறது.

இரண்டாவது வெற்றி — அவர்களுக்குச் சந்தேகம் வந்திருக்கிறது — இந்தியை நிலையாக ஆட்சி மொழியாக்கி விட முடியுமா என்று!

மூன்றாவது வெற்றி— அவர்களுக்கு கொஞ்சம் அச்சம் வந்திருக்கிறது, இந்தியை தென்னாட்டில் கடுமையாக எதிர்க்கிறார்கள் என்று!

-அறிஞர் அண்ணா

தான் பேசிக்கொண்டிருக்கின்றனர். இந்த நவீன இந்தி அந்தத் தாய்மொழிகளையும் தலை தூக்காமல் அமுக்கிவைத்து, அழித்துவிடப் பார்க்கிறது. விரைவில் அவர்களும் தாய்மொழிப் பிரக்ஞை பெறுவார்களேயானால் நவீன இந்தியின் நிலை இன்னும் மோசமாகிவிடும். அதனால் தான் இந்தி பேசுவோரின் எண்ணிக்கை ஒவ்வொரு 'சென்சஸ்' கணக்கெடுப்பிலும் குறைந்து கொண்டே வருகிறது. அவர்கள் மெல்ல மெல்ல தாய்மொழிப் பிரக்ஞை பெறுகிறார்கள் என்பதே இதற்குப் பொருள்!

வட மாநிலங்களில் தங்கள் வீடுகளிலே பிராஜ் பாஷா, மைதிலி, அவதி— போன்ற மொழிகளைப் பேசுகிற ஒரு படித்த கூட்டம்— உயர் வர்க்கம் — தங்களது தொடர்பு மொழியாக இந்த நவீன இந்தியைப் பயன்படுத்துகிறது.

அவர்கள்தான் இதர மொழிக்காரர்கள் மீதும் ஆதிக்கம் செலுத்த இந்த நவீன இந்தியை எப்படியாவது கொண்டுவர முயற்சிக்கிறார்கள்.

மகாவீரர் காலத்தில்— புத்தர் காலத்தில்— கி.மு. 6-ஆம் நூற்றாண்டில்— வட மாநிலங்களில் இந்தி தோன்றவில்லை.

மகாவீரர் அர்த்தமகதி பிராகிருதத்தில் தான் தன் போதனைகளை வழங்கினார்.

புத்தர் தனது கொள்கைகளைப் பரப்பிய மொழி பாலி.

—அந்த இரு மதத்தினரும் தமிழ்நாட்டில் கையாண்ட மொழி தமிழ் மொழி! இலக்கியங்களைப் படைத்த மொழி தமிழ் மொழி!

வடக்கே கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் நந்தர்கள் நூறாண்டுகள் ஆட்சி செய்ததாகக் கூறப்படுகிறது. அவர்கள் 99 கோடி தங்க நாணயங்களை மறைத்து வைத்திருந்ததாக ஒரு செய்தி உண்டு.

''அத்தகைய மகாபத்ம நந்தன் என்னும் பாடலிபுரத்து மன்னனுடைய செல்வத்தையே உன் தலைவனுக்குக் கொடுத்தாலும் அதற்கு மகிழ்ந்து அவர் அங்கேயே தங்கிவிடுபவர் அல்ல; விரைவில் உனக்காகத் திரும்பி வந்து விடுவார்!''— என்று தலைவியைத் தோழி தேற்றுவதாக அகநானூற்றுப் பாட்டில் (251) கூறுகிறது!

அதுபோலவே இன்னொரு அகநானூற்றுப் பாடல் (265), பாடலிபுரத்து நந்தர்களின் பெருஞ் செல்வமெல்லாம் கங்கையின் நீரடியிலே சென்று மறைந்த செய்தியைக் கூறுகிறது!

பின்னர் கி.மு. மூன்றும் நூற்றாண்டில் வடபுலத்தை ஆண்டவர்கள் மௌரியர்கள். அந்த மோரியர்க்குப் பணியாமல் பாண்டியர் தளபதி மோகூர்ப் பழையன் போரிட்டதை அகநானூற்றுப் பாடல் 251 கூறுகிறது. அவர் களை 'வம்ப மோரியர்' என்றே குறிப்பிடுகிறார் மாமூலனார்.

ஆம்; அப்போதே இலக்கிய வளம் பெற்றுத் திகழ்ந்த மொழி தமிழ்!

அதே கி.மு. மூன்றும் நூற்றாண்டில் அசோகன் தனது ஸ்தூபிகளில்— கல்வெட்டுகளில் பயன்படுத்திய மொழி பிராகிருதங்கள்!

பின்னர்—

கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் ஷர்ஷச் சக்கரவர்த்தி தானே சமஸ்கிருதத்தில் நூல்கள் பல எழுதியிருந்தாலும் அவன் ஆதரித்த மொழி 'சூரசேனி பிராகிருதம்'!

பாபர் காலத்திலே, ஹுமாயூன் காலத்திலே இந்தி கிடையாது!

அக்பர் காலத்திலே, ஜகாங்கீர் காலத்திலே பிரபலமாக இருந்த மொழி பிராஜ் பாஷா! இந்தி அல்ல! (அக்பர் பிராஜ் பாஷாவிலே கவிதைகள் கூட இயற்றியிருக்கிறார்!).

—இந்தி 'நேற்று' உருவான மொழி!

1920-ஆம் ஆண்டிலே பிரபல ஆங்கில நூலாசிரியர் கோல்டுஸ்மித் (Goldsmith) எழுதிய 'ஹெர்மிட்' (Hermit) என்கிற கவிதையை ஒருவர் மொழி பெயர்த்தார்.

—அதுதான் நவீன இந்தியில் எழுதப் பட்ட முதல் கவிதை! அதுகூட மொழி பெயர்ப்பு!

ஆனால் இங்கோ 'தொல்காப்பியம்' மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்டதா; அல்லது ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்டதா என்கிற விவாதம் ஆராய்ச்சியாளர்களிடையே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

—இத்தகைய தொன்மையான மொழிக்குச் சொந்தக்காரர்கள் இந்தியை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

இந்தி நுழைவைக் கலாச்சார ஆக்ரமிப்பாகக் கருதுவதில் தவறென்ன இருக்க முடியும்?

அத்தகைய தொன்மையான தமிழும் இந்தியாவின் ஆட்சி மொழிகளுள் ஒன்றுக வேண்டும்— என்று வற்புறுத்துவதில் யார்தான் தவறு காண முடியும்?

திரு.பிராங் அந்தோணி கீழ்க்கண்டவற்றின் சின்னங்களாக இந்தி இருக்கிறது— என்று கூறுகிறார்:

(1) Hindi symbol of religion—

இந்தி ஒரு மதத்தின் சின்னம்

வட இந்தியாவில் நவீன இந்தி ஒரு மதத்தின் அடையாளமாகக் கருதப்படுகிறது.

(2) Hindi symbol of oppression of linguistic minorities—

இந்தி மைனரிட்டி மொழி பேசுவோரை ஒடுக்கும் சின்னம்—

மைனரிட்டியினராக இருக்கும் முஸ்லிம்கள், சிக்கியர்கள், மலேஜாதியினர், ஆங்கிலோ — இந்தியர், மற்றும் சிறுபான்மையினரை ஒடுக்கும் சின்னமாக இந்தி விளங்குகிறது.

(3) Hindi symbol of discrimination—

இந்தி அநீதியின் சின்னம்.

இந்தி பேசாத மக்கள் இரண்டாந் தரப் பிரஜைகளாக்கப்படுவர். அவர்கள் தாய் மொழி, ஆங்கிலம், இந்தி — ஆகிய மூன்று மொழிகளைக் கற்றுத் தேரவேண்டிய சுமைதாங்கிகளாக மாற்றப்படுவர்.

(4) Hindi symbol of disintegration—

இந்தி பிரிவினையின் சின்னம்—

கோயற்கருமம்

மரபு அழிக்கும் சதித் திட்ட
மாகவே நாம் இந்தியைக் கருது
கிறோம் — வெறும் மொழிப்பிரச்சினை
யாக அல்ல.
உடல் பெரிது; உள்ளே நுழையும்
கிருமி மிகமிகச் சிறிது! அளவில்!
ஆயின் என்ன? உடலை அரித்து,
அரித்து உயிரையே குடித்துவிடுகின்
றன.



செம்மொழி, எம் தமிழ் மொழி!
என்று செப்பிக்கொண்டு இருக்கலாம்
என்னுட்கள். பிறகு எம்மொழி
ஆட்சிமொழி? என்று உலகு கேட்
குமே, என்ன பதிலளிப்போம்?
இந்தி ஆட்சி மொழி என்று கூறின்,
பிறகு செம்மொழிக்கு எவர் மதிப்
பளிப்பர்?

-அறிஞர் அண்ணா

இந்தித் திணிப்பு இந்தியாவின் ஒற்றுமைக் குலைவிற்கு வழிவகுத்துவிடும்.

— இவற்றோடு இன்னென்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

Hindi symbol of linguistic and cultural genocide

இந்தி பிற மொழிகளையும், கலாச்சாரத்தையும் அழிக்கின்ற சின்னமாகும். ●

BIBLIOGRAPHY

1. G. A. GRIERSON, "LANGUAGE", Census of India, 1901, reprinted in Census of India, 1961.
2. SUNITI KUMAR CHATTERJI, "INDO-ARYAN AND HINDI".
3. SUNITI KUMAR CHATTERJI, "LANGUAGES AND LITERATURES OF MODERN INDIA".
4. SUNITI KUMAR CHATTERJI, Note of Dissent, Report of the Official Language Commission, 1956.
5. S. S. NARULA, "SCIENTIFIC HISTORY OF HINDI LANGUAGE".
6. MADANGOPAL, "THIS HINDI AND DEV NAGARI".
7. FRANK ANTHONY, Minute of Dissent, Report of the Committee of Parliament on Official Language, 1958.
8. மறைமலையடிகள், "இந்தி பொது மொழியா?"
9. டாக்டர் மு. வரதராசன், "மொழி வரலாறு".
10. டாக்டர் கால்டுவெல், "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்," தமிழில்: புலவர் கோவிந்தன், புலவர் சிங்கார வேலு.


எமது பொங்கல் நல் வாழ்த்துக்கள்

NUTEX

நியூடெக்ஸ்

மானோ மீனாக் செட்டுகள்

மோட்டார்கள் அண்ட் பம்புகள்



தயாரிப்பாளர்கள்

ஸ்ரீபாலாஜி எஞ்ஜினீரிங் கம்பெனி

245, தடாகம் ரோடு,
G. C. T. போஸ்ட்,
கோயமுத்தூர் – 641013

WITH THE BEST COMPLIMENTS FROM

Phone : Factory : 35362
Office : 32823
Resi. : 33317

MANUFACTURERS OF :

NONFERROUS CASTINGS, ALUMINIUM SHEETS, CIRCLES, VESSELS AND STAINLESS STEEL WARES

BARANI ENGINEERING INDUSTRIES

Factory :

C-26, PRIVATE INDUSTRIAL ESTATE,
COIMBATORE-641 021

Office :

26/304, RAJA STREET,
COIMBATORE-641 001.

எமது உளம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

கரூர் வைஸ்யா பாங்கு லிமிடெட் வழங்கும்

ஸ்ரீநிதி ரொக்கப் பத்திரம் மூலம் 6640

பரிசுகள் பெற பல அரிய வாய்ப்புகள்.

இந்தப் பத்திரத்தின் முக மதிப்பு ரூ. 100/-மட்டுமே. குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு உங்கள் முதலீடு ரூ. 100/- இரண்டு மடங்காகத் திரும்பப் பெறலாம்.

ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் பரிசுக் குலுக்கலில் உங்களுக்கு ரூ. 100/- முதல் ரூ. 10,000 வரையில் பரிசுகள் பெற வாய்ப்பு உள்ளது.

மேலும் ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் சிறப்புக் குலுக்கலில் ரூ. 20,000 வீதம் நான்கு பரிசுகள் பெறவும் வாய்ப்பு அளிக்கிறது.

பாதுகாப்பு- பரிசு பெற வாய்ப்பு !

இத்துடன் உங்கள் சேமிப்பு வளர்ந்திட
இன்றே வாங்கிடுவீர்

ஸ்ரீநிதி ரொக்கப் பத்திரம்

கரூர் வைஸ்யா பாங்கு லிமிடெட்

பதிவு அலுவலகம்: கரூர்-639 001.

கே. வி. ராகவாச்சாரி
சேர்மன்.

Tel : JEKAYKAY Phone: 669 (Bhavani)

J. K. K. TEXTILE PROCESSING MILLS

POST BOX No. 55

KOMARAPALAYAM - 638183

(Via) ERODE.

கோமராபாளையம் புதிய காவிரி பாலம் அருகில் உள்ள எங்களது ரோசிங் மில்லில் வாடிக்கை யாளர்களின் முழுத் திருப்திக்கேற்றவாறு அதி நவீன மிஷின்கள்கொண்டு, அனுபவமிக்க கைதேர்ந்த ஆட்களைக் கொண்டு துணிகளை நல்ல முறையில், வெளிரிக்க, மடிக்க, சிலிரிக்க செய்து கொடுக்கிறோம். இப்பொழுது எங்கள் உற்பத்தித் திறனில் 80 சதவிகிதத்திற்குமேல் வெளிநாட்டு ஏற்றுமதி துணிகளை ரோசன் செய்து கொடுக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள் கிறோம்.

J. K. K. J. K. K.

தந்தி : "CHUDAMBIKA" ஆபீஸ்: 20038
பொன்: 21088
மில்: 20152

ஸ்ரீ ராமலிங்க சூடாம்பிகை மில்ஸ் லிமிடெட்,

59-ஏ, 15, ஜி. எஸ். சுந்தரம் ரோடு,

தபால் பெட்டி நம்பர்: 65

திருப்பூர் — 638601.

நாங்கள் பல ஆண்டுகளாக அயர்நாட்டு மற்றும் உள்நாட்டு உயர் ரக பருத்தி யிலிருந்து 20 முதல் 80 நம்பர் நூல் வரை வகைத்தறி, விசைத்தறி மற்றும் பனியன் தொழிற்சாலைகளுக்குத் தேவையான கோம் புடி, காட்டன் நொசைர் நூல்கள் உற்பத்தி செய்து உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் விற்பனை செய்து வருகிறோம்.

எங்களுடைய தயாரிப்பான SRC 20001 SRC 2002 காடா மற்றும் சலவைத் துணி, உள்நாட்டு உபயோகத்திற்கும், வெளிநாட்டு ஏற்றுமதிக்கும் நல்ல முறையில் தயாரிக்கிறோம்.

COTTON
Off: 214, 221 & 412
Phone: Res: 310 & 211
Bhavani

UNDARAM SPINNING MILLS

POST BOX No. 25

KOMARAPALAYAM - 638183

(Via) Erode. S. Rly. South India
Leading Exporting Mill in the South

ufacturers of : Carded and Combed Quality Yarns from 10's to 100's counts in hank and cone forms in single and folded

OUR HIGH TWIST YARN A SPECIALITY

ual Capacity : 30,218 Spindles
300 Automatic Power-looms.
ning Capacity : 26,108 Spindles
4,000 Doubling Spindles

Managing Partners :
T.K.K. ANGAPPAN J.C.K. SUNDARAM
J.K.S. MANICKAM
T.K.K. RANGASAMY, B.Tex. (Tex.) J.C.K.A. ARJUNAN

அனைவரிடமும்
எங்களது
மொங்கல் வாழ்த்து

போன்: 208 (சுவாமி) தந்தி : 'பல்லவா'

கந்தசாமி விவிங் பேக்டரி அன் கம்பெனி

தபால் பெட்டி எண் : 33

சேலம் மெயின் ரோடு,

குமாரபாளையம் — 638183.

சேலம் ஜில்லா.

30 ஆண்டுகளாக நல்ல தரமான

டிசைன் ஸ்டேபிள் பைபர்

செக் ஜாக்கிகள்

மற்றும்

அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகக்கூடிய உயர்ந்த துணி ரகங்கள் தயாரிப்பாளர்கள்.

Wrapper Printed by LOTUS OFESET PRESS